# இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள்

## வளர்ச்சியடையாத பொருளாதாரம்

இரண்டாம் உலகப் போர் மற்றும் 1930-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக எல்லா நாடுகளும் தங்களுடைய பொருளாதார வளர்ச்சியினை நிலையாக வைத்திருப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கின. இதனால் பல நாடுகள் வளர்ச்சியடைந்தன. பிற நாடுகள் வளர்ச்சியடையாத நிலையிலேயே உள்ளன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு உதாரணமாகக் கூறலாம். வளர்ச்சியடையாத அல்லது வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தியா, பர்மா, பிரேசில் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

உலகில் உள்ள நாடுகளை 'வளர்ச்சி பெற்ற நாடுகள்' என்றும் 'வளர்ச்சி குறைந்த நாடுகள்' என்றும் இரு பிரிவுகளாகப் பொருளியல் அறிஞர்கள் வகுத்துள்ளனர். ஒரு நாட்டில் மொத்த உற்பத்தியும், தலா வருமானமும், மக்களின் வாழ்க்கைத் தரமும் உச்ச நிலையில் இருந்தால் அந்த நாடு 'வளர்ச்சியடைந்த நாடு' அல்லது 'முன்னேற்றமடைந்த நாடு' என்று அழைக்கப்படுகிறது. மேற்கூறிய மூன்றும் குறைவாக உள்ள நாட்டை 'வளர்ச்சி குறைந்த', அல்லது 'பின்தங்கிய' நாடு என்று அழைக்கப்படுகிறது.

## இந்தியப் பொருளாதாரத்தின் (வளர்ச்சி குறைந்த பொருளாதாரம்) இயல்புகள்

பல நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பொருளாதார ரீதியாக வளர்ச்சி குறைந்த நாடாக இந்தியா காணப்படுகிறது. இயற்கை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தாமை, வறுமை, மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற காரணங்கள் இந்தியாவின் பின்தங்கிய நிலைமைக்கு மிக முக்கியக் காரணங்களாகும். இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகளாவன:

1. **மக்கள் தொகைப் பெருக்கம்:** இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகவும் அதிகமாக உள்ளது. ஆனால், இறப்பு வீதம் குறைவாக காணப்படுகிறது. இந்தியாவின் மக்கள் தொகை ஆண்டு



ஒன்றுக்கு 2.1 சதவீதம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு கிடைக்காததால் வறுமை ஏற்படுகிறது. பெருகிவரும் உழைப்பாளிகள் தேவைக்கும் அதிகமாக இருப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகி பெரும் பிரச்சினைகள் ஏற்படுகிறது. மேலும், மக்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம், மற்றும் இதர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசின் செலவும் அதிகரிக்கிறது.

2. **குறைந்த தலா (தனி நபர்) வருமானம்:** ஒரு நாட்டின் மொத்த வருமானத்தை அந்நாட்டில் மொத்த மக்கள் தொகை கொண்டு வகுத்தால் தலா வருமானம் கிடைக்கும். தலா வருமானம் (தனி நபர் வருமானம்) மிக அதிகமாக இருப்பின் அதனை வளர்ச்சியடைந்த நாடு என்றும், குறைவாக இருப்பின் வளர்ச்சி குறைந்த நாடு என்றும் அழைக்கிறோம். 1993-ம் ஆண்டு இந்தியர் ஒருவரின் வருமானம் 300 டாலர்கள் மட்டுமே. ஆனால், இது சுவிட்சர்லாந்தில் 31,760 டாலராகவும், அமெரிக்காவில் 24,740 டாலராகவும், ஜப்பானில் 31,490 டாலராகவும், இங்கிலாந்தில் 18,060 டாலராகவும் உள்ளது. இந்தியாவில் தலா வருமானம் குறைவாக உள்ளதால், வாழ்க்கைத் தரம் குறைவாகவே உள்ளது.

3. **வறுமை:** இந்தியாவில் 38 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. குறைவான தலா வருமானம், இதற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. மக்கள் உட்கொள்கின்ற உணவின் அடிப்படையில்தான் வறுமை நிலை அளவிடப்படுகின்றது. ஒரு தனி மனிதன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய கலோரிகள், கிராமப் புறங்களில் வாழ்பவர்களுக்கு 2400 கலோரிகள் எனவும், நகர் புறங்களில் வாழ்பவர்களுக்கு 2100 கலோரிகள் எனவும் கணிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு வாங்கும் சக்திக் குறைவாக இருப்பதால், அவர்கள் தங்களுக்குத் தேவையான கலோரிகளையுடைய பொருட்களை வாங்க முடியவில்லை, இதனால் உழைக்கும் திறன் குறைகிறது.

4. **வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம்:** இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் கிராமங்களில் வாழ்கின்றனர். இவர்களின் முக்கியத் தொழில் வேளாண்மை ஆகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆனால், இந்தியாவில்

பாடம் – 10

# வேளாண்மை நிதி

## முகவுரை

வேளாண்மை உற்பத்தித் திறனுக்கும், வேளாண்மை நிதிக்கும் தொடர்பு உண்டு என்பதில் ஐயமில்லை. வேளாண்மை உற்பத்திக்கு நிதி உதவி மிகவும் இன்றியமையாததாகும். வேளாண்மை இடு பொருட்களான, உயர்ரக விதைகள், இரசாயன உரங்கள் போன்றவை உபயோகிக்க நிதி உதவி மிகவும் அவசியமாகும். மட்டுமல்லாமல் கிணறு வெட்ட, வேலி போட, நிலத்தைப் பண்படுத்த நிதி உதவி விவசாயிக்கு இன்றியமையாததாகும். இதனை உற்பத்திக் கடன் என்றழைக்கிறோம். வேளாண்மை உற்பத்திக்குத் தவிர வேறுபல காரணங்களுக்காகவும் விவசாயிகள் கடன் வாங்குகின்றனர். இதனை உற்பத்திச் சாரா கடன் என்றழைக்கிறோம். உதாரணமாக, பிறந்த நாள் கொண்டாடுவது, திருமணம், சடங்கு போன்ற காரியங்களுக்குச் செலவழிப்பதாகும். இந்தியாவின் உற்பத்திக் காரியங்களுக்குச் செலவழிக்கும் தொகையை விட உற்பத்திச் சாரா காரியங்களுக்குச் செலவிடும் தொகை மிகவும் அதிகமாக உள்ளது.

## கடன் வகைகள்

காலத்தின் அடிப்படையிலும் காரணத்தின் அடிப்படையிலும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடனை, குறுகியக் காலக் கடன், நடுத்தரக் கடன், நீண்டக் காலக் கடன் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

குறுகிய காலக் கடன், நடப்புச் சாகுபடிக்குத் தேவையான உள்ளீடுகளை வாங்குவதற்கு முக்கியமாகத் தரப்படுகிறது. இக்கடன் அறுவடை முடிந்தவுடனோ அல்லது 15 மாத காலத்திற்குள்ளாகவோ திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். நடுத்தரக் கடன், வேளாண்மை இயந்திரங்கள், கால்நடைகள் வாங்குவது, நில அபிவிருத்தி, நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவது போன்ற காரணங்களுக்காக வழங்கப்படுகிறது. இது 15 மாதங்களுக்கு மேல் ஆனால் 5 வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். நீண்டகாலக்கடன் புதிய நிலம் வாங்கவும் விலையுயர்ந்த இயந்திரங்களை வாங்கவும் போன்ற காரணங்களுக்காக வழங்கப்படுகிறது.



இக்கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய அதிக பட்ச காலம் 20 ஆண்டுகள் ஆகும்.

## வேளாண்மை நிதியின் இயல்புகள்

1. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்கு வேண்டிய நிதி உதவியைச் செய்து கொடுக்க வேண்டும்.
2. விவசாயம் செய்வதினால் குறைந்த வருமானமே விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. எனவே குறைந்த வட்டிக்கு அவர்களுக்கு கடன் கொடுக்கப்பட வேண்டும்.
3. விவசாயிகளில் பெரும்பாலோனோர், கல்வி அறிவு பெறாதவர்கள். எனவே, எளிதாகக் கடன் பெறும் வசதிகளைச் செய்து கடன் நிபந்தனைகளையும் எளிதாக்க வேண்டும்.
4. விவசாயிகளுக்கு காலத்தின் மற்றும் காரணத்தின் அடிப்படையில் குறுகிய, நடுத்தர, நீண்டகாலக் கடன்கள் அவசியப்படுகின்றன.
5. விவசாயிகளுக்குக் காலம் பொன் போன்றது. எனவே கடன் கொடுப்பதில் கால தாமதத்தைத் தவிர்க்க வேண்டும்.
6. கடன் தொகையை அறுவடைக்குப் பின் செலுத்தும் வசதியும் எளிய தவணைகளில் செலுத்தும் வசதியை ஏற்படுத்த வேண்டும்.
7. மழையின்மை, வெள்ளம், வறட்சி, போன்ற இயற்கைக் காரணங்களால் விவசாயம் பாதிக்கப்படும் பொழுது வட்டியையும் மற்றும் அசலில் ஒரு பகுதியையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

## கிராமக் கடன்களுக்கான காரணங்கள்

இந்தியாவில் கிராமத்தில் வாழும் மக்களின் கடன் சுமைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. இதனால் அவர்களுடைய உற்பத்தித் திறன் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இந்தியாவில் விவசாயிகளின் கடன் சுமைக்கான காரணங்கள் பின்வருமாறு:

1. வேளாண்மையிலிருந்து கிடைக்கும் வருமானம் விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லை. இதனால் அவர்கள் கடன் வாங்குகிறார்கள்.



2. சமுதாயச் சடங்குகள், நிலவரி செலுத்துதல் போன்ற காரணங்களுக்காகவும் கடன் வாங்குகின்றனர்.
3. மழை வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் அவர்கள் வருமானம் குறைந்து கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படுகிறது.
4. கிராமங்களில் லேவாதேவிக்காரர்கள் வட்டிக்கு வட்டி போடுவதால் கடன் வாங்குபவர்கள், கடனில் இருந்து மீள்வது மிகவும் கடினம்.
5. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்காததால் செலவை விட வருமானம் குறைவாகக் கிடைக்கிறது. இதனால் கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படுகிறது.
6. மூதாதையர் விட்டுச் சென்ற கடனையும் அடைக்க வேண்டியிருப்பதால் கடன் சுமை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

## வேளாண்மை நிதி கிடைக்கும் வழிகள்

வேளாண்மை நிதி இரண்டு முக்கிய வழிகள் மூலமாகப் பெறப்படுகின்றன. அவையாவன: 1) அமைப்பற்ற நிதி நிறுவனங்கள், 2) அமைப்புடைய நிதி நிறுவனங்கள். அமைப்பற்ற நிதி நிறுவனங்களில் லேவாதேவிக்காரர்கள், நிலக்கிழார்கள், வணிகர்கள் மற்றும் தரகர்கள், உறவினர்கள் ஆகியோர் அடங்குவர். கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வணிக வங்கிகள், வட்டார கிராம வங்கிகள், தேசிய வேளாண்மை கிராம முன்னேற்ற வங்கி ஆகியவை அமைப்புடைய நிதி நிறுவனங்களில் அடங்கும்.

## அமைப்பற்ற வேளாண்மை நிதி நிறுவனங்கள்

விவசாயிகளுக்கு, குறிப்பாக கிராமங்களில் அதிக அளவில் கடன் வழங்குபவர்கள் லேவாதேவிக்காரர்கள் ஆவர். விவசாயிகள் கடனுக்காக இவர்களையே அதிகம் நம்பி உள்ளனர். இதற்கு முக்கியக் காரணங்கள்: அ) கடன் பெறுவதில் சிக்கலான வழிமுறைகள் இல்லை. ஆ) தங்க ஆபரணங்களுக்கு ஈடாக, வணிக வங்கிகளைக் காட்டிலும் அதிகப் பணம் தருகின்றனர். இ) விவசாயிகளுக்கும் லேவாதேவிக்காரர்களுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. ஈ) பத்திரங்களின் அடமானம் வைத்தும் பணம் பெற்றுக் கொள்கின்றனர்.



லேவாதேவிக்காரர்களின் நியாயமற்றப் போக்கினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அ) வங்கிகளைக் காட்டிலும் பலமடங்கு வட்டியை வசூலிக்கின்றனர். ஆ) கிராம மக்களின் கல்வியறிவின்மையைப் பயன்படுத்திக் கடன் பத்திரங்களில் அதிக அசல் தொகையைக் குறித்துக் கொள்கின்றனர். இ) வட்டிக்கு வட்டி வசூலிக்கின்றனர். ஈ) அநியாய வட்டியினால் தங்க நகைகள் இவர்களிடமே தங்கி விடுகின்றன.

நிலச்சுவான்தாரர்களிடம் இருந்தும் விவசாயிகள் கடன் பெறுகின்றனர். தங்கள் நிலப்பத்திரங்களை அடமானமாக வைத்துக் கடன் பெறுகின்றனர். வட்டியையும் அசலையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் தங்கள் நிலங்களை இழக்கின்றனர். வணிகர்கள் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன்கள் கொடுக்கின்றனர். பயிர் செய்ய ஆரம்பிக்கும் போது கடன் கொடுத்து அறுவடை சமயத்தில், விளைபொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அரசாங்க நடவடிக்கையினாலும், வணிக வங்கிகள் குறைந்த வட்டியில் கடன் கொடுக்க முன் வந்ததாலும் வேளாண்மைக் கடனில், அமைப்பற்ற நிதி நிறுவனங்களின் பங்கு வெகுவாகக் குறைந்துள்ளது. 1951-52ம் ஆண்டின் நிலவரப்படி இவற்றின் பங்கு 90 சதவீதமாக இருந்தது. 1991-92இல் 29 சதவீதமாகக் குறைந்துள்ளது.

## அமைப்புடைய வேளாண்மை நிதி நிறுவனங்கள்

**1. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள்:** அமைப்பற்ற நிதி நிறுவனங்களின் நியாயமற்ற நடவடிக்கைகளின் காரணமாகக் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் விவசாயக் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியாவில் கூட்டுறவு அமைப்பு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வேளாண்மைக்குத் தேவையான குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன்களைக் கொடுக்க மூன்றடுக்கு அமைப்புக் கொண்ட கூட்டுறவு துறை அமைக்கப்பட்டுள்ளது. இதில் மாநில கூட்டுறவு வங்கி மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளடங்கும். நீண்டகாலக் கடனைக் கொடுக்க இரண்டடுக்கு அமைப்பு உள்ளது. இதில், மாநில கூட்டுறவு நிலவள வங்கியும் தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கியும் அடங்கும்.

### அ. தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

தொடக்கக் கூட்டுறவு கடன் சங்கங்கள் கிராமங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்நிறுவனத்துடன் விவசாயிகள் நேரடி

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்ப நலத்துறைக்கு ரூ 2831 கோடி ஒதுக்கப்பட்டது. குடும்ப நலத்திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்ற அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இக்காலத்தில் 71.7 லட்சம் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டன; 17.4 லட்சம் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்துறைக்கு ரூ. 3267 கோடி ஒதுக்கப்பட்டது. 1995 இல் பிறப்பு வீதத்தை 1000 க்கு 29 ஆகக் குறைக்க திட்டமிடப்பட்டது. 310 லட்சம் நபர்களுக்கு அறுவை சிகிச்சை அளிக்கவும், 213 லட்சம் கருத்தடை வளையங்கள் பொருத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

### செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகள்

இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் பிறப்பு விகிதம் கணிசமான அளவுக்குக் குறையவில்லை. இந்நூற்றாண்டின் இறுதியில் மக்கள் தொகை 100 கோடியைத் தாண்டும் நிலை உள்ளது. அரசின் செயல்பாட்டில் காணப்படும் பின்வரும் குறைபாடுகளைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1. கருத்தடைச் சாதனங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து, சலுகை விலையில் அளிப்பதன் மூலம் பிறப்பு வீதத்தைக் குறைத்து விட முடியாது. மக்களின் வறுமையை விரட்டினால் மட்டுமே இவ்வீதம் குறையும்.
2. கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாததால் சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படவில்லை. சீனாவில் உள்ளது போல 'குடும்பத்திற்கு ஒரு குழந்தை' என்ற கொள்கைக் குரல் இந்தியாவிலும் எழுப்பப்பட வேண்டும்.
3. அவசர நிலைப் பிரகடன காலத்தில் (1976-77) குடும்பக் கட்டுப்பாடு கட்டாயப்படுத்தப்பட்டதால் இதன் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. எனவே எந்நிலையிலும் கட்டாயமுறை கூடாது. தாங்களே மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் மக்களுக்கு மிகப்பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.
4. குடும்ப நலத்திட்டங்களை ஏற்றுக்கொள்வோருக்குக் கொடுக்கப்படும் ரொக்கத் தொகை, சலுகைகள் போதுமானதாக இல்லை. எனவே இவற்றை அதிகரிக்க வேண்டும்.
5. பிறநாடுகளில் கடைப்பிடிக்கப்படும் குடும்ப நலத்திட்டங்கள், நம் நாட்டில் அப்படியே பின்பற்றப்படுகிறது. இது தவறாகும். நம் மக்களுக்கும், நமது தட்ப வெப்ப நிலைக்கும் ஏற்ற முறைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

### முக்கிய நோக்கங்கள்

குடும்பத்தின் சராசரி அளவு 4.2 குழந்தைகளிலிருந்து 2.3 குழந்தைகளாகக் குறைக்கப்பட வேண்டும். 1978ல் 1000க்கு 33 நபர்களாக இருந்த பிறப்பு வீதத்தை 1995ல் 1000க்கு 21ஆகக் குறைத்தல். 1978ல் 1000க்கு 14 நபர்களாக இருந்த இறப்பு வீதத்தை 9ஆகக் குறைத்தல். மேலும் குழந்தை இறப்பு வீதத்தை 1000க்கு 129லிருந்து 60ஆக அல்லது அதற்குக் குறைவாக குறைத்தல். பிள்ளைப்பேறு தகுதியுடைய கணவன் - மனைவிகளில் தற்போது குடும்ப நலத் திட்டத்தால் 24 விழுக்காட்டினர் மட்டுமே பயன்பெறுவதை இந்த நூற்றாண்டின் இறுதியில் 60 விழுக்காடாக உயர்த்துதல். இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் மக்கள் தொகை 900 மில்லியன்களாக இருக்கும். அது 2050 ஆம் ஆண்டு வாக்கில் 1200 மில்லியன்களில் நிலைத்திருக்கும். 22 மில்லியன் கருத்தடை அறுவை சிகிச்சைகளும் 7.9 மில்லியன் லூப் பொருத்துதலும் மேற்கொள்ளப்படும். கட்டாயப் படுத்துதலைத் தவிர்த்து தன்னிச்சை முறைகளைச் சார்ந்திருத்தல். ஆறாம் திட்டத்தின் இடைக்கால மதிப்பீடு 1981 ஆம் ஆண்டு வாக்கில் இந்தியாவின் மக்கள் தொகை திட்ட நகலில் (நிபுணர் குழு பரிந்துரை அடிப்படையில்) குறிப்பிடப்பட்ட எடுகோளினை விட 13.2 மில்லியன் அதிகமாயிருந்தது எனக் கூறுகிறது. மிகையான தன்னம்பிக்கையின் அடிப்படையில் நிபுணர் குழுவின் மதிப்பீடு அமைந்திருந்தது என 1981ஆம் ஆண்டு மக்கள் கணிப்பு முடிவுகள் எடுத்துக் காட்டின. எனவே, இதனைச் சுகாதார அமைச்சகம் மறு பரிசீலனை செய்ய வேண்டியதாயிற்று. அதனால், கருத்தடை அறுவைச் சிகிச்சைகளின் இலக்கு 24 மில்லியனாக உயர்த்தப்பட்டது. கருத்தடை மாத்திரை மற்றும் சாதனங்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 11 மில்லியனாக உயர்த்தப்பட்டது. எனினும் மார்ச் 1993 இல் கருத்தடை அறுவை சிகிச்சைகளின் சாதனை 8.8 மில்லியன். லூப் பொருத்துதலில் மார்ச்சு 1983இல் 2.4 மில்லியன் அளவே சாதிக்க



முடிந்தது. கருத்தடை மாத்திரை மற்றும் சாதனங்களைப் பயன்படுத்துவோர் 1982-83ல் 25.9 விழுக்காட்டினராக இருந்தனர். திட்டக்குழுவின் இடைக்கால மதிப்பீடு ஆரம்ப சுகாதார மையங்களை ஏற்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

### பொது நடவடிக்கைகள்

1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் பெண்களின் சராசரி திருமண வயது அதிகரித்துள்ளது. அதாவது 19, 18, 17, 16 ஆண்டாக இருந்த சராசரி திருமண வயது 1981ல் 32 ஆண்டாக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் 15-19 வயதுப் பிரிவில் உள்ள திருமணம் செய்த பெண்களின் விகிதம் குறைவதேயாகும். 15-19 வயதுப் பிரிவில் உள்ள மொத்த பெண்களில் திருமணமான பெண்களின் விகிதம் 1971ல் 55.41 விழுக்காட்டிலிருந்து 1981ல் 43.47 விழுக்காடாகக் குறைந்தது குறிப்பிடத்தக்கதாகும். அதே சமயம் 20-24 வயதுப் பிரிவில் இது 88.83 விழுக்காட்டிலிருந்து 88.44 விழுக்காடாக மிக சொற்ப அளவுக்கே குறைந்துள்ளது. இந்தியாவில் கேரளா, குஜராத் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் சராசரி திருமண வயதைச் சிறப்பாக அதிகரிக்க முடிந்ததற்குக் காரணம் அம்மாநிலங்களில் கற்றறிந்தவர் விழுக்காடு அதிகரித்ததேயாகும். ஒரு மக்களாட்சி உள்ள நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த கட்டாய முறைகளை விட தன்னிச்சையான தூண்டுதல்களே சிறந்தவை. ஏனெனில் கட்டாய முறைகள் கலாச்சார மற்றும் மனித மாண்புகளை அழிப்பதோடு மட்டுமல்லாமல் இறுதியில் சமுதாய இயக்கமாக உள்ள மாண்புகளை அழிப்பதோடு மட்டுமல்லாமல் இறுதியில் சமுதாய இயக்கமாக உள்ள குடும்ப நலத் திட்டத்தினையே அழித்துவிடும். 1975-77 ஆம் ஆண்டுகளில் நிலவிய நெருக்கடி நிலையின் போது கட்டாயத்தன்மையால் குடும்ப நலத் திட்ட இலக்குகளைப் பின்பு அடைய முடியாமல் போனது. கட்டாயத்தன்மையின் தீய விளைவுகளை நன்கு உணர்த்தியது.

பொருளாதார வளர்ச்சியும் மக்கள் தொகையும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவையாகக் கருதப்படக்கூடாது. அவை இரண்டும் சமுதாய மேம்பாட்டு முறையின் ஒருமித்த அடிப்படை எனக் கருதவேண்டும். எனவே, வறுமை குறைப்புத் திட்டங்கள் குடும்ப நலத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுச் செயல்படுத்தப் படவேண்டும். அப்போது மக்கள் மிகுந்த விருப்பத்துடன் சிறு குடும்ப நெறியைப் பின்பற்ற முன்வருவார்கள். மத்திய மற்றும் மாநில அரசுகள் ஏழை மக்களை



உதவாக்கரைகளாக அல்லது பொறுப்பற்றவர்களாகக் கருதமுடியாது. ஏனெனில் இவ்வரசுகள் கட்டாய தொடக்கக் கல்வி, முதியோர் கல்வி, வறுமை மற்றும் வேலையின்மை ஒழிப்பு மற்றும் சமதர்ம சமுதாயம் உருவாக்கல் போன்ற சமுதாயக் குறிக்கோள்களை நிறைவேற்றவில்லை. சிறு குடும்ப நெறி அவசியம் பற்றிய சமுதாய விழிப்புணர்ச்சியை மக்கள் முதலில் பெற்றாக வேண்டும். இச்சமுதாய விழிப்புணர்ச்சியானது மக்களின் சமுதாய மற்றும் உளவியல் சார்ந்த நோக்குகளில் மாற்றம் ஏற்பட்டால்தான் தோன்றும். அதற்கு அதிக கல்வியறிவு வீதம் நிச்சயம் உதவியாக இருக்கும். எனவே, கல்வியறிவற்றவர்களைத் தீவிரமாக குறைப்பதும் ஓர் இன்றியமையாத தேவையாக உள்ளது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கேரளா மாநிலத்தைக் குறிப்பிடலாம். மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்ப நலத்திட்டத்தின் மீதான குழுவின் கூற்றின்படி குடும்ப நலத் திட்டம் ஒரு மருத்துவப் பிரச்சினையல்ல. அது ஒரு சமுதாய மற்றும் உளவியல் பிரச்சினையாகும். அதற்குரிய தீர்வினைக்காண பொருளியலறிஞர்கள், மருத்துவர்கள், உயிரியல் வல்லுநர்கள், உளவியல் அறிஞர்கள் வாழ்வியல் அறிஞர்கள், மக்கள் கல்வி தொடர்பாளர்கள், வட்டாரத் தலைவர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் ஆகியோரின் செயல் திறனுள்ள ஒத்துழைப்பு அவசியம்.

### மக்கள் தொகை வளர்ச்சியின் விளைவுகள்

எந்த ஒரு நாடும் பொருளாதார வளர்ச்சி அடைய அந்நாட்டின் இயற்கை வளங்களை அந்நாட்டு தொழிலாளர்கள் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும். எனவே, பொருளாதார வளர்ச்சியை அடைய தொழிலாளர் வர்க்கம் ஓர் அரும்பணி ஆற்றுகிறது. அதே சமயம் மிக விரைவாக வளரும் மக்கள் தொகை அப்பொருளாதார வளர்ச்சியைத் தடுத்து நாட்டின் பொதுவான முன்னேற்றத்தை குறைக்கிறது. அத்துடன் இதர பல பிரச்சினைகளையும் உருவாக்கி விடுகின்றது. 1950-51ல் இருந்து 1980-81 வரை உள்ள 30 ஆண்டுகளில் நிகர தேசிய உற்பத்தி (1970-71 விலைகளில்) 183 விழுக்காடு அதிகரித்து உள்ளது. ஆனால், மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக தனி நபர் நிகர தேசிய உற்பத்தி 50 விழுக்காடு மட்டுமே அதிகரித்தது. தேசிய வருமானத்தின் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் 3.4 விழுக்காடாகவும், தலா வருமானத்தின் வளர்ச்சி வீதம் 1.3 விழுக்காடாகவும் இருந்தன. தேசிய வருமானத்தின் உத்தம அளவு அதிகரிப்பு 7.5 விழுக்காடாக இருக்க வேண்டும். மக்கள் தொகை வளர்ச்சி வீதம் குறையுமானால் தலா வருமானத்தின் நிகர அதிகரிப்பு வீதமானது கூடும். நமது நாட்டில் தனி நபர் சராசரி சேமிப்பும் நிலைப்பகுதியானது குறைந்து கொண்டே

அளப்பதற்கு நாட்டு வருவாய் மற்றும் தனி நபர் வருவாய் சிறந்த அளவு கோல்கள் அல்ல என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது

**நாட்டு வருவாய்க் கணிப்பின் பயன்கள்**

1. நாட்டின் பொருளாதார அமைப்பையும், அதில் பல்வேறு துறைகளின் பங்கையும் அறிய முடியும்
2. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிய உதவுகிறது
3. நாட்டு வளர்ச்சிக்குத் திட்டமிடுவதற்கு தேசிய வருவாய்ப் புள்ளி விவரங்கள் துணை செய்கின்றன
4. நாட்டின் பல்வேறு பொருளாதாரத் துறைகளின் வருவாயைக் கணக்கிட்டு ஒப்பிட முடியும்
5. வாணிப நிலையின் போக்கை அறியலாம்
6. பண வீக்கம், பண வாட்டம் ஆகிய நிலைகளை அறிய தேசிய வருவாய்ப் புள்ளி விவரங்கள் துணை செய்கின்றன
7. அரசின் பல்வேறு செலவினங்கள் பற்றி ஆராய முடியும்

**முடிவுரை**

பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்தியாவின் தேசிய வருமான வளர்ச்சி வீதம் மிகவும் குறைவாகவே உள்ளது. தேசிய வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிகவும் பாதித்துள்ளது. தேசிய வருமான வளர்ச்சியின் மந்த நிலைக்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றில் மக்கள் தொகை வேகமாக அதிகரித்தல், வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் உற்பத்திக் குறைவு, முதலீடு செய்வதில் மந்த நிலை போன்றவைகளாகும். தேசிய வருமானம் பெருக வேண்டுமாயின், மிக வேக மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்கு அரசு பொருத்தமான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். மேலும் வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் உற்பத்தி வளம் பெருகுவதற்கு ஆவன செய்ய வேண்டும். பல்வேறு பொருளாதாரத் துறைகளில் முதலீடு செய்வதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும். நாட்டின் புகழ் நிலை, நாட்டின் மொத்த வருமானத்தையும் தலா வருமானத்தையும் சார்ந்திருப்பதால், தேசிய வருமான வளத்தைப் பெருக்குவதற்கு அரசு சிறப்பு மிக்க அதிரடி நடவடிக்கைகளைக் கையாளுவது உடனடித் தேவையாகும்.



**கேள்விகள்**

1. தேசிய வருமானம் என்றால் என்ன? தேசிய வருமானத்தைக் கணிக்கும் முறைகளையும், அதிலுள்ள சிக்கல்களையும் விளக்குக.
2. தேசிய வருமானத்தைக் கணிக்கும் முறைகளை எழுதுக. தேசிய வருமானத்தின் வளர்ச்சியினை விளக்குக.



பாடம் – 4

# மூலதன ஆக்கம்

**முகவுரை**

பொருளாதார வளர்ச்சிக்கு மூலதன ஆக்கம் இன்றியமையாத ஒன்றாகும். பெரும்பாலான நாடுகளின் வளர்ச்சியின்மைக்கு மூலதன ஆக்கத்தில் பின்தங்கிய நிலையே காரணமாகும். மூலதனத்தின் இருப்பில் ஏற்படும் மாற்றத்தை மூலதன ஆக்கம் என்கிறோம். நிலையான மூலதன ஆக்கம், கட்டிடங்கள், இயந்திரங்கள், கருவிகள், செய்தித் தொடர்பு, போக்குவரத்து போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. நிலையான மூலதன ஆக்கம் இந்தியா போன்ற வளர்ச்சியடையா நாடுகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. டாக்டர் சிங்கர் என்பவர், மூலதன ஆக்கத்தில் இயந்திரங்கள், கருவிகள் போன்ற புலனாகக் கூடிய இனங்களும், கல்வி, சுகாதாரம், அறிவியல் ஆராய்ச்சி போன்ற புலனாகாத இனங்களும் அடங்கும் என்கிறார். கட்டிடங்கள், இயந்திரங்கள், கருவிகள் போன்றவற்றை உருவாக்குவதற்கு அதிக அளவு நிதி தேவைப்படுகிறது. அதற்கு ஏற்ற நிலையை அந்நாட்டில் உள்ள மக்கள் அதிக அளவு சேமித்தால் மட்டுமே உருவாக்க முடியும்.

**மொத்த மூலதன ஆக்கமும், நிகர மூலதன ஆக்கமும்**

மொத்த மூலதன ஆக்கத்தில் இருந்து தேய்மானத்தைக் கழிக்காத நிலை மொத்த மூலதன ஆக்கம் (Gross Capital Formation) எனப்படும். மொத்த மூலதன ஆக்கத்திலிருந்து தேய்மானத்தைக் கழிப்பதிலிருந்து கிடைப்பது நிகர மூலதன ஆக்கம் ஆகும்.

**மூலதன ஆக்கத்தின் முக்கியத்துவம்**

1. மூலதன ஆக்கத்தை அதிகரிப்பதின் மூலம் பெருமளவுத் தொழில்களைத் தொடங்கி உற்பத்தியைப் பெருக்குவதுடன் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் முடிகிறது.
2. அயல் நாட்டுச் செலுத்து நிலைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு மூலதன ஆக்கம் பெருமளவில் உதவுகிறது. ஏற்றுமதியை அதிகப்படுத்த தேவையான மூலதனத்தை உள்நாட்டிலேயே பெருக்குவதின் மூலம் பாதக நிலையிலுள்ள செலுத்து நிலையைத் தவிர்க்க முடியும்.



3. உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள், கருவிகள் போன்றவற்றை உருவாக்க மூலதன ஆக்கம் இன்றியமையாததாகும்.
4. மூலதன ஆக்கம், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பெருமளவில் உதவுகின்றது.
5. மூலதன ஆக்கத்தை அதிகரிப்பதின் மூலம் அங்காடியை விரிவுபடுத்த முடிகிறது.
6. தேசிய வருமானத்தை அதிகரிக்க மூலதன ஆக்கம் பெருமளவில் உதவுகின்றது.
7. பெருகிவரும் மக்கள் தொகையின் அத்தியாவசிய தேவையைச் சந்திக்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மூலதன ஆக்கம் மிகவும் அவசியமாகும்.

**மூலதன ஆக்கத்தை அளவிடும் முறைகள்**

மூலதன ஆக்கத்தை அளவிட நான்கு முறைகள் கையாளப்படுகின்றன. அவையாவன:

1. பண்டங்கள் ஓட்டம் முறை
2. செலவின முறை
3. மூலப் பொருட்களின் வெளிப்படையான அளவில் மாற்றத்தை அளவிடுதல்
4. மொத்த சேமிப்பு முறை

1. **பண்டங்கள் ஓட்ட முறை**: இம் முறையானது பலவகை காரணிகளான உற்பத்தி மதிப்பு, இறக்குமதி, வாணிபம், போக்குவரத்து, ஏற்றுமதி முதலியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்கிறது. இவ்வகையான அளவிடும் முறை மூலதன ஆக்கத்தை இனவாரியாகப் பிரிப்பதற்கு உதவி செய்கிறது.

2. **செலவின முறை**: செலவின முறையின்படி, வெளிப்படையான சொத்துக்களுக்காக ஆகும் மூலதன செலவின அடிப்படையில் மூலதன ஆக்கம் அளவிடப்படுகிறது.

3. **மூலப்பொருட்களின் வெளிப்படையான அளவில் மாற்றத்தை அளவிடுதல்**: இந்த முறையின்படி பல வகையான வெளிப்படையான சொத்துக்களின் இருப்பினை மதிப்பீடு செய்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவைகளில் ஏற்படும் நிகர மாற்றம் அளவிடப்படுகிறது.

மூலதன ஆக்கத்தை அளவிடும் முறைகளிலேயே, இம்முறை சிறந்த முறையாக கருதப்படுகிறது.

4. **மொத்த சேமிப்பு முறை:** பொருளாதாரத்தின் பல துறைகளிலும் உள்ள சொத்துக்கள் மற்றும் கடன்களில் ஏற்படும் நிகர மாற்றத்தை இம்முறையின் மூலம் **கணக்கிடப்படுகிறது**.

## இந்தியாவின் மூலதன ஆக்கம்

இந்தியாவில் மூலதன ஆக்கம் ஆரம்பகாலம் தொட்டே வளர்ச்சியடைந்து வந்துள்ளது. கடந்த காலங்களில் நிலையான மூலதன ஆக்கத்தின் நிலை அவ்வளவாக உயர்வு பெறவில்லை. அதாவது கட்டிடங்கள், இயந்திரங்கள், கருவிகள் போன்ற நிலையான மூலதன ஆக்கங்களின் பெருக்கம் விரும்பத்தக்க அளவில் இல்லை. சில சமயங்களில் சேமிப்பில் ஏற்பட்ட அளவிற்கு முதலீடுகள் இல்லாமற்போயிற்று. ஐந்தாண்டு திட்ட காலங்களில் நிகர மூலதன ஆக்கத்தினை கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். நிகர உள்நாட்டு உற்பத்தியின் நிலவரப்படி நிகர மூலதன ஆக்கம் இந்தியாவில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 8 சதவீதமாக இருந்தது. பின்பு 1965-66 ஆம் ஆண்டில் 13.8 சதவீதமாக இருந்தது. 1968-69ல் 10.8 சதவீதமாக குறைந்தது. பின்பு ஐந்தாவது திட்ட காலத்தில் 20.1 சதவீதமாக அதிகரித்தது. ஆனால் தொடர்ந்து ஆறாம் மற்றும் ஏழாவது திட்டக் காலத்தில் முறையே 12.5, 13.9 என இருந்தது.

## இந்தியாவில் மூலதன ஆக்கம் குறைவாக இருப்பதற்கான காரணங்கள்

1. **மக்கள் தொகை பெருக்கம்:** மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக அவர்களின் தேவையும், செலவும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனால் மக்கள் சேமிக்கும் திறனும் பாதிக்கப்படுகிறது. மேலும், அந்நிய செலாவணியில் பெரும்பகுதி உணவுப் பொருட்கள் இறக்குமதிக்காக செலவழிக்கப்படுகிறது. இதனால் மூலதன ஆக்கம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது.

2. **பொதுத்துறை நிறுவனங்களின் தோல்வி:** பொதுத்துறை நிறுவனங்கள் பெரும்பாலும் நஷ்டத்திலேயே இயங்கி வருகின்றன. பொதுத்துறை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறைவான லாபத்திற்கோ அல்லது லாபம் இல்லாமல் மக்களுக்கு வழங்கப்படுவதால், மேலும், மேலும் நஷ்டத்தில் இயங்க வாய்ப்பு



உள்ளது. பொதுத்துறை நிறுவனங்களின் தோல்வி, மூலதன ஆக்கத்தை பெரிதும் பாதிக்கிறது.

3. **மக்களின் சேமிக்கும் திறன் குறைவு:** இந்தியாவில் மக்களின் வருமானம் குறைவாக இருப்பதால் அவர்களின் சேமிக்கும் திறன் மிகவும் குறைவாக உள்ளது. குறிப்பாக விவசாயிகளின் வருமானம் மிகக் குறைவாக உள்ளது.

4. **அரசியலின் நிலையற்ற தன்மை:** இந்தியாவில் அரசியலின் போக்கு மூலதன ஆக்கத்தின் பின்னடைவுக்கு ஒரு முக்கியக் காரணமாகும். நிலையற்ற அரசு, உறுதியற்ற பொருளாதாரக் கொள்கை, அயல்நாட்டுக் கொள்கை ஆகியவற்றால் மூலதன ஆக்கம் குறைவாக உள்ளது.

5. **ஐந்தாண்டு திட்டத்தின் குறைபாடுகள்:** ஐந்தாண்டு திட்டங்கள் சரிவர செயல்படாமலும், குறைபுள்ளவைகளாகவும் காணப்பட்டன. இதனால் மூலதன ஆக்கம் குறைவாக உள்ளது.

வளர்ச்சி அடையாத நாடுகள் மூலதனக் குறைவினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆல்கார் லேவிஸ் என்ற பொருளாதார நிபுணர், வளர்ச்சியடையா நாடுகள் தங்கள் பொருளாதார உபரியை மூலதன திரட்சிக்காக உபயோகப்படுத்துவதில்லை. இது பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது. மூலதன ஆக்கத்தை பெருக்குவதில் உள்ள பிரச்சினைகளை தீர்வு செய்ய கீழ்க்கண்ட முறைகளை செயல்படுத்தலாம் என்று ஆல்கார் லேவிஸ் குறிப்பிடுகின்றார்.

## மூலதன ஆக்க குறைவை நிவர்த்தி செய்தல்

1. **அரசியல் சுதந்திரம்:** ஆல்கார் லேவிஸ் குறிப்பிடுகையில் எந்த ஒரு வளர்ச்சியடையா நாடும் மற்ற நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கக் கூடாது. மேலும், தன்னிச்சையாகச் செயல்படும், அரசுகள் தங்கள் பொருளாதார உபரிகளை, உற்பத்தி சாராத காரியங்களுக்காக அவசியம் இல்லாத காரியங்களுக்காக செலவிடுகின்றன. இதனால் மூலதன ஆக்கம் மிகவும் குறைவாக உள்ளது.

2. **பண்டைக் கால உற்பத்தி முறையை மாற்றியமைக்க வேண்டும்:** மூலதன ஆக்கத்தைப் பெருக்க பண்டைக் கால உற்பத்தி முறையை மாற்றி அமைக்க வேண்டும். ஏனென்றால் அதன் மூலம் கிடைக்கும் உபரி மிகவும் குறைவாகவே உள்ளது.



3. **அயல்நாட்டு மூலதன சர்வாதிகாரப் போக்கை தவிர்க்க வேண்டும்:** அயல்நாட்டு மூலதனம் வளர்ச்சியடையா நாடுகளில் முதலீடு செய்யப்படுவதால் மேலும் அந்நாடுகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகள் பலநாடுகளில் முதலீடு செய்துள்ளன, மிகப்பெரிய லாபம் அடைந்தபின் அவைகளை தங்களுடைய நாடுகளுக்கு எடுத்துச் சென்று விடுவதால் பின்தங்கிய நாடுகளின் வளங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. எனவே அயல்நாட்டு மூலதன சர்வாதிகாரப் போக்கை தவிர்க்க வேண்டும்.

4. **வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஏற்படுத்துதல்:** தேவைக்கேற்ப வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களை அதிகமாக்கி மக்களிடமிருந்து சேமிப்பைத் திரட்ட வேண்டும்.

## இந்தியாவில் சேமிப்பும் மூலதன ஆக்கமும்

**முகவுரை:** மூலதன ஆக்கத்திற்கு, சேமிப்பு முக்கியக் கருவியாகப் பயன்படுகிறது. சேமிப்பு அதிகரிக்க அதிகரிக்க மூலதன ஆக்கமும் பெருகி வரும் என்பதில் சந்தேகமில்லை. சேமிப்பை உள்நாட்டிலேயே அதிகரித்து முதலீடு செய்ய நாடுகள் விரும்புகின்றன. பற்றாக்குறை ஏற்படும் நிலையில் அயல்நாட்டு உதவியைப் பெற முயற்சிக்கின்றன. ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டுமானால் சேமிப்பு 20 சதவீதத்திற்கும் குறைவாக இருத்தல் கூடாது.

## உள்நாட்டு சேமிப்பு பெறப்படும் வழிகள்

உள்நாட்டு சேமிப்பு மூன்று முக்கிய வழிகளின் மூலம் பெறப்படுகின்றது.

1. குடும்ப சேமிப்பு, 2. அரசாங்கம் அல்லது பொதுத்துறை சேமிப்பு, 3. தனியார் கூட்டு நிறுவனங்களின் சேமிப்பு.

1. **குடும்ப சேமிப்பு:** குடும்ப சேமிப்பின் மூலம், அதிக சேமிப்பு பெறப்படுகின்றது. நாட்டின் மொத்த சேமிப்பில் ஐந்தில் நான்கு பகுதி குடும்ப மூலம், கிடைக்கப்பெறுகின்றது. 1950-51 முதல் 1987-88 ஆண்டுகள் வரை சேமிப்பின் சராசரி அளவு 293 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பிட்டப்பட்ட ஆண்டுகளில் சேமிப்பின் ஏற்றத்தாழ்வுகளும் காணப்பட்டன.

2. **அரசாங்கம் அல்லது பொதுத்துறையின் சேமிப்பு:** குடும்ப சேமிப்பை தொடர்ந்து அதிக அளவு சேமிப்பை உருவாக்குவது அரசாங்கம் அல்லது பொதுத்துறையாகும். பொதுத்துறை நிறுவனங்களில் இருந்து சேமிப்பு பெறப்படுகின்றன. அரசு சேமிப்பில் ஏற்றத் தாழ்வுகள்



காணப்பட்டன. சில சமயங்களில் சேமிப்பின் வீதம் குறைந்து கொண்டே செல்லும் நிலை ஏற்பட்டது. அரசின் பங்கு 1987-88 இல் 27.84 சதவீதமாக இருந்தது. 1989-90 இல் 8.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.

3. **தனியார் கூட்டு நிறுவனங்களின் சேமிப்பு:** குடும்ப மற்றும் அரசு சேமிப்புகளை விட தனியார் கூட்டு நிறுவனங்களின் சேமிப்பு மிகவும் குறைவாக உள்ளது. இவ்வகையான நிறுவனங்கள் கடன் வாங்கி நடத்துவதால் அவைகளால் அதிகம் சேமிக்க இயலவில்லை. மேலும் பெறப்படுகின்ற லாபங்கள் கடன்களை திரும்பச் செலுத்தவும், மறு முதலீடு செய்யவும், வரிசெலுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் அவைகளின் சேமிக்கும் ஆற்றல் மிகவும் குறைவாக உள்ளது.

1950-51ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த சேமிப்பில் தனியார் கூட்டு நிறுவனங்களின் பங்கு 12.5 சதவீதமாக இருந்தது. 1989-90 இன் நிலவரப்படி 8.71 சதவீதமாக உள்ளது.

**பொதுத்துறை மற்றும் தனியார் துறையின்
மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்**

| வருடங்கள் | ரூபாய் கோடியில் | | |
|---|---|---|---|
| | பொதுத்துறை | தனியார்துறை | மொத்தம் |
| 1960-61 | 4805 | 7543 | 12348 |
| 1970-71 | 6944 | 18928 | 18928 |
| 1980-81 | 11767 | 19113 | 30880 |
| 1990-91 | 21613 | 36577 | 58190 |
| 1994-95 | 21254 | 32209 | 53563 |

ஆதாரம்: ரிசர்வ் வங்கி புல்லட்டின், 1996.

## இந்தியாவில் சேமிப்பின் அளவை அதிகரிக்கும் வழிமுறைகள்

சேமிப்பின் அளவு உயர்ந்தும், மற்றும் குறைந்தும் செல்லும் நிலை உள்ளது. சேமிப்பில் ஏற்படும் குறைவினால் நாட்டின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படுகிறது. சில காரணங்களால் மக்களால் அதிகம் சேமிக்கவும் அல்லது சேமிக்க இயலாமலும் போகும் நிலை உண்டாகின்றது. பொதுவாக, கீழ்க்கண்ட காரணிகளை செயலாக்கம் செய்வதன் மூலம் இந்தியாவில் சேமிப்பின் அளவை அதிகரிக்கலாம்.

கிராமப்புறங்களில் மாற்று வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவுதல் கிராமப்புறங்களில் அதிகரித்து வரும் விவசாயம் சாராத தொழிலாளர்களுக்கும் நகர்ப்புறங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் தேவையான, உபரியான உணவை உற்பத்தி செய்தல்.

அத்துடன், நிலச் சீர்திருத்தம், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உபரி நிலத்தைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிறுவன / அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களிலும் நாட்டின் விவசாய உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் நோக்கம் கொண்டன. இவ்வாறு திட்டமிடுவோர் மிகையான தொழிலாளர்களை விவசாய உற்பத்தித் துறையிலிருந்து மற்ற துறைகளுக்கு மாற்றலாம் என எதிர்பார்த்தனர். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதனால் தொழில் அடிப்படையிலான மக்கள் பகிர்விலும் ஒரு நல்ல மாற்றம் ஏற்படும் எனத் திட்டக்குழு எதிர்பார்த்தது. விரைவான தொழில் மயமாக்குதலின் விளைவாக தொழில் ரீதியான மக்கள் பகிர்வில் எந்தவித சிறப்பான மாற்றமும் ஏற்படவில்லை. அட்டவணையின் படி 1951லும் 1971லும் முதல் நிலைத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களின் விழுக்காடு 72. அது 1981ல் 71 ஆக குறைந்தது. 1951ல் 51 ஆக இருந்த சாகுபடியாளர்களின் விழுக்காடு 1981ல் 42ஆக குறைந்தது. அதே சமயம் விவசாயத் தொழிலாளர்களின் விழுக்காடு 20ல் இருந்து 26ஆக அதிகரித்தது. இது ஒரு வேளை ஒரு சிலர் கையில் நிலம் குவிதலையும் தொழிலாளர்களோடு சேர்தலையும் குறிக்கின்றது. 1951 முதல் உற்பத்தி மற்றும் பணித் துறைகளில் செய்யப்பட்ட பெரும் முதலீடுகள் தொழில் ரீதியான மக்கள் பகிர்வின் எவ்வித விளைவையும் ஏற்படுத்தவில்லை.

1951 முதல் 1971 வரையிலுள்ள காலத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைத் தொழில்களில் 28 விழுக்காடு தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். 1981ல் 28 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாக உயர்ந்தது. 1951 முதல் பொதுவாக முதல்நிலைத் தொழிலிருந்து இரண்டாம், மூன்றாம் நிலைத் தொழில்களுக்குத் தொழிலாளர்கள் பெருமளவில் மாறவே இல்லை எனலாம்.

நமது வேலைவாய்ப்புக் கொள்கையின் தோல்வி, வேளாண்மை சாராத கிராமப்புற வேலை வாய்ப்புகளை உருவாக்காமை நிலச் சீர்திருத்தக் கொள்கை சிறு நில உரிமையாளர்களைப் பரந்த அளவில் உருவாக்காமை, கடன், அங்காடி, மான்ய விலையில் உரம் போன்ற



அரசின் உதவிகள் ஏழை நிலக்கிழார்களுக்கே உதவியுள்ளன. 1951இல் இருந்து 1971 வரை இந்தியாவில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் கிராமப்புற வறுமையிலோ அல்லது வேளாண்மைத் துறையில் வேலைவாய்ப்புப் பங்கிலோ எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. சாகுபடியாளர் மற்றும் விவசாயத் தொழிலாளர் விழுக்காடு 1971 வரை ஒரே மாதிரியாகவும் 70 விழுக்காட்டிற்குச் சிறிதளவு குறைவாகவும் இருந்தது. 1981இல் தான் அது 68 விழுக்காடாகக் குறைந்தது. தொழில் துறையில் சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் பெரிய தொழில்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மூலதனச் செறிவு கொண்ட தொழில்களும், நுகர்வோருக்கான ஆடம்பரப் பொருள் உற்பத்தித் தொழில்களும் மிகச் சிறிதளவே வேலைவாய்ப்பை உருவாக்க முடிந்ததால் தொழில் ரீதியான மக்கள் பகிர்வில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. பேரா. மகலநோபீஸ் தொழில் மயமாக்குதலைப் பெருமளவில் வரவேற்றார். அத்துடன் சிறு மூலதனத்துடன் கூடிய சிறு மற்றும் குடிசைத் தொழில்களை உருவாக்குவதன் மூலம் பேரளவு தொழில்கள் அளிக்கும் வேலைவாய்ப்பை விட ஏறத்தாழ பதினைந்து அல்லது இருபது மடங்குகள் கூடுதலாக வேலைவாய்ப்பை அளிக்க முடியும் என்று பேரா. மகலநோபீஸ் கருத்துரைக்கின்றார். நடைமுறையில் அவ்வாறு சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்குப் போதுமான முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

வேகமாகக் குறைந்து வரும் இறப்பு வீதமும் மற்றும் மிதமாகக் குறைந்து வரும் பிறப்பு வீதமும் மற்ற முக்கியக் காரணங்களாகும். தொழிலாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் சூழலில் வேளாண்மையைச் சார்ந்திருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைப்பது மிகவும் கடினமான பணியாகிவிட்டது. இக்கருத்தானது ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முன் வடிவு அல்லது அணுகுமுறையில் ஒப்புக் கொள்ளப்பட்டது. பேரளவுத் தொழில்களை வளர்க்கும் அதே சமயத்தில் சிறு தொழில்களிலும் உழைப்புச் செறிவு கொண்ட தொழில் நுட்பத்தை வளர்க்காததினால் தொழில் ரீதியான மக்கள் பகிர்வு ஏறத்தாழ ஒரே மாதிரியாக மாறாமலிருந்துள்ளது. எனவே பேரளவுத் தொழில்களைப் பெருக்குவதை விடுத்து விவசாயம் சாராத கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்கும் கிராமப்புற சிறு மற்றும் குடிசைத் தொழில்களை ஏற்படுத்துதல் மிக மிக அவசியமாகும். அத்துடன் மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதும் மிகமிக அவசிய, அவசரத் தேவையாகும்.



மக்களின் தரமானது ஆயுட்காலம் கல்வியறிவு நிலை மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும். இந்திய அரசியலமைப்பின்படி 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 10 ஆண்டுகளில் கட்டாயமாக இலவசக் கல்வி அளிக்க வேண்டியது நமது இந்திய அரசின் கடமை. ஆனால் 1979-80இல் 6 வயது முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் 84 விழுக்காடு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளில் பயின்றனர். 11வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளில் 40 விழுக்காடு ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளில் பயின்றனர். 14 வயது முதல் 17 வயது வரை உள்ள குழந்தைகளில் 21 விழுக்காடு ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளில் பயின்றனர்.

**இந்தியாவின் கல்வியறிவு விழுக்காடு**

| ஆண்டு | கல்வியறிவு விழுக்காடு |
|---|---|
| 1961 | 24 |
| 1971 | 29 |
| 1981 | 36 |
| 1991 | 45 |

மேற்கண்ட அட்டவணை அகில இந்திய அளவில் கல்வியறிவு விழுக்காடு எவ்வளவு என்பதைத் தெளிவாக்குகின்றது.

பெண்களைக் காட்டிலும் ஆண்களே பொதுவாக அதிக எண்ணிக்கையில் / விழுக்காடு படித்துள்ளனர். இதனைக் கீழ்க்காணும் அட்டவணை தெளிவாக்கும்.

| ஆண்டு | கல்வியறிவு விழுக்காடு | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 1951 | - | 7.3 |
| 1961 | 34.00 | 13.0 |
| 1971 | 39.51 | 18.44 |
| 1981 | 46.90 | 24.8 |
| 1991 | 51.10 | 36.5 |

அகில இந்திய அளவில் சராசரி கல்வியறிவு விழுக்காடு 36. அதே சமயம் ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் கல்வியறிவு 100 விழுக்காடு



என்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்நாடுகளை விட நம நாட்டில் கல்வியறிவு விழுக்காடு மிகவும் குறைந்துள்ளது குறிப்பிட வேண்டிய அம்சமாகும். நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் கல்வி கற்றவர் விழுக்காடு குறைவாக உள்ளது. நகர்ப்புறங்களில் ஆண்-பெண் ஆகிய இருபாலரிடையேயுள்ள கல்வியறிவு வீத வேறுபாடு மிகுந்தும் காணப்படுகிறது. எனவே கிராமப்புறங்களில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டங்களை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

1961இல் இந்தியாவில் மக்கள் செறிவு 142. 1981ல் இது 216 ஆக உயர்ந்தது. அதாவது 48.68 விழுக்காடு அளவிற்கு 20 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. மாநிலங்களில் இது சமமற்ற அளவில் பகிர்ந்து காணப்படுகிறது. மக்கள் செறிவு கேரளா, மேற்கு வங்காளம், பீகார், தமிழ்நாடு மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிகமாகவும் மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், ஹிமாசலப்பிரதேசம், நாகாலாந்து போன்ற மாநிலங்களில் குறைவாகவும் காணப்படும். மனித நில விகிதத்தை எடுத்துக் கூறுவதே மக்கள் செறிவு ஆகும். மக்கள் செறிவு கிடைக்கும் இயற்கை வளத்தையும் அதனைப் பயன்படுத்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் அளவையும் பொறுத்ததாகும். ஜப்பான் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 316 நபர்களுடன் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை பெற்றுள்ளது. இதற்கான முக்கிய காரணம் ஜப்பான் தொழில் மயமான நாடாக மாறியிருப்பதே ஆகும். ஆனால், இந்தியாவில் 72 விழுக்காடு மக்கள் தங்கள் வாழ்வுக்கு இன்னும் வேளாண்மையையே நம்பியிருக்கின்றனர். எனவே எந்த ஒரு நாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விரும்பினால் அந்நாட்டில் மனித நில விகிதம் மற்றும் இயற்கை வளங்கள் மிகவும் சாதகமாகவும் அதே சமயம் அவற்றைப் பயன்படுத்த எந்த அளவுக்குத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மேம்பட்ட பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைய முடியும் என்பதையும் பொறுத்ததாகும். வெறும் மக்கள் செறிவு மட்டுமே ஒரு நாட்டின் வறுமையை அல்லது வளமையை எடுத்துக் காட்டும் குறியீடாக இருக்க முடியாது.

**மக்கள் தொகைப் பெருக்கத்திற்கான காரணங்கள்**

**ஏழ்மை:** நம் நாட்டில் எங்கணும் ஏழ்மை நிலவுகின்றது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட தகவின்படி 1977-78ல் 48% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே உழல்கின்றனர். அதிகப்படியான குழந்தைகளால்

வளர்ச்சியின்மையே மிக முக்கியமான காரணமாகும். எனவே வேளாண்மை வளர்ச்சிக்கு இந்தியா முதலிடம் கொடுத்தல் வேண்டும்.

**வேளாண்மை உற்பத்தி**

வேளாண்மையின் விளைபொருட்களை அதிகப்படுத்துவதன் மூலமாக வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சியைக் கணிக்கலாம். இந்தியாவிலே பல விதமான தானியங்கள் விளைகின்றன. வேளாண்மை விளை பொருட்களை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. உணவு தானியங்கள் - பருப்பு வகைகள், தானியங்கள், கோதுமை, நெல், சோளம் முதலியன.
2. உணவு தானியங்களல்லாதவை - எண்ணெய் வித்துக்கள், கரும்பு, பருத்தி, சணல் முதலியன.

**வேளாண்மை உற்பத்தியின் பலவித போக்குகள்**

சமீப நாட்களில் வேளாண்மை உற்பத்தி இந்தியாவில் மிகவும் வேகமாகப் பெருகி வருகின்றது. உணவு தானியங்கள் உற்பத்தியிலும் பணப் பொருட்கள் உற்பத்தியிலும் அதிகமான வளர்ச்சி காணப்பட்டுள்ளது. 1950-51ல் 59.9 மில்லியன் டன் ஆக இருந்த உணவு தானியங்களின் உற்பத்தி 1985-86ல் 151.00 மில்லியன் டன் ஆக உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் உற்பத்தியின் வளர்ச்சி வேகம் குறைவாகவே உள்ளது. பருத்தியின் உற்பத்தி 1985-86ல் 87.3 லட்சம் பேல். 1982-83ல் சர்க்கரையின் உற்பத்தி 82 லட்சம் டன். எண்பதுகளில் வேளாண்மை உற்பத்தியின் போக்கு வளர்ந்து வரலாயிற்று.

1950-51க்கும், 1960-61க்கும் இடைப்பட்ட காலங்களில் வேளாண்மை உற்பத்தி உச்ச நிலையினை எட்டியது. அனைத்துப் பொருட்களின் உற்பத்திக் குறியீட்டு எண் 1950-51 - 50.5லிருந்து 1961-67ல் 87.6 ஆக உயர்ந்தது. 1961-62 லிருந்து 1966-67க்கு இடைப்பட்ட காலத்தில் வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சி வேகம் குன்றிய நிலையில் இருந்து வந்தது. 1965-69ல் வேளாண்மை உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டது. உணவுத் தானியங்களின் உற்பத்தி மட்டுமின்றி உணவு சாரா தானியங்களின் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தன. இந்தச் சூழ்நிலையில் தான் வேளாண்மை உற்பத்தியில் இந்தியா ஒரு புதிய வேளாண்மைத் தொழில் நுட்பத்தைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



புதிய வேளாண்மைத் தொழில் நுட்பம் கையாளப்பட்டதன் விளைவாக வேளாண்மை உற்பத்தி வளர்ச்சியடைய ஆரம்பித்தது. 1972-73ல் மோசமான கால நிலையின் காரணமாக வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. 1975-76ல் மீண்டும் வேளாண்மை உற்பத்தி பெருக ஆரம்பித்தது. 1987-88ல் குறியீட்டு எண் 149.3ஐ எட்டியது. இதற்கு பல விதமான உயர் விளைவு கொடுக்கும் விதைகள், ரசாயன உரங்கள், நீர்ப்பாசன வசதிப் பெருக்கம் போன்ற தொழில் நுணுக்கம் கையாளப்பட்டதே காரணங்களாகும்.

வேளாண்மை உற்பத்தியில் காணும் ஏற்றத் தாழ்வு இந்தியாவின் வேளாண்மைத் துறையின் நிலையற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

**வளர்ச்சியின் பல்வேறு படிகள்**

வேளாண்மை உற்பத்தியினை இரண்டு வழிகளில் விருத்தி செய்யலாம்.

1. வேளாண்மை செய்யும் நிலப்பரப்பை விரிவு படுத்துதல்

**1. பயிர் செய்யப்படும் நிலப்பரப்பளவு**

பயிர் செய்யப்படும் பரப்பளவைக் கீழ்க்கண்டவாறு விருத்தி செய்யலாம்.

அ. இரண்டு அல்லது மூன்று போகங்கள் சாகுபடி செய்தல்.

ஆ. சாகுபடி செய்யப்படாத நிலங்களையும் தரிசு நிலங்களையும் பயன்படுத்துதல்.

ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் சாகுபடி செய்யக் கூடிய நிலங்களை அதிகரிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக 1950-51ல் சாகுபடி நிலப்பரப்பளவு 78.2 ஆக இருந்தது 1986-87ல் 106.4 ஆக உயர்ந்தது. உணவு தானியங்களும் உணவு சாரா தானியங்களும் அதிகரிக்கப்பட்ட நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டன. ஆனால் இவ்வாறு அதிகரிக்கப்பட்ட நிலப்பரப்பு உணவு தானியங்கள் விளையும் நிலப்பரப்பே அதிகமாயிற்று.

அந்நாடுகளில் விரிவான சாகுபடி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப் படவில்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு 6 சதவீதம் அதிகரித்துள்ளது. *304.2*



மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் 169.5 மில்லியன் ஹெக்டேர் நிலத்தில் தான் சாகுபடி செய்வதற்கு ஏற்ற வாய்ப்பு இருந்தது. சுருங்கக்கூறின் 56 சதவீதம் நிலப்பரப்பில்தான் சாகுபடி செய்யப்படுகின்றது.

**2. ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பின் உற்பத்தித் திறன்**

நிலம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் உற்பத்தித் திறனை ஊக்குவிப்பது மட்டுமே ஒரே ஒரு வழிமுறையாகும். உயர்தரமான இயந்திர - சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவும், சிறந்த நவீன உரங்களை பயன்படுத்துவதின் மூலமாகவும், நவீன தொழில் நுணுக்கங்களைக் கையாளுவதன் மூலமாகவும் உற்பத்தித் திறனை அதிகரிக்கலாம். 1987-88ல் ஒரு ஹெக்டேரில் விளையும் பொருளின் குறியீட்டெண் 137.5 ஆக இருந்தது 1990-91ல் 176.7 ஆக உயர்ந்துள்ளது. புதிய முறைகளைக் கையாண்டதின் மூலமாக ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பிலேயே அமோகமான விளைச்சல் கிட்டியது. எனினும் மழையின்மை காரணமாக சில ஆண்டுகளில் உற்பத்தியளவு மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

நிலத்தின் உற்பத்தித் திறன் விருத்தியடைந்திருந்தாலும், சரியான உழைப்பின்மை காரணமாக எதிர்பார்த்தபடி விளைச்சல்கள் கிடைக்கவில்லை. உற்பத்தித் திறன் மிகவும் மட்டமான நிலையை அடையலாயிற்று. நவீன வழிமுறைகள், தொழில் நுணுக்கங்கள் கையாளப்பட்ட போதிலும், வேகமான முன்னேற்றம் காணப்படவில்லை. வளர்ச்சி வீதம் 2.1 சதவீதமாகவே இருந்தது. எல்லாப் பயிர் வகைகளின் வளர்ச்சி வீதமும் பசுமைப் புரட்சியின்போது ஒரே சீராக அமையவில்லை. பயிர்வகைகள் சில திருப்திகரமாக வளர்ச்சியடையாது போயிற்று. மேலும் பசுமைப் புரட்சி மாநிலங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கியது. பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்கள் மட்டுமே முன்னேற்றமடைந்தன.

வேளாண்மையின் வளர்ச்சி குன்றியதற்கு நீர்ப்பாசன வசதிக்குறைவுகள், மண்ணின் வளமற்ற தன்மை, கால நிலைகள், உழவர்களின் தவறான நிலை போன்ற பல காரணங்கள் உள்ளன. உற்பத்தித் திறன் சிறப்படைய வேண்டுமாயின், நிலம் சரிவர பாதுகாக்கப்பட வேண்டும். நவீன வழிமுறைகளைப் பயன்படுத்தி உணவு தானியங்களின் தரத்தையும் அளவையும் உயர்த்தலாம். உழவர்களுக்கு ஊக்கத் தொகைகள் சாதனங்கள் அளித்து விளைச்சலைப் பெருக்குவதற்கு தூண்டுதல் அளிக்கலாம். சரியான



விலை நிர்ணயக் கொள்கை பயிர் பாதுகாப்பு தானியங்களைத் தக்கபடி பேணிக் காப்பதற்கான வசதிகள், போக்குவரவு வசதிகள், தொழிலின் வளர்ச்சிக்கு உதவிடும்.

**வேளாண்மை உற்பத்தித்திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்கள்**

அண்டை நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவின் உற்பத்தித் திறன் மிகவும் குறைவான நிலையில் உள்ளது. வேளாண்மையின் வளத்தை மேம்படுத்த பல முயற்சிகளும் வழி முறைகளும் கையாளப்பட்ட போதிலும், ஏக்கர் ஒன்றுக்குக் கிடைக்கின்ற விளைச்சல் வீழ்ச்சியடைந்த நிலையே காணப்படுகின்றது. அயல் நாடுகளில் ஒரு ஹெக்டேரில் கிடைக்கும் விளைச்சல் இந்தியாவைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமாக உள்ளது. நம் நாட்டில் உற்பத்தித் திறனில் காணும் வீழ்ச்சியைக் குறித்து மிகவும் ஆழ்ந்து கருத்துன்றிக் கவனிக்க வேண்டும். இல்லாவிடில் பொருளாதார நெருக்கடிகளும் சமுதாயச் சிக்கல்களும் நாட்டில் உருவாகிக் கேடு விளைவிக்கும்.

**உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்கள்**

வேளாண்மையில் உற்பத்தித் திறன் குறைந்த நிலையில் இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. சில முக்கியமான காரணங்களைக் கீழே காணலாம்.

**1. மக்கள் தொகை பெருக்கம்:** நாட்டில் மக்கள் தொகை மிகவும் பெருகியுள்ளது. அதில் 70 சதவீதம் மக்கள் வேளாண்மையை நம்பியே உயிர்வாழ்கின்றனர். தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் இல்லாததாலும் வேறு தொழிலுக்கே திரும்பி விடுகின்றனர். சாகுபடி நிலத்தின் சராசரி அளவு குறைந்து வந்துள்ளது. விவசாயம் செய்வோர் பெருகியிருப்பதால் வேளாண்மையில் அவர்களுக்குப் போதிய வருமானம் கிடைக்காததால் நவீன ரசாயன உரங்கள், நவீன விவசாய கருவிகளை அவர்களால் வாங்க முடியவில்லை. எனவே தொழிலாளிகளின் மிகுதியால் வேளாண்மையில் உற்பத்தித் திறன் மிகுதியும் பாதிக்கப்படுகின்றது.

**2. நிதிப் பற்றாக்குறை:** குறைந்த வட்டியில் விவசாயிகளுக்குப் பணம் கிடைப்பதில்லை. வட்டிக் கடைக்காரர்கள் கடன் தொகைகளுக்கு மிகவும் அதிகமான வட்டிவீதம் வாங்குகின்றனர். இதனால் விவசாயிகள் நிதிப்பற்றாக்குறை சூழலில் அகப்பட்டுத் தவிக்கின்றனர். இதன் காரணமாக உற்பத்தித் திறன் குறைகின்றது. 'இந்திய விவசாயி

வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இந்தியாவில் 70 சதவீத மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் 2 முதல் 10 சதவீத மக்கள்தான் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தலா 2 சதவீத மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஜப்பானில் 5 சதவீத மக்களும், மேற்கு ஜெர்மனியில் 4 சதவீத மக்கள் மட்டுமே வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர்.

5. **குறைவான மூலதன திரட்சி:** குறைவான மூலதன திரட்சி இந்தியாவின் மற்றொரு இயல்பாகும். உற்பத்தியைப் பெருக்குவதற்கு மூலதனம் இன்றியமையாததாகும். மூலதனப் பற்றாக்குறை உற்பத்தியை மிகவும் பாதிக்கிறது. இந்தியாவில் மூலதனப் பற்றாக்குறையின் காரணமாக இயற்கை வளங்கள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. மூலதன திரட்சிக்கு அடிப்படையாக அமைவது சேமிப்பாகும். இந்திய மக்களின் வருமானம் குறைவாக இருப்பதாலும், சேமிப்பைத் திரட்டும் நிறுவனங்களின் திறமையின்மையாலும், இந்தியாவில் சேமிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது.

6. **வேலையில்லாத் திண்டாட்டம்:** இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் சற்று அதிகமாகவே உள்ளது. படித்த மற்றும் படிக்காத, நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்றது. வேளாண்மைத் துறையில் தேவைக்கும் அதிகமானவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் இவர்களுடைய இறுதிநிலை உற்பத்தித் திறனும் மிகவும் குறைவாகவே உள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 65 மில்லியன் மக்கள் வேலையில்லாமல் இருந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது. விவசாயம் சாராத துறைகளின் வளர்ச்சியில் கால தாமதம் ஏற்படுவதால் வேலைவாய்ப்பு பெருக்கம் குறைவாகவே உள்ளது.

7. **கல்வியறிவின்மை:** பெரும்பாலான வளர்ச்சியடையா நாடுகளில் கல்வியறிவின்மை அதிகமாகக் காணப்படுகிறது. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது கல்வியறிவாகும். கல்வியறிவின்மை வளர்ச்சியைத் தடைசெய்கிறது. தொழிலில் திறமை பெறுவதற்கு குறைந்த பட்ச கல்வியாவது பெற்றிருக்க வேண்டும். கிராமப் புறங்களில் கல்வியறிவின்மை அதிகமாக உள்ளது. இதனால், திறமையான மனித வளத்தை உருவாக்க முடிவதில்லை. மேலை நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியாவில் மனிதர்கள் தரம் மிகவும் குறைவாக உள்ளது.

8. **தொழில்துறையின் பின்தங்கிய நிலை:** தொழில் துறையின் பின்தங்கிய நிலை இந்தியப் பொருளாதாரத்தின் மற்றொரு இயல்பாகும். இந்தியாவில் தொழில் வளர்ச்சியின் வேகம் மிகவும் குறைவாகவே உள்ளது. மொத்த மக்கள் தொகையில் 30 சதவீதப் பேர் மட்டுமே தொழில் துறை மற்றும் பிற துறைகளில் ஈடுபடுகின்றனர். பெரும்பகுதியான தொழிலாளர்கள் (70%) வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். இந்திய தொழிற்சாலைகளில் சாக்கரை, துணிமணிகள், உணவு சார்ந்த நுகர்வோரின் பொருட்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

9. **தொழில் நுட்ப வளர்ச்சியின்மை:** தொழில் நுட்ப வளர்ச்சியின்மை, இந்தியப் பொருளாதாரத்தின் மற்றொரு இயல்பாகும். தரம் குறைந்த, மிகவும் பழமையான உற்பத்தி முறைகளும், தொழில் நுட்பங்களும் வளர்ச்சி குறைந்த நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், தொழில்துறை மற்றும் வேளாண்மைத் துறையில் உற்பத்தி குறைந்து காணப்படுகிறது. தொழிலாளர்களின் கல்வியறிவின்மை, திறமையின்மை, அறியாமை, மூடநம்பிக்கை, மூலதனப் பற்றாக்குறை போன்றவற்றின் காரணமாக நவீன தொழில்நுட்பங்கள் புகுத்தப்படவில்லை.

10. **ஏற்றத் தாழ்வுகள்:** வளர்ச்சி குறைந்த நாடுகளில் ஏழை, பணக்காரர்கள் என்ற பாகுபாடு அதிகமாக உள்ளது. ஏழைகள் தொடர்ந்து ஏழ்மைத் தளத்தின் எல்லை நோக்கி செல்கின்றனர். ஆனால், செல்வந்தர்களோ மேலும், மேலும், செல்வந்தர்களாகிக் கொண்டே செல்கின்றனர். எனவே ஏழை, பணக்காரர்களுக்கு இடையேயுள்ள இடைவெளி அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

மேற்கூறிய இயல்புகள் தவிர, இரட்டைப் பொருளாதார அமைப்பு, திறமையான தொழில் முனைவோர் இன்மை, அடிப்படை கட்டமைப்பு வசதியின்மை போன்ற இயல்புகளையும் இந்தியப் பொருளாதாரம் கொண்டுள்ளதால், வளர்ச்சி குறைந்த நாடாகக் கருதப்படுகிறது. மேற்கூறிய இயல்புகள் அனைத்தும் முன்னேற்றம் காணுமானால் இந்திய நாடு வளர்ச்சியடைந்த நாடுகளின் பட்டியலில் இடம்பெற வாய்ப்புண்டு.

**வினாக்கள்**

1. வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தின் இயல்புகளை விளக்குக.
2. இந்தியப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை (குணாதிசயங்களை) விவரி.



பாடம் – 2

# இந்தியாவின் மனித வள மேம்பாடு

பொருளாதார வளர்ச்சிக்கு மனித வளம் இன்றியமையாத ஒன்றாகும். பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித வளம் ஆகிய இரண்டிற்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மனித வளத்தின் திறமையைப் பொறுத்துதான் அந்நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி அமைகிறது. இயற்கை வளங்களை முறையாகவும், முழுமையாகவும் பயன்படுத்துவதற்கு தேவையான மனிதவளம் இன்றியமையாததாகும். இதன் மூலம் பொருளாதாரத்தில் மிகப்பெரிய வளர்ச்சியைக் காணலாம்.

ஆரம்பகாலத்தில் மனித வள மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படவில்லை. அதற்காக எவ்வித முதலீடும் செய்யப்படவில்லை. மனித வள மேம்பாடு அல்லது மனித மூலதன ஆக்கம் என்பதனை உருவாக்கியவர் பேராசிரியர் தியோடர். டபிள்யூ. சூல்ட்ஸ் ஆவார். மனிதவள மேம்பாடு என்பது மக்களிடையே இருக்கும் அறிவுத்திறன், சிந்தனைத்திறன், உழைப்புத்திறன், செயலாக்கம் முதலியனவற்றை முறையாக வளர்ப்பதே ஆகும்.

## மனிதவள மேம்பாட்டின் முக்கியத்துவம்

இருபதாம் நூற்றாண்டில் மனிதவள மேம்பாட்டிற்கு எல்லா நாடுகளிலும் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. காரணம் மனிதவள மேம்பாடு கீழ்க்கண்ட வழிகளில் பொருளாதாரத்தை மென்மேலும் வளர்ச்சியடையச் செய்கிறது.

1. **உற்பத்தி பெருக்கம்:** அறிவாற்றல் மிக்க தொழிலாளர் தன்னிடமுள்ள பொருட்களை முறையாகப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கிறார். கல்வியின் மூலம் அறிவுத் திறன் அதிகரிக்கும் போது மிகவும் கடினமான தொழில்களைக் கூட மிகவும் சுலபமாகவும், திறமையாகவும் செய்ய முடிகிறது. இதனால் உற்பத்தி அதிகரிக்கிறது.

2. **நவீன தொழில் நுட்பம்:** உற்பத்தி திறனை அதிகரித்து உற்பத்தியைப் பெருக்க மனித மூலதனம் பெரிதும் உதவுகிறது. அறிவு படைத்த தொழிலாளர்கள் அயல்நாட்டுத் தொழில்நுட்ப முறைகளை எளிதில் கற்றுக் கொள்வதோடு அதனைப் பயன்படுத்தவும் முடிகிறது.



3. **தலா (தனிநபர்) வருமானம் அதிகரிப்பு:** மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தலா வருமானத்தை அதிகரிக்கலாம். குடும்பத்தில் பிறப்பு வீதம் குறைவதால் தலா வருமானம் அதிகரிக்கிறது. மேலும், பெண்களும் வேலைக்குச் செல்வதால் குடும்பத்தில் வருமானம் அதிகரிக்கிறது. இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாடுகளில் உழைப்பை நம்பியே பலர் வாழ்கின்றனர். அவர்கள் தங்களுடைய தொழிலில் திறமை பெறும்போது உற்பத்தி திறன் அதிகரித்து உற்பத்தி பெருகி நாட்டின் மொத்த உற்பத்தியும் உயர்கிறது.

4. **மக்களின் வாழ்க்கைத் தரம்:** மனித வள மேம்பாடு மக்களின் உற்பத்தித் திறனையும் சிந்தனை சக்தியையும் மேம்பாடடையச் செய்வதோடு நின்றுவிடுவதில்லை. அவர்களுடைய வாழ்க்கை தரத்தையும் உயர்த்துகிறது. திறமைக்கேற்றவாறு ஊதியம் அளிக்கப்படுவதால் வருமானமும் அதிகரிக்கிறது. வருமானம் அதிகரிப்பதால் வாழ்க்கைத் தரம் உயருகிறது.

5. **பொருளாதாரத்தை மாற்றியமைக்க உதவும் கருவி:** அறிவாற்றலைப் பெற மக்கள் சமுதாயத்தில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவரமுடியும். பாரம்பரியம் மற்றும் கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களை இவர்கள் கைவிட்டுவிடுவார்கள். காரணம், அவை பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடைக்கல்லாக அமையும். மக்கள் பல இடங்களுக்கும் சென்று தங்களுடைய வேலையைத் தேடிக் கொள்கிறார்கள். மேலும், தொழில் முனைவோர்கள் பலர் உருவாகின்றார்கள். கடினமாக உழைக்கவும், இடர்களை வெற்றிகரமாகச் சந்தித்து சம்பாதிக்கவும் முன்வருகிறார்கள். பெண் தொழில் முனைவோர்களும் உருவாகி வருகின்றனர். சுருக்கக் கூறின், பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் கருவியாகச் மக்கள் சமுதாயம் செயல்படுகிறது.

## இந்தியாவில் மனிதவள மேம்பாட்டு வளர்ச்சி

தற்காலத்தில், இந்தியாவில் மனிதவள மேம்பாடு வியத்தகு வளர்ச்சியைக் கண்டுள்ளது. எனினும், குறைபாடுகள் இல்லையென முற்றிலுமாக கூறிவிட முடியாது. சூழ்நிலைக்கேற்ப முறையான கொள்கைகளை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். மனிதவளத்தை மேம்படுத்துவதற்கான உள்ளீடுகளாகக் கருதப்படுபவை இரண்டு: 1. கல்வி (இதில் பயிற்சியும் உள்ளடங்கும்), மற்றொன்று 2. சுகாதாரம். இவை இரண்டிலும் ஏற்படும் மாற்றம் மற்றும் முன்னேற்றம் மனிதவளத்தை மேம்பாடடையச் செய்யும்.

நிலச்சீர்திருத்தத்தின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருமளவு அதிகரிக்கலாம். கீழ்க்கண்ட கருத்துக்களைக் கருத்திற்கொள்வதின் மூலம் உற்பத்தித்திறன் அதிகரிக்க வாய்ப்பு அதிகம் உள்ளது.

அ. கூட்டுறவு சாகுபடி முறையைப் பின்பற்றுவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கலாம்.

ஆ. வேளாண்மைத் துறையில் புதிய இயந்திரங்களைப் புகுத்தி, நவீன இடுபொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கலாம்.

இ. நிலத் தொகுப்பின் மூலம் சிறிய மற்றும் சிதறுண்ட நிலங்களை ஒன்று சேர்த்துப் பயிரிடுவதன் மூலம் உற்பத்தி பெருகும்.

ஈ. நிலமில்லா விவசாயிகளுக்கு நிலங்களைத் தந்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கலாம்.

உ. விளைந்த பொருட்களைச் சேமித்து வைக்கவும், அவைகளை நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு செய்வதன் மூலம், விவசாயிகள் விவசாயத்தில் அதிகக் கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புள்ளது.

**நிலச்சீர்திருத்தத்தின் மூலம் சமூக நீதியைக் கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தலாம்.**

1. 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற கருத்தின் படி நிலவுரிமையில் மாற்றம் செய்வதன் மூலம் சமூக நீதியை ஏற்படுத்தலாம்.
2. நில உரிமையாளர்கள், நிலமில்லாமல் கூலிக்கு வேலை செய்யும் விவசாயிகளைச் சுரண்டுவதைத் தடுக்கலாம்.
3. கூலிக்கு வேலை செய்யும் விவசாயிகளின் கூலியை உயர்த்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.
4. நிலப்பகிர்வில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதன் மூலமும் சமூக நீதியை ஏற்படுத்தலாம்.

**நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள்**

நிலச்சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு முன்பு வேளாண்மை உற்பத்தித் திறன் மிகக் குறைவாகக் காணப்பட்டது. வேளாண்மை



உற்பத்தியைப் பெருக்குவதற்கும் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கும் கீழ்க்கண்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன: 1. ஜமீன்தாரி முறை ஒழிப்பு, 2. குத்தகை முறை சீர்திருத்தம், 3. நில உச்ச வரம்பு நிர்ணயம், 4. கூட்டுறவு விவசாயம், 5. நிலத்தொகுப்பு.

**1. ஜமீன்தாரி முறை ஒழிப்பு**

கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாகக் காணப்பட்டது. இதற்கு ஜமீன்தார்களுடைய போக்கு முக்கிய காரணமாகும். இவர்கள் விவசாயிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் இடைத்தரகர்களாகச் செயல்பட்டனர். ஜமீன்தார்கள் நிலத்தின் உற்பத்தியைப் பற்றிக் கவலைப்படாமல் வரி வசூலிப்பதில் மட்டுமே கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். இவர்களால் விவசாயத்தின் தன்மையே பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாயிகள் நிலத்தை மேம்படுத்த ஊக்குவிக்கப்படாததால் நிலத்தின் உற்பத்தித் திறன் குறைவாயிற்று. ஜமீன்தாரி முறையினால் பெருகிவரும் தீமைகளைக் கண்ட மாநில அரசுகள் அதனை ஒழிப்பதற்கு முயற்சிகள் எடுக்கலாயின. இதற்கு முதலில் வித்திட்டது மேற்கு வங்க அரசாகும்.

மாநிலங்களில் இயற்றப்பட்ட சட்டங்களின் முக்கிய குறிக்கோள்கள் 1. ஜமீன்தாரி முறையை ஒழிப்பது. 2. நிலக் கிழார்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குவது. ஜமீன்தாரி முறை ஒழிப்பின் மூலமாக 57.5 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் நிலமில்லாத விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஜமீன்தார்களுக்குச் சுமார் ரூ. 670 கோடி வரை நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது.

**விளைவுகள்:** ஜமீன்தாரி ஒழிப்பு முறையினால் நிலச் சீர்திருத்தத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. கிராம மக்கள் சுரண்டப்படுவது தடுக்கப்பட்டது. வேளாண்மை உற்பத்தி பெருக ஆரம்பித்தது.

**2. குத்தகை முறை சீர்திருத்தம்**

இந்தியாவில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு அதன் மூலமாக வருமானம் பெறப்பட்டு வந்தது. இம்முறையினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இம்முறையில் பல குறைகள் காணப்பட்டன.



**குத்தகை முறையின் குறைபாடுகள்**

1. நில உரிமையாளர்கள் குத்தகைக்காரர்களைப் பல வழிகளில் சுரண்டி வந்தனர், 2. நிலவள மேம்பாட்டிற்காக நில உரிமையாளர்கள் எவ்வித முதலீடும் செய்ய முன்வருவதில்லை. இதனால் உற்பத்தித் திறன் வெகுவாகப் பாதித்தது. 3. குத்தகைக்காரர்களுக்கு நிலப் பாதுகாப்பு இல்லாததால் அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதில் அதிகக் கவனம் செலுத்தவில்லை, 4. நிலத்திற்கு அதிக வாரம் வசூலிக்கப்பட்டதாலும் குத்தகைக்காரர்களின் விருப்பமின்மையாலும் வேளாண்மை உற்பத்தி வெகுவாகக் குறைந்தது, 5. குத்தகைக் காரர்களுக்கும் நில உரிமையாளர்களுக்கும் இடையே சுமுகமான உறவு இல்லாததால் வேளாண்மைப் பெரிதும் பாதிக்கப்பட்டது.

மேற்கண்ட குறைபாடுகளினால் விவசாயிகளின் முன்னேற்றமும் மட்டுமல்லாமல் வேளாண்மையின் உற்பத்தித் திறனும் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாகக் குறைபாடுகளை நீக்க மாநில அரசுகள் குத்தகைச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றின. இச்சட்டங்களின் முக்கிய நோக்கங்கள்.

1. வாரத் தொகையை முறைப்படுத்துதல், 2. குத்தகைக் காலப் பாதுகாப்பு, 3. குத்தகையாளர்களுக்கு நில உரிமை.

**1. வாரத் தொகையை முறைப்படுத்துதல்:** விளைபொருட்களில் ஒரு பெரும்பகுதியைக் குத்தகைக்காரர்கள் நில உரிமையாளர்களுக்கு நிலத்தை உபயோகித்ததற்காக வாரத் தொகையாக செலுத்தி வந்தனர். இதனைக் குறைப்பதற்குச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கும், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேஷ் மாநிலங்களில் 25 முதல் 40 சதவீதம் வரை வாரத்தொகையாகக் கொடுக்கலாமெனச் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டது.

**2. குத்தகைக் காலப் பாதுகாப்பு:** பல்வேறு மாநிலங்களில் குத்தகைக் காலப் பாதுகாப்பு கொடுப்பதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன: அ) குத்தகைக் காலம் முடியும் முன்பு சாகுபடி உரிமை பறிக்கப்பட்டு நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவது குற்றமாகும், ஆ) வாரத்தொகை கொடுக்காத நிலையில் மட்டுமே குத்தகைக்காரர்களை வெளியேற்றலாம், இ) விவசாயம் அல்லாத மற்ற உபயோகங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினால் குத்தகைக்காரர்களை வெளியேற்றலாம், ஈ) நில உரிமையாளர்கள் தாங்கள் சொந்தமாகப் பயிரிடும் போது மட்டுமே



குத்தகைக்காரர்களிடமிருந்து நிலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். உ) அவ்வாறு நிலத்தைத் திரும்பப் பெறும் பொழுது நிலத்தில் ஒரு பகுதியைக் குத்தகைக்காரர்களுக்கு விற்று விட வேண்டும்.

**3. குத்தகையாளர்களுக்கு நில உரிமை:** குத்தகைக்காரர்கள் தாங்கள் பயிர் செய்யும் நிலத்தைத் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ளும் வகையில் பல மாநில அரசுகள் நிர்ணயிக்கும் நஷ்ட ஈட்டுத் தொகையை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்து விட்டுக் குத்தகைக்காரர்கள் நிலத்தில் முழு உரிமையைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சில மாநில அரசுகளே நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுத்து நில உரிமையைத் தங்கள் பொறுப்பில் வைத்துக் கொண்டு குத்தகைக்காரர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுகின்றன.

இச்சட்டங்களின் மூலம் குத்தகைக்காரர்களின் நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஏறத்தாழ 100 லட்சம் ஹெக்டேர் நிலம் 40 லட்சம் குத்தகைக்காரர்களுக்கு உரிமையாக வழங்கப்பட்டது. இதனால் வேளாண்மை உற்பத்தியும், உற்பத்தித் திறனும் அதிகரித்தன. இச்சட்டங்களை அமுல்படுத்துவதிலும் கீழ்க்கண்ட சிக்கல்கள் எழுந்தன. குத்தகை சம்பந்தமான ஆவணங்கள் சரியாக இல்லாததால் குத்தகைச் சீர்திருத்தங்களைச் சரிவரச் செயல்படுத்த முடியவில்லை. நிலத்தை உரிமையாக்கிக் கொள்வதற்குக் குத்தகைக்காரர்களிடம் போதிய நிதி வசதி இல்லை.

**3. நில உச்ச வரம்பு நிர்ணயம்**

தனிநபர் அல்லது ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளக் கூடிய உயர்ந்த பட்ச நிலத்தின் அளவு தீர்மானிக்கப்பட்டது. இது நில உச்ச வரம்பு நிர்ணயம் வழங்கப்பட்டது. இது நில உச்ச வரம்பு நிர்ணயம் என்றழைக்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகபட்சமாக இருக்கும் நிலங்களை அவர்களிடமிருந்து பெற்று சிறு விவசாயிகளுக்கு தரப்படுகிறது.

**நில உச்ச வரம்புக்கு ஆதரவான கருத்துக்கள்**

1. நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் கிடைப்பதனால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் கூடுகின்றது. 2. தங்கள் சொந்த நிலத்திலே அதிக உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு விவசாயிகள் செயல்படுவதால் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றன. 3. நிலத்தின் அளிப்பு நிரந்தரமானதாகும். இதனைக் கூட்டவோ குறைக்கவோ முடியாது. இந்நிலையில் ஒரு சிலர் கையில் நிலங்கள் குவிந்திருப்பதால் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. 4. இம்முறையினால்

காணப்படுகின்றது. காரணம் போதுமான மருத்துவ வசதிகள் இல்லாமையாம். பெண்கள் திருமண வயதை அடையும்போது ஏற்படும் பிரச்சினைகள் கவனிக்கப்படாமலிருத்தல் 15-19 வயதுப் பிரிவினரில் திருமணம் செய்யும் பெண்களில் பெரும்பான்மையினரின் மகப்பேற்றின் சில பிரச்சினைகளைச் சமாளிக்கப் போதிய அனுபவம் இல்லாமையாலும் தாய்மையின் பளுவைத் தாங்கக் கூடிய உடல் வலிமை இல்லாமையாலும் இறந்து விடுகின்றனர். ஆண்பிள்ளை குடும்ப வாரிசு என்றும் குடும்பத்தைத் தாங்க வல்லவர் என்றும் கருதும் மனப்பாங்கு. பெண்பிள்ளைகள் திருமணமாகி வேறு இல்லம் செல்பவர்கள். ஆதலால் அவர்கள் மேல் ஆண்பிள்ளைகளை விடக் குறைவான கவனம் செலுத்தும் போக்கு. பெண்களுக்குத் திருமணத்தின்போது தங்க நகைகள் மற்றும் இதர சீர்வரிசைகள் வரதட்சிணையாக அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் / பழக்கம் வறுமை காரணமாகப் பெண்கள் தங்கள் உடல்நலத்தை நல்ல நிலையில் பராமரிக்க முடிவதில்லை. வறுமையின் விளைவாக குறைவான கல்வி, உடல் நலமின்மை, சுகாதாரக் கேடுள்ள வாழ்க்கை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இப்பிரச்சினைகளைத் தீர்க்க வறுமை நச்சுச் சூழல் தகர்க்கப்பட வேண்டும். அத்துடன் நல்ல பொருளாதார வசதியுடன் பெண்களையும், ஆண்களையும் சமம் என்று எண்ணும் மனப்பான்மையும் ஏற்பட்டால்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

கோலின் கிளார்க் 'பொருளாதார வளர்ச்சியின் நிபந்தனைகள்' என்னும் தமது நூலில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் தொழில்வாரி மக்கள் பகிர்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தொழில்வாரி மக்கள் பகிர்வில் என்னும் பொருளாதார வளர்ச்சி, தொழில்வாரி மக்கள் பகிர்வில் ஏற்படும் சில தெளிவான தேவையான மற்றும் எதிர்நோக்கக்கூடிய மாற்றங்களோடு பொதுவாகத் தொடர்புடையது என்றும் கூறினார். ஒரு தனிநபரின் உயர்ந்த சராசரி உண்மை வருமானம் எப்போதுமே மூன்றாம் நிலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குறைந்த தொழிலாளர்களின் விகிதாசாரத்தோடும் முதல் நிலைத் தொழிலின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் அதிக விழுக்காடு தொழிலாளர் விகிதாச்சாரத்தோடும் எப்போதுமே தொடர்புடையது என்றும் பேராசிரியர் கோலின் கிளார்க் கூறுகிறார். பேராசிரியர் கோலின் கிளார்க்கின் கோட்பாடுகளைக் கீழ்க்கண்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் நிரூபிக்கலாம்.



**குறிப்பிட்ட சில நாடுகளில் தலா வருமானமும் தொழிலாளர்களின் பகிர்வும்**

| நாட்டின் பெயர் | ஆண்டு | தலா வருமானம் (அமெரிக்க டாலர்களில்) | தொழிலாளர்களின் விழுக்காடு | | |
|---|---|---|---|---|---|
| | | | வேளாண்மை | தொழில் | பணிகள் |
| அமெரிக்கா | 1960 | 2500 | 7 | 36 | 67 |
| | 1980 | 11360 | 2 | 32 | 56 |
| இங்கிலாந்து | 1960 | 1260 | 2 | 48 | 48 |
| | 1980 | 7920 | 2 | 42 | 56 |
| மேற்கு ஜெர்மனி | 1960 | 1220 | 14 | 48 | 38 |
| | 1980 | 7920 | 2 | 42 | 56 |
| ஜப்பான் | 1960 | 420 | 33 | 30 | 37 |
| | 1980 | 9899 | 12 | 39 | 49 |
| இந்தியா | 1960 | 70 | 74 | 11 | 15 |
| | 1980 | 240 | 69 | 13 | 18 |
| | 1990 | 320 | 65 | 16 | 19 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து அதிக தலா வருமானம் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மக்களின் விகிதாச்சாரத்தோடு தலைகீழ் விகிதத்தில் ஒட்டுறவு கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. 1980 ஆம் ஆண்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி மற்றும் ஜப்பான் முதலிய நாடுகள் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் குறைந்த விகித மக்களோடு அதிக தலா வருமானத்தைப் பெற்றுள்ளன. ஆனால், இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடு வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் அதிக விகித மக்களோடு குறைந்த தலா வருமானத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொழில் வாரியாக உழைக்கும் மக்கள் எவ்வாறு பிரிந்துள்ளனர் என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறிந்து கொள்ளலாம்.

1901 முதல் 1991 வரை இந்தியாவில் எவ்வாறு மூன்றுவகைத் தொழில்களிலும் மக்கள் பகிர்ந்து காணப்படுகின்றனர் என்று எடுத்துரைக்கிறது.



| | மூன்று வகைத் தொழில்களிலும் உழைக்கும் மக்களின் பகிர்வு விழுக்காடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1901 | 1921 | 1951 | 1961 | 1971 | 1981 | 1991 |
| முதல் நிலைத் தொழில் (1, 2, 3) | 71.8 | 76.0 | 72.1 | 72.3 | 72.1 | 70.6 | 72.3 |
| 1. சாகுபடியாளர்கள் | 50.6 | 54.6 | 50.0 | 52.8 | 3.3 | 42.1 | 43.3 |
| 2. விவசாயத் தொழிலாளர் | 16.9 | 17.4 | 19.7 | 16.7 | 26.3 | 26.3 | 26.3 |
| 3. கால்நடை, வனவளம், மீன் வளர்ப்பு, வேட்டையாடுதல் மற்றும் தோட்டப்பயிர்கள் | 4.3 | 4.2 | 2.4 | 2.8 | 2.5 | 2.2 | 2.5 |
| இரண்டாம் நிலைத் தொழில் (4, 5, 6, 7) | 12.6 | 10.4 | 10.6 | 11.7 | 11.2 | 12.9 | 13.2 |
| 4. சுரங்கத் தொழில்கள் உடைக்கும் தொழில் | 0.1 | 0.3 | 0.6 | ... | 0.6 | 0.5 | 0.5 |
| 5. குடிசைத் தொழில் | ... | ... | ... | 6.4 | 3.5 | 3.5 | 3.5 |
| 6. குடிசைத் தொழில் தவிர பிற தொழில்கள் | 11.7 | 9.3 | 9.0 | 4.2 | 5.9 | 7.4 | 7.6 |
| 7. கட்டுமானத் தொழில் | 0.8 | 0.8 | 1.0 | 1.1 | 1.2 | 1.5 | 1.6 |
| மூன்றாம் நிலைத் தொழில் (8, 9, 10) | 15.6 | 12.6 | 17.3 | 16.0 | 16.7 | 16.5 | 16.9 |
| 8. வர்த்தகம் | 6.0 | 5.8 | 5.3 | 4.0 | 5.6 | 5.8 | 5.8 |
| 9. போக்குவரத்து, பண்ட சேமிப்பு மற்றும் செய்தித் தொடர்பு | 1.1 | 0.9 | 1.5 | 1.6 | 2.4 | 2.5 | 2.5 |
| 10. பிற பணிகள் | 8.5 | 6.9 | 10.5 | 10.4 | 8.7 | 8.2 | 8.5 |
| மொத்த உழைப்பாளர்கள் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

அட்டவணையின்படி தொழில்வாரி மக்கள் பகிர்வு இந்தியாவின் பின்தங்கிய நிலையை நன்கு பிரதிபலிக்கிறது. கடந்த 80 ஆண்டுகளுக்கு மேல் முதல் நிலைத் தொழிலில் அதாவது விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் உழைக்கும் மக்களின் விழுக்காடு 70க்குக் கீழ் குறையவில்லை. அதிக விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பியிருப்பது வேளாண்மையில் பேரளவில் மறைமுக வேலையின்மை



காணப்படுவதையும் அதன் விளைவாக குறைந்த தலா உற்பத்தித் திறனும் பரவலாக வறுமையும் நிலவுவதையும் சுட்டிக் காட்டுகிறது. மேலும் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் விகிதாசாரமும் முக்கிய அம்சமாகும். 1901-ல் விடுதலைக்குப்பின் வரும் மூன்று மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளிலும் 28 விழுக்காடு தொழிலாளர்களே இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பது இவண் நோக்கற்பாலது. 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1981 ல் 29.4% தொழிலாளர்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். முந்தைய ஆண்டுகளை விட இது 1.4% அதிகமாகும். தொழில்வாரி மக்கள் பகிர்வை விளக்க 1901 முதல் 1951 வரை முதல் பிரிவாகவும் பிரித்துக் கொள்வது நலமாகும்.

1901 விவசாயத்தில் ஈடுபட்டோர் 71%. இது 1921ல் 6% ஆக அதிகரித்தது. இதற்குப் பிரிட்டனின் வர்த்தகக் கொள்கையே காரணம். இங்கிலாந்தின் தொழிற் சாலைகளில் உற்பத்தியான பொருட்கள் இந்திய கைவினைப் பொருட்களுடன் போட்டியாக விற்கப்பட்டதின் விளைவாகக் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மக்கள் அதனை விட்டு விட்டு விவசாயத்தில் ஈடுபடும்படியான ஒரு கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1901ல் 17% ஆக இருந்த விவசாயத் தொழிலாளர்கள் 1951ல் 20% ஆக உயர்ந்தனர். மேலும் 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட நவீன தொழில் மயமாக்கல் முயற்சிகள் மூலதனச் செறிவுள்ளவையாயிருந்தன. அதனால், அவை சிறிதளவே நேரடி வேலை வாய்ப்பை அளிக்க முடிந்தது. எனவே, தொழில்வாரி மக்கள் பகிர்வு பெரும்பாலும் நிலையானதாகவே இருந்தது. இக்காலத்தில் தொழில் வளம் ஏற்படாததற்கு மற்றுமொரு காரணம் வேளாண்மைத் துறை பிழைப்பூதிய மட்டத்திலிருந்து மிகக் குறைவான அங்காடி உபரியை அளித்து தொழில்துறை நுகர்வுப் பண்டங்களுக்கு மிகக் குறைந்த தேவையையே உருவாக்க முடிந்தது.

அறுபதுகளில் விவசாயத்தில் ஒரு பெரிய தொழில் நுட்ப மாற்றம் ஏற்பட்டது. அதாவது பசுமைப் புரட்சி ஏற்பட்டு அதன் காரணமாக கீழ்க்கண்ட விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டன. உணவு தானிய உற்பத்தியையும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான விவசாய கச்சாப் பொருட்களையும் அதிகமாக உற்பத்தி செய்தல். விவசாயத்தை அல்லது நிலத்தை நம்பியிருக்கும் மக்களின் அளவைக் குறைத்து மற்றவர்களுக்கு அதே சமயம் நிறைவான அல்லது முழு வேலை வாய்ப்பைப் பல போக சாகுபடி முறை மூலம் அளித்தல்.

1. **கல்வியில் முன்னேற்றம்:** இந்திய கல்வியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. தொடக்க கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரையிலும், கல்லூரி, பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்வியிலும் விரைவாக முன்னேற்றம் கண்டுள்ளது. 1951-52இல் இருந்த மொத்த கல்வி நிலையங்களின் எண்ணிக்கை 2.32 லட்சங்களாகும். ஆனால் 1990-91 ஆம் ஆண்டு நிலவரப்படி 8 லட்சத்திற்கும் அதிகமான கல்வி நிலையங்கள் உருவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எல்லாத் துறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுவதுடன் ஏறத்தாழ 160 மில்லியன் நபர்கள் இக்கல்வி நிலையங்களில் கல்வி பயின்று வருகின்றனர். கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமான நபர்கள் கல்வியறிவு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 1991ஆம் ஆண்டு கணக்கின்படி நகரங்களில் உள்ளவர்கள், கிராமங்களில் உள்ளவர்களை விட அதிகமாக கல்வி பெற்றுள்ளனர். நகரங்களில் வாழும் 100 பேரில் 73.2 நபர்களும் கிராமங்களில் 44.2 நபர்களும் கல்வியறிவு பெற்றுள்ளனர். தொழில் நுட்பக் கல்வியிலும், அறிவியலிலும் இந்தியா முன்னேற்றம் அடைந்துள்ளது.

**கல்விக்கான செலவு:** கல்விக்காக ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**கல்விக்கான நிதி ஒதுக்கீடு**

| திட்டகாலம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | மொத்தத்தில் சதவீதம் |
|---|---|---|
| 1 | 14.9 | 7.6 |
| 2 | 273.0 | 5.9 |
| 3 | 588.0 | 6.9 |
| ஆண்டுத் திட்டங்கள் | 306.8 | 4.6 |
| 4 | 774.3 | 4.9 |
| 5 | 1285.0 | 3.3 |
| 6 | 2523.71 | 2.59 |
| 7 | 6382.65 | 3.56 |
| 8 | 8553.0 | 3.89 |

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குப் பின்பு கல்விக்கு நிதி ஒதுக்கீடு குறைவாகவே உள்ளது. எல்லோருக்கும் கல்வி



வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்யலாம். வேலை வாய்ப்பு பெறும் வகையில் கல்வி அமைவது மிகவும் அவசியமாகும்.

2. **சுகாதாரத்தில் மேம்பாடு:** தொழிலாளர்கள் திறம்பட செயல்பட நல்ல சுகாதாரமும் ஆரோக்கியமும் இன்றியமையாததாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இதனால், அவர்களுடைய திறமையும் உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளது. இந்தியாவிலும், அண்மை காலத்தில் சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. 1950-51ல் 28 மருத்துவக் கல்லூரிகளே இருந்தன. 1988-89ல் இது 128 ஆக உயர்ந்துள்ளது. டாக்டர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருதுள்ளது. சுமார் 3,60,000 பேருக்கும் அதிகமான டாக்டர்கள் உள்ளனர். மனிதனுடைய சராசரி உயிர் வாழும் வயது 61 ஆக உயர்ந்துள்ளது. இது 1950-51இல் 32 ஆக இருந்தது. பல உயிர்கொல்லி நோய்களிடமிருந்து மக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

**குறைபாடுகள்**

நாம் வளர்ச்சியடைந்துள்ளபோதும் பல வசதிக் குறைவுகள் உள்ளன. குழந்தைகளின் கல்வி மிகவும் குறைவாக உள்ளது. உதாரணமாக, 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையில் சுமார் 14 சதவீதம் பள்ளிக்கே செல்லவில்லை. மேலும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். அமெரிக்காவில் 420 நபர்களுக்கு ஒரு மருத்துவர் உள்ளார். ஆனால், இந்தியாவில் 2440 பேருக்கு ஒரு மருத்துவரே உள்ளார். மருத்துவமனையில் படுக்கை வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. ஒரு லட்சம் நபருக்கு 95 என்ற எண்ணிக்கையில் உள்ளன.

**முடிவுரை**

மனிதவள மேம்பாட்டில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. மனிதவள மேம்பாடு வளர்ச்சி அடையாத காரணத்தினால், இயற்கை வளங்கள் சரிவர பயன்படுத்தப்படவில்லை. பொருளாதார வளர்ச்சி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. மனித வள மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும். எனவே, மனிதவள மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதோடல்லாமல் மனிதவளம் சரியாகத் திட்டமிடப்பட்டு முறையாக செயல்படச் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியடையச் செய்யலாம்.



பாடம் – 3

# தேசிய வருமானம்

**விளக்கவுரை**

ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பே தேசிய வருமானமாகும். தேசிய வருமானம் குறித்து பல்வேறு பொருளியல் வல்லுநர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளனர்.

1. **மார்ஷல் ஸ்டாம்ப்:** "ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் பெறப்படும் கூலி, சம்பளம், இலாபம், வட்டி, நிலம் மற்றும் கட்டடங்கள் மீதான வாரம் ஆகியவற்றின் மொத்தக் கூடுதலே தேசிய வருமானம் ஆகும்."

2. **குஸ்னெட்ஸ்:** "ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் மொத்தப் பணமதிப்பே நாட்டு வருவாய் அல்லது தேசிய வருவாய் எனப்படும்."

3. **எட்வின் நிவின்:** "ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு மக்களிடையே பங்கிடப்பட்டு அவர்களால் நுகரப்பட்ட பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தப் பண மதிப்பே தேசிய வருமானம் ஆகும்."

4. **ஏ.சி.பிகு:** "பணத்தால் அளக்கக்கூடிய அயல் நாட்டிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தையும் உள்ளடக்கிய சமுதாயத்தின் பொருள் வருவாயின் பகுதியாக நாட்டின் வருவாய் இருக்கிறது."

**நாட்டு வருவாயின் கூறுபாடுகள்**

நாட்டு வருவாயில் பல்வேறு இனங்கள் அடங்கியுள்ளன. அவையாவன:

1. **மொத்த நாட்டு உற்பத்தி (Gross National Product or GNP):** ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் பொருளாதாரத் துறைகள் அனைத்தும் சேர்ந்து உற்பத்தி செய்த, விளைவு முடிந்த பொருட்களின் மொத்தப் பண மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி (Gross National Product or GNP) ஆகும்.

ஒரு நாட்டின் மொத்த வருவாயைக் கணிக்கும்போது கவனிக்க வேண்டிய விதிகள்: (1) ஒரு பொருளின் மதிப்பு ஒரு முறை மட்டுமே கணக்கில் எடுக்கப்பட வேண்டும். (2) உற்பத்தி முடிவடைந்து



நுகர்ச்சிக்குத் தயார் நிலையிலுள்ள பொருட்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். (3) அங்காடி விலைகளின் அடிப்படையில் பொருட்களின் மதிப்புகள் கணக்கிடப்பட வேண்டும்.

பின்வரும் நான்கு இனங்களின் மொத்தம் நாட்டின் மொத்த வருவாயாக எடுத்துக் கொள்ளப்படலாம். (1) தனி நபர்களின் நுகர்வுச் செலவுகள், (2) உள்நாட்டில் முதலீடு, (3) அந்நிய நாடுகளின் நிகர முதலீடு, (4) அரசு வாங்கும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பு.

2. **நிகர நாட்டு உற்பத்தி (Net National Product or NNP):** மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதனப் பொருட்களின் தேய்மானத்தை கழித்து விட்டால் நிகர நாட்டு உற்பத்தி (Net National Product or NNP) கிடைக்கும். நிகர நாட்டு உற்பத்தியின் மொத்தப் பண மதிப்பே நிகர நாட்டு வருவாய் (Net National Income) ஆகும்.

தேய்மானத்தைக் கணிப்பதில் சிக்கல்கள் எழலாம். எனினும் பின்வரும் சமன்பாட்டின் உதவியினால் நிகர நாட்டு வருவாயை துல்லியமாகக் கணக்கிட இயலும்.

நிகர நாட்டு வருவாய் - மொத்த நாட்டு வருவாய் - (மூலதனப் பொருட்களின் தேய்மானம் + மூலதனப் பொருட்களைப் பயன்படுத்து வதற்கும் பராமரிப்பதற்குமான செலவுகள் + மறைமுக வரிகள் + சாதக அயல்நாட்டு செலுத்து நிலையின் பண மதிப்பு + ஓராண்டு காலத்தில் ஆக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட பண்டங்கள், மற்றும் பணிகள் ஆகியவற்றின் பண மதிப்பு + ஒரு நாட்டின் வெளி நாட்டுக் கடன்களில் ஏற்படும் நிகர உயர்வு அல்லது ஒரு நாடு வெளிநாடுகளுக்கு அளித்திருக்கும் கடன்களின் நிகரக் குறைவு)

1. நாட்டின் மொத்த வருவாய் என்பது ஓர் எளிய கருத்து. இதனைக் கணித்தலும் எளிது. ஆனால், நாட்டின் நிகர வருவாய் ஓர் குழப்பமான கருத்து. மூலதனப் பொருட்களின் தேய்மானத்தைக் கழிப்பதில் உள்ள தனிச்சிறப்பான போக்கால் இதனைக் கணித்தலும் சிரமம்.
2. நாட்டின் மொத்த வருவாய் குறுகிய கால ஆய்வுகளுக்குச் சிறந்தது. ஆனால் நாட்டின் நிகர வருவாய் வளரும் நீண்ட கால ஆய்வுகளுக்கு ஏற்றுடையது.
3. நாட்டின் மொத்த வருவாய் நிலையான பொருளாதாரத்திற்குப் பொருத்தமானது. நாட்டின் நிகர

தேவை விதைகள், சுதனை, ஐ.ஆர்.எஸ்.பி.ஆர், தேர்வு, ஜெயவிஜயம், கருப்பு கேஎ 6711, பருத்தி ஜே 34 முதலியன.

2. **சிறந்த உரங்களைப் பெருமளவில் பயன்படுத்துதல்:** உற்பத்தியைப் பெருக்க அதிக விளைச்சல் தரும் உயர்ரக விதைகளைப் பயன்படுத்தும் போது பெருமளவில் உரங்கள் தேவைப்பட்டன. மிகவும் அதிகமான உரங்கள் உபயோகப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1960-61ல் 2.92 லட்சம் டன்னாக இருந்த உரத்தின் தேவை 1987-99ல் 99 லட்சம் டன்னாக உயர்ந்தது. தொண்ணூறாம் ஆண்டுகளில் ஒரு கோடி டன்னுக்கு மேலாக உரம் தேவைப்படும் எனக் கணிக்கப்பட்டது.

3. **பல போக விளைச்சல் திட்டம்:** ஒரே நிலப் பகுதியில் ஒரே ஆண்டில் மூன்று அல்லது நான்கு போகம் விளைச்சல் கிடைப்பதற்கு திட்டம் உருவாக்கப்பட்டது. ஐ.ஆர். 8, ஓய். வி. போன்ற உயர்ரக விதைகள் ஓராண்டில் ஒரே நிலப்பகுதியில் மூன்று அல்லது நான்கு போகம் விளைச்சல்கள் கொடுக்கும் ஆற்றல் பெற்றவை. எம்.பி.சி போன்ற விதைகளைப் பயன்படுத்தினால், ஏழை விவசாயிகள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்வதற்கு ஏற்ற வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதன் விளைவாக விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிக்கின்றது. இவ்வண்ணமாகக் கிராமப்புறங்களில் செழிப்பு மிகுதியாய்ப் பரவுகின்றது.

4. **தற்கால நவீன கருவிகள்:** விவசாயிகள் மாடுகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் முறையினை விட்டுவிட்டு டிராக்டர்கள் போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்த முற்பட்டனர். அத்துடன் குழாய் கிணறுகள், பம்ப் செட்டுகள், நவீன அறுவடைக் கருவிகள் போன்றவைகளையும் பெருமளவில் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

5. **நீர்ப்பாசன வசதிகள்:** சிறந்த நீர்ப்பாசன வசதிகள் மூலம் தண்ணீர் ஏராளமாகக் கிடைக்கின்றது. உயர் விளைச்சல், உயர்ரக விதைகள் நன்றாய் விளைவதற்கு நீர் அதிகம் தேவைப்படுவதால் நீர்ப்பாசன வசதிகள் விரிவாக்கப்பட்டன. கால்வாய் வசதிகள் மேம்படுத்தப்பட்டன. பெருமளவில் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டன.

6. **பயிர்ப்பாதுகாப்பு முறை:** பயிர்கள் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டால் தான் அமோக விளைச்சல்கள் கிடைக்கும். பயிர்களுக்குப் பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளித்தல், களைகளை அகற்றுதல் போன்ற முறைகள் கையாளப்பட்டன.



7. **குறைந்தபட்ச ஆதார விலை:** இந்திய அரசு திட்ட முறையில் விவசாயிகளுக்குக் குறைந்த ஆதார விலை நிர்ணயித்தது. சிறப்பான இயக்கமாக ஆதார விலை நிர்ணயித்தது. ஒரு நிர்ணயத்திட்டம் 1964ல் ஏற்படுத்தப்பட்டது. உணவு தானியங்களுக்கான விலை விளைவிக்குமேயும், வேளாண்மை விவசாயிகளுக்கு உற்பத்திக்கான ஊக்கம் அளிக்கப்பட்டது.

8. **செறிவு முறை சாகுபடி:** புதிய வேளாண்மைத் தொழில் நுட்பத் திட்டத்தின் செறிவு முறை சாகுபடிக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பரந்த பரப்பளவு நிலத்தில் சாகுபடி செய்வதற்குப் போதிய நிதி வசதி கிடைக்காததினால் செறிவு முறையே அதிக உற்பத்திக்கு ஏற்றதாகக் கொள்ளப்பட்டது.

9. **புதிய பொது நிறுவனங்களை ஏற்படுத்துதல்:** விவசாயிகளுக்கு உயர்ரக விதைகள், உரங்கள், போன்ற வேளாண்மை இடுபொருட்களை வாங்குவதில் பல இடர்பாடுகள் இருந்தன. எனவே, இப்படிப்பட்ட இடர்பாடுகளைக் களைந்து விவசாயிகளுக்குப் போதிய நிதி உதவிகளும் மற்றும் ஏனைய உதவிகளும் அளிப்பதற்கு அரசு பல்வேறு பொது நிறுவனங்களை அமைத்தது. அவைகளில் முக்கியமானவை வருமாறு 'தேசிய விதைவிதைப்புக் கழகம்', 'வேளாண் தொழில் கழகம்', 'தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்' 'வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்'.

1. தனி மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாயின
2. நாடு முழுவதும் ஒரே சீரான வளர்ச்சி உருவாகவில்லை

### 1. தனி மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள்

வேளாண்மையில் ஏற்பட்ட பசுமைப் புரட்சி, ஏழைகள் செல்வந்தர்களுக்கிடையில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளை விரிவடையச் செய்தது. செல்வந்தர்களான விவசாயிகளின் வருமானம் ஏழை விவசாயிகளுடைய வருமானத்தை விடப் பன்மடங்கு அதிகரித்தது. பணக்கார விவசாயிகள் பணம் அதிகமாய்ச் செலவழித்துத் தற்கால தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தினார்கள். மேலும் செல்வந்தர்களுக்கு நிதி வசதி இருந்ததினால் உயர்ரக விதைகளையும் பிற உள்ளீடுகளையும் பெருமளவில் பயன்படுத்தித் தங்கள் வருமானத்தைப் பெருக்கி வந்தார்கள். மேலும் செல்வந்தர்களுக்கு நிதி வசதி இருந்ததினால் உயர்ரக விதைகளையும் பிற உள்ளீடுகளையும் பெருமளவில் பயன்படுத்தித் தங்கள் வருமானத்தைப் பெருக்கி வந்தார்கள். மேலும் செல்வந்தர்களான நில



ஜமீன்தார்கள் போதிய உத்தரவாதங்களைக் கொடுத்துத் தங்களது விவசாயத் தொழிலுக்குத் தேவையான நிதியினை ஆங்காங்குள்ள நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுப் பயனடைந்தார்கள். ஏழை விவசாயிகளால் மேற்கண்டவாறு தரமான உள்ளீடுகளைத் தேவையான அளவுக்கு வாங்கி உபயோகிக்க முடியவில்லை. எனவே செல்வந்தர்கள் செல்வத்தில் உயர்ந்தார்கள். ஏழைகள் வறுமையில் வாழ்ந்தார்கள்.

தற்கால நவீன தொழில் நுணுக்கங்களைப் பயன்படுத்த வேண்டுமாயின் அதற்குப் போதிய அறிவாற்றல் தேவை. விவசாயத்தின் துவக்கத்திலிருந்தே தொழில் அறிவுத் திறன் பெற்றவர்களது ஆலோசனைகளும் மேற்பார்வைகளும் அவசியம் தேவை. செல்வந்தர்களான விவசாயிகள் வேளாண்மைத்துறையில் பயிற்சி பெற்றவர்களது சேவைகளைப் போதிய அளவில் பெற்று பயன்படுத்தி வந்தார்கள். ஏழை விவசாயிகளால் முடியவில்லை. நவீன தொழில் நுட்பங்களையும் ஏற்ற அளவுக்குப் பயன்படுத்த ஆற்றல் பெற முடியவில்லை.

### 2. நாடு முழுவதும் ஒரே சீரான வளர்ச்சி உருவாகவில்லை

இந்தியா நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் ஒரே சீரான வளர்ச்சி பசுமைப் புரட்சியால் ஏற்படவில்லை. வட்டாரங்களுக்கிடையே வளர்ச்சி வீதம் வளர்ந்திருந்தது. சில பகுதிகளில் தளர்ந்திருந்தது. வடக்கே, கங்கை, சிந்து நதிகள், தெற்கே கோதாவரி நதிகள் பாய்கின்ற பகுதிகளில் நீர் வளம் மிகுந்திருப்பதால் வளர்ச்சி வீதம் நூற்றுக்கு நூறாக பெருகியது. இப்பகுதிகளில் நீர்ப்பாசன வசதி போதுமானதாக இருந்ததால் உயர்ரக விதைகள் விதைக்கப்பட்டு அதிக விளைச்சல்களை அடைந்தன. பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் பசுமைப் புரட்சியால் பெரிதும் நன்மையடைந்தன. சில பகுதிகளில் வளர்ச்சி வீதம் விருத்தியடையவில்லை. உயர்ரக விதைகளைப் பற்றிய தகவல் கிடைக்காமை, நீர்ப்பாசன வசதியின்மை, பயிர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்காமை, ஏற்றத்தரமான உரங்களைப் பயன்படுத்தாமை, விவசாயிகளின் போக்கு போன்ற காரணங்களால் பசுமைப் புரட்சி இப்பகுதிகளில் வெற்றி பெறவில்லை. பசுமைப் புரட்சியினால் ஏற்கனவே செல்வ நிலையிலுள்ள மாநிலங்கள்தான் மேலும் மேலும் நன்மைகள் பெற்றன.



### பசுமைப் புரட்சியின் குறைபாடுகள்

1. பசுமைப் புரட்சி சில மாநிலங்களில் தான் மிக ஊக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது.
2. பசுமைப் புரட்சி முதலாளித்துவ வேளாண்மை முறையைத் தோற்றுவிக்குமாதலால் இந்தியாவிற்கு ஏற்றதல்ல.
3. வேளாண்மையில் உயர்ரக விதைகள், உரங்கள், நவீன கருவிகள் போன்ற உள்ளீடுகள் விலை மிக அதிகம். எனவே சிறு விவசாயிகளும் ஏழை விவசாயிகளும் வேளாண்மையில் இப்புதிய திட்டத்தைப் புகுத்த முடியவில்லை. செல்வந்தர்களான விவசாயிகள் பசுமைப் புரட்சியினால் நன்மையடைந்தனர்.
4. உணவுத் தானியங்களில் கோதுமைச் சாகுபடி நெல் மற்றும் பிற பயிர்களின் சாகுபடியை விட அதிகமாக இருந்தது. எல்லா தானியங்களின் உற்பத்திக்கும் ஒரே சீராக அமையவில்லை.
5. விலையுயர்ந்த டிராக்டர்கள், விவசாயக் கருவிகள் மனிதர்களது உழைப்பிற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டதால் வேளாண்மைத் துறையில் வேலையில்லாத் திண்டாட்டமும் தலைக்காட்ட ஆரம்பித்தது. எனவே மனித உழைப்பினை மிச்சப்படுத்தி விலையுயர்ந்த தொழிற் கருவிகளைப் பயன்படுத்தும் இயல்பு, இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகமான நாடுகளுக்குப் பொருந்தாது.
6. பசுமைப் புரட்சியினால் எல்லா மாநிலங்களும் நன்மைகளைப் பெறவில்லை. சில மாநிலங்களில் மிகப் பெரிய நன்மைகளைப் பெற்றன. பல மாநிலங்கள் பயனடையவில்லை.
7. பசுமைப் புரட்சியின் விளைவுகள் அல்லது பயன்கள் நீடித்திருக்கவில்லை.
8. விவசாயிகளில் பலர் படிப்பறிவில்லாதவர்கள். அவர்களுக்கு தற்கால தொழில் நுட்ப முறைகளைச் செயல்படுத்த ஏற்ற ஆற்றலில்லை. இதன் காரணமாக உற்பத்தியில் சரிவு ஏற்படலாயிற்று.

**வினா**

1. பசுமைப் புரட்சியினால் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பொருளாதார, சமுதாய விளைவுகளைத் தெளிவாக விளக்குக.

| | | | |
|---|---|---|---|
| 1911 | 39.0 | 60.0 | 1.0 |
| 1921 | 39.0 | 60.0 | 1.0 |
| 1931 | 38.0 | 60.0 | 2.0 |
| 1951 | 37.0 | 57.0 | 6.0 |
| 1961 | 41.0 | 53.0 | 6.0 |
| 1971 | 41.0 | 53.0 | 5.0 |
| 1981 | 40.0 | 54.0 | 6.0 |
| 1991 | 40.0 | 55.0 | 5.0 |

1981-ல் 0-14 வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை விழுக்காடு 40. இது முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் குறைவு. இதற்கு முக்கியக் காரணம் அதிகப் பிறப்பு வீதமேயாகும். குழந்தை இறப்பு வீதம் சமீப காலத்தில் குறைந்துள்ளதும் இதற்கு மற்றுமொரு முக்கியக் காரணமாகும். அதிக விழுக்காடு குழந்தைகள் பயனற்ற நுகர்வோர்களாகவே உள்ளனர். எனவே பயனற்ற நுகர்வோர் விழுக்காட்டைக் குறைக்க பிறப்பு வீதத்தைக் குறைப்பது மிக மிக அவசியமாகும்.

மக்கள் பிறக்கும் போது தாங்கள் எவ்வளவு காலம் உயிர் வாழுவோம் என்று எதிர்பார்க்கிறார்களோ அதுவே சராசரி ஆயுட்காலம் என அழைக்கப்படுகிறது. அது இறப்பு வீதம் அதிகமாயிருந்தால் மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவாகவும் குறைவாயிருந்தால் மக்களின் சராசரி ஆயுட்காலம் அதிகமாகவும் இருக்கும். ஓர் இந்தியனின் சராசரி ஆயுட்காலம் பற்றிய விவரங்களைக் கீழே காண்போம்.

| ஆண்டு | சராசரி ஆயுட்காலம் |
|---|---|
| 1951 | 32 |
| 1961 | 41 |
| 1971 | 53 |
| 1981 | 54 |
| 1991 | 60 |

அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளின் சராசரி ஆயுட்காலம் 72 ஆகும்.



இவற்றோடு ஒப்பிடுகையில் நாம் பின்தங்கிய நிலையில் உள்ளோம் என்பது புலனாகும். இந்தியாவில் ஆண், பெண் இருபாலரும் தனித்தனியே பெறவிருக்கும் சராசரி ஆயுட்காலம் பற்றிய மதிப்பீடுகளை பற்றி ஆராய்வதும் இங்கு அவசியம். ஏனெனில் யாருக்கு சராசரி ஆயுட்காலம் குறைவாக உள்ளது என்றும் அதற்குரிய காரணங்களை அறிந்து அவற்றை எவ்வாறு களையலாம் என்பதை அறிந்து கொள்ளவும் இது உதவும்.

**சராசரி ஆயுட்காலம் பற்றிய முன்னோக்கு மதிப்பீடு**

| காலம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 1976-81 | 53.0 | 52.0 |
| 1981-86 | 55.0 | 54.0 |
| 1986-91 | 58.0 | 57.0 |
| 1991-96 | 60.0 | 60.0 |
| 1993 | 64.8 | 65.8 |

மொத்த மக்கள் தொகையில் ஆயிரம் ஆண்களுக்கு எத்தனை பெண்கள் உள்ளனர் என்பதை பால் விகிதம் என்பர். பால் விகிதம் பெண்களுக்குப் பாதகமாகவே இருந்துள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை மூலம் இந்தியாவில் 1901 முதல் 1991 வரை உள்ள பால் விகிதம் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

**இந்தியாவில் பால் விகிதம் (1901 முதல் 1991 வரை)**

| மக்கள் கணிப்பு ஆண்டு | பால் விகிதம் |
|---|---|
| 1901 | 972 |
| 1911 | 964 |
| 1921 | 955 |
| 1931 | 950 |
| 1941 | 945 |
| 1951 | 946 |
| 1961 | 941 |
| 1971 | 930 |
| 1981 | 935 |
| 1991 | 932 |



அட்டவணையிலிருந்து பால் விகிதம் குறைந்து வந்துள்ளதை அறியலாம். ஆனால், 1981ஆம் ஆண்டில் பால் விகிதம் குறையாமல் சிறிது அதிகரித்துள்ளது.

**பாலின அடிப்படையில் மக்கள் பகிர்வு**

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பாலின அடிப்படையில் மக்கள் பகிர்வில் உள்ள வேறுபாடுகளை விளக்குவது மிகவும் கடினமான காரியமாகவே இருந்திருக்கின்றது. பொதுவாக மேலை நாடுகளில் பாலின விகிதப்போக்கு பெண்களுக்குச் சாா்பாகவும் ஆசியாவிலும் குறிப்பாக இந்தியாவில் ஆண்களுக்குச் சார்பாகவும் இருந்து வந்துள்ளது. இதனைக் கீழ்க்காணும் அட்டவணை நன்கு தெளிவுபடுத்தும்.

**1000 ஆண்களுக்குப் பெண்களின் எண்ணிக்கை (1961-1991)**

| மாநிலத்தின் பெயர் | 1961 | 1971 | 1981 | 1991 |
|---|---|---|---|---|
| 1. பீகார் | 994 | 954 | 946 | 942 |
| 2. ஒரிஸ்ஸா | 1001 | 988 | 981 | 980 |
| 3. ஆந்திரா | 981 | 977 | 975 | 970 |
| 4. தமிழ்நாடு | 992 | 978 | 977 | 975 |
| 5. கேரளா | 1022 | 1016 | 1034 | 1039 |
| 6. கர்நாடகா | 959 | 957 | 963 | 970 |
| 7. மத்தியப் பிரதேசம் | 953 | 941 | 941 | 940 |
| 8. அஸ்ஸாம் | 876 | 896 | 901 | 915 |
| 9. மேற்கு வங்காளம் | 878 | 891 | 911 | 915 |
| 10. ராஜஸ்தான் | 908 | 911 | 919 | 924 |
| 11. உத்தரப் பிரதேசம் | 909 | 879 | 885 | 889 |
| 12. பஞ்சாப் | 854 | 865 | 879 | 879 |
| 13. ஹரியானா | | 867 | 870 | 872 |
| 14. ஜம்மு காஷ்மீர் | 878 | 878 | 892 | 895 |
| 15. ஹிமாசலப் பிரதேசம் | | 958 | 973 | 985 |
| 16. குஜராத் | 940 | 934 | 942 | 948 |
| 17. மகாராஷ்டிரா | 936 | 930 | 937 | 942 |
| அகில இந்திய சராசரி | 941 | 930 | 934 | 943 |



கேரளாவில் மட்டுமே பால் விகிதம் 1034 ஆக உள்ளது. ஒரு குறிப்பிடத்தக்க அம்சம், மற்ற எல்லா மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் ஆண்களின் எண்ணிக்கையை விடப் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

பீகார், ஒரிஸ்ஸா, ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, மத்தியப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பால் விகிதம் அதிகமாக உள்ளது. பீகார், ஒரிஸ்ஸா மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பால் விகிதம் குறைந்து காணப்படுவதற்கு முக்கியக் காரணம் வேறு மாநிலங்களுக்கு மக்கள் குடிபெயர்வதே ஆகும். கர்நாடகாவைத் தவிர ஒரிஸ்ஸா, ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பால் விகிதம் 1961ல் இருந்ததைக் காட்டிலும் 1981ல் குறைந்து காணப்படுகிறது. அஸ்ஸாம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய 7 மாநிலங்களில் பால் விகிதம் அகில இந்திய சராசரியைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. ஹிமாசலப் பிரதேசத்தில் மட்டும் பால் விகிதம் அகில இந்திய சராசரியை விட அதிகமாக உள்ளது. 1961 முதல் 1981 வரையிலான காலத்தில் பால் விகிதம் அதிகரித்தே வந்துள்ளது. குறிப்பாக மேற்கு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் பால் விகிதம் அதிகரிப்பதற்குக் காரணம் மற்ற மாநிலங்களிலிருந்து தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குடிபெயர்வதாலும், கல்கத்தாவில் தொழில்துறை தொழிலாளர்களுக்கான தேவை அதிகரித்ததுமே ஆகும்.

ஆனால், குஜராத்திலும், மகாராஷ்டிரத்திலும் பால்விகிதம் அகில இந்திய சராசரியை விட மிக அதிக அளவில் அதிகரிக்கவில்லை. இருப்பினும் 1961-71ஆம் காலத்தில் இந்த மாநிலங்களிலும் பால் விகிதம் குறைந்துள்ளது.

ஆண்களின் கணிசமான விகிதத்தினர் தங்கள் குடும்பங்களைக் கிராமப் புறங்களில் விட்டுவிட்டு வேலை தேடுவதற்காக நகர்ப்புறங்களுக்குச் சென்று விடுதல், நகர்ப்புறங்களில் வீட்டு வசதி குறைவு. எனவே, ஆண்கள் மட்டும் அங்குச் செல்கின்றனர். மேலும் பெண்களுக்கு ஏற்ற பயனுள்ள போதுமான வேலைகள் நகர்ப்புறங்களிலும் கிடைக்காமை. அதே சமயம் கிராமங்களில் பெண்கள் விவசாயத்திலும் கால்நடை பராமரிப்பிலும் ஈடுபட்டுத் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள எண்ணுதல். 11 வயது முதல் 19 வயது வரை உள்ளவர்களின் பால்விகிதம் குறைந்தும் 20-24, 25-29 வயதுப் பிரிவினர்களில் பால் விகிதம் அதிகமாகவும்

வருகிறது. 1921 முதல் 1981 வரையிலான காலத்தில் தனிநபர் சாகுபடி செய்யும் நிலப்பரப்பானது குறைந்து கொண்டே வருகிறது. நில அளவானது 1.11 ஏக்கரிலிருந்து 0.62 ஏக்கராகக் குறைந்து ஏறத்தாழ 44 விழுக்காடு அளவு குறைந்துள்ளது. இதை ஈடு செய்ய ஒரு ஏக்கர் உற்பத்தித் திறனை அதிகரிக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு செயல்பட வேண்டியது இன்றியமையாததாகும். 1956 முதல் 1982 முடிய உள்ள காலத்தில் நிகர உணவு தானியங்களின் அளிப்பு 53 மில்லியன் டன்களிலிருந்து 117 மில்லியன் டன்களாக உயர்ந்தது. இது 81 விழுக்காடு அதிகரிப்பைக் காட்டுகிறது. ஆனால் அதே காலத்தில் மக்கள் தொகையானது 397 மில்லியன்களிலிருந்து 704 மில்லியன்களாக உயர்ந்தது. அதாவது ஏறத்தாழ 74 விழுக்காடு அதிகரித்தது. ஆகவே விளைவாக தனிநபர் ஒருவருக்குக் [உள் நாட்டில்] கிடைக்கும் உணவு தானியங்கள் 431 கிராம்களிலிருந்து 454 கிராம்களாகத்தான் உயர்ந்தது. இவ்வதிகரிப்பு மிகவும் சொற்பமானதாகவே உள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணமாக 1979 இல் மட்டுமே தனி நபரின் உணவு தானிய அளவு 474 கிராம்களாக உயர்ந்தது. இவ்வதிகரிப்பு மிகவும் சொற்பமானதாகவே உள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணமாக 1979ல் மட்டுமே தனி நபரின் உணவு தானிய அளவு 474 கிராம்களாக உயர்ந்தது. மேலும் கிராமப்புறங்களில் மக்கள் தொகை அதிகரிப்பு அதிகமாகக் காணப்படுவதால் மொத்த உணவுத் தானிய உற்பத்தியில் கிராமப்புற குடும்பங்களின் நுகர்வு அதிகரித்து மிகக் குறைவான அளவு உபரியைத்தான் நம்ம முடிந்தது. எனவே மேற்சொன்ன காரணங்கள் குடும்ப எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை நன்கு வலியுறுத்துகின்றன.

இந்திய மக்கள் தாம் இரு வகைகளாக பிரிக்கலாம். அவை 1) பயனளிக்கும் நுகர்வோர் மற்றும் 2) பயனிலா நுகர்வோர். பயனளிக்கும் நுகர்வோர் என்ற சொற்றொடர் தேசிய வருமானத்தை அதிகரிக்க உதவும் உழைக்கும் வர்க்கத்தை/தொழிலாளர்களை குறிக்கின்றது. பயனிலா நுகர்வோர் என்ற சொற்றொடர் வேலையின்றியிருக்கும் அல்லது வேலையில் இல்லாத நபர்களை குறிக்கும். குழந்தைகள் முதியோர் மற்றும் 15-59 வயதுப் பிரிவில் ஒரு பிரிவினர் ஆகியோரைக் குறிக்கும்.

பொதுவாக பயனிலா மக்கள் - பயனளிக்கும் மக்களிடையே உள்ள விகிதம் 1961-81 காலத்தில் குறைந்துள்ளது. 1961ல் பயனிலா மக்களின் விழுக்காடு 57 ஆக இருந்தது. அது 1981ல் 62.4 ஆக



உயர்ந்துள்ளது. மொத்த மக்கள் தொகையில் 42 விழுக்காடாகும். எனவே அதிகமாக வளர்ந்து வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை கருதி சத்துணவு, மருத்துவ வசதி, பொது சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற வசதிகளைக் கொடுத்து கவனிக்க வேண்டிய சுமையை அதிகரிக்கின்றது. பொதுவாக இந்தியாவில் 15-20 விழுக்காடு மக்கள் சார்ந்திருப்போராக இருந்து பெரும் சுமையைத் திணிக்கின்றனர். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 7 மில்லியன் மக்கள் வேலையின்றி இருந்தனர். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட நகலின்படி 1980ல் 20.7 மில்லியன் மக்கள் வேலையின்றி இருந்தனர். இது மொத்த உழைக்கும் வர்க்கத்தில் 7.74% ஆகும். கடந்த 42 ஆண்டுகளில் திட்டங்கள் மக்களின் நிகர அதிகரிப்புக்கு வேலை அளிக்க முடியவில்லை. இப்பிரச்சினையைத் தீர்க்க நமது நாட்டின் இத்தகைய வளங்களில் ஒரு கணிசமான பகுதியைச் செலவு செய்ய வேண்டியிருக்கும். இதுபோல எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பெருகும் நிகர மக்கள் தொகைக்குக் கல்வி, மருத்துவ வசதி, வீட்டு வசதி, போக்குவரத்து மற்றும் இதர வசதிகளை அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனால் [உபரியாக இருக்கும்] சேமிப்பும் முதலீடும் குறைந்து விடும். இக்காரணத்தால் வருமானம் மற்றும் செல்வப் பகிர்வில் எவ்வித மாற்றமுமின்றி ஏற்றத்தாழ்வான நிலை தொடர்ந்து அப்படியே நிலைபெற்றிருக்கும். தற்போது இருக்கும் உண்மை தலா வருமான மட்டம் பராமரிக்கப்பட வேண்டுமானால் தேசிய வருமானமும் மக்கள் தொகை வளர்ச்சி வீத அளவுக்கு அதிகரிக்க வேண்டும். இந்தியாவில் தற்போது ஆண்டுக்கு மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 2.5 விழுக்காடாகும். ஒரு நிலையான உண்மை தலா வருமானத்தைப் பராமரிக்க தேசியவருமானமும் ஆண்டுக்கு 2.5 விழுக்காடு அதிகரிக்க வேண்டும். இதனை அடைய மூலதன முதலீடு தேவை. தற்போது இந்தியப் பொருளாதாரத்திற்கான மூலதன - உற்பத்தியை அடைய 5.5 அலகுகள் மூலதனம் தேவைப்படும் என்பதை மூலதன உற்பத்தி விகிதம் உணர்த்துகிறது. இவ்வாறு ஆண்டுக்குத் தேசிய வருமானம் 2.5 விழுக்காடு அதிகரிக்க வேண்டுமானால் மூலதனத் திரட்சி 13.8 விழுக்காடு அதிகரிக்கும் அளவிற்கு இருப்பது மிகவும் அவசியமானது.

வளர்ந்த நாடுகளில் தலா வருமானத்தை நிலையான மட்டத்தில் வைக்க மொத்த தேசிய உற்பத்தியில் முதலீடு செய்யப்படும் விகிதம் 5 விழுக்காட்டிற்குக் குறைவானதாகும். இது இந்தியா, கொலம்பியா, மொராக்கோ, பிரேசில், கானா மற்றும் மலேஷியா போன்ற வளரும் நாடுகளில் 10 விழுக்காட்டிற்கு மேல் உள்ளது. இதன் பொருள்



என்னவெனில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மிகச் சொற்பமான மூலதனமே மீதமுள்ளது என்பதாகும். பொருளாதார வளர்ச்சிப் பாதையில் மக்கள் தொகை வெடிப்பு ஒரு மாபெரும் தடைக்கல்லாக உள்ளது என்று நிபுணர்கள் பலர் கருத்துரைக்கின்றனர். அடுத்த 30 ஆண்டுகளில் தற்போதுள்ள மக்கள் தொகை இரட்டிப்பாகும் என்று டாக்டர் எஸ்.என். அகர்வாலா கூறுகிறார். ஏற்கனவே நமது நாட்டில் 15 முதல் 20 மில்லியன் மக்கள் வரை வேலையின்றி உள்ளனர். பள்ளிக்குச் செல்லும் வயதுள்ள குழந்தைகள் பள்ளியில் சேரவில்லை. தனி நபர் உணவு நுகர்வு அவ்வளவு சிறப்பாக உயரவில்லை. ஏறத்தாழ 1 மில்லியன் வீடுகள் பற்றாக்குறையாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் நம் நாட்டு மக்கள் தொகையுடன் கூடுதலாக இருக்கும் 13 மில்லியன் மக்களுக்கு 1 இலட்சத்து 27 ஆயிரம் பள்ளிகளும் 3 இலட்சத்து 73 ஆயிரம் பள்ளி ஆசிரியர்களும், 25 இலட்சத்து 9 ஆயிரம் வீடுகளும், 40 இலட்சம் வேலைகளும் 19 கோடி மீட்டர் துணியும், ஒரு கோடியே 25 இலட்சம் குவிண்டால் உணவும் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



பாடம் - 5

## வேலையில்லாப் பிரச்சினை

### முகவுரை

வேலையில்லாப் பிரச்சினை நம் நாட்டை மிகவும் கொடிய நிலையில் பாதித்துக் கொண்டிருக்கிறது. எழுபதாம் ஆண்டுகளில் மிகவும் அதிகமாகத் தாக்கியது. நம் நாட்டில் பலர் வேலையில்லாமல் தவிக்கின்றனர். பலர் குறைந்த வேலையில் உள்ளனர். அனைத்துத் தகுதிகளும் திறமைகளும் பெற்றிருந்தும் வேலை செய்யும் ஆர்வத்துடன் துடித்துக் கொண்டிருக்கும் பல ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்புகள் கொடுக்கப்படுவதில்லை. உழைப்பாளர் வர்க்கத்தினர் வேலையில்லாமையால் சோம்பலில் வாடுகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்நிலை வேலையில்லாப் பிரச்சினையை விட மிகவும் அபாயகரமானது. உண்மையில் நாட்டின் வளர்ச்சிக்கு இந்நிலை முட்டுக்கட்டை போடுகின்றது. மேலும், இது நாட்டின் சமுதாயப் பிரச்சினையைத் தூண்டி விடுகின்றது.

### பிரச்சினையின் இயல்பு

வளர்ச்சி அடையா நாடுகளில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையின் தன்மைக்கும், வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள தன்மைக்கும் பெருத்த வேற்றுமை உண்டு. வளர்ச்சியடைந்த நாடுகளில் தேவையை வலியுறுத்தாததினால் வேலையில்லாப் பிரச்சினை உருவாகின்றது எனக் கூறியுள்ளார். ஆனால், வளர்ச்சியடையா நாடுகளில் வெளிப்படையாகவே வேலையின்மை, மறைமுகமான வேலையின்மை, போதிய அளவு வேலையின்மை, காலத்தின் அடிப்படையிலான வேலையின்மை நிலவுகின்றன.

இந்தியாவில் இரு வகையான வேலையின்மை உள்ளன. ஒன்று வெளிப்படையான வேலையின்மை, மற்றொன்று கல்வி கற்றோர் வேலையின்மையாகும். இவை இரண்டு பிரச்சினைகளும் கிராமப்புற பிரச்சினைகளை நிர்ணயிக்கின்றன. கிராமப்புறங்களிலே உழைப்பாளர்க்குப் போதிய வருமானம் கிடைப்பதில்லை. மறைமுகமான வேலையின்மை வேளாண்மையில் மிகச் சாதாரணம். நகர்ப்புற வேலையின்மை இருவகைப்படும் (1) கைத் தொழிலாளர்களின் வேலையின்மை (2) கல்வி கற்றவர்களின் வேலையின்மை என்பனவாகும். 1978ஆம் ஆண்டில் வேலையில்லாமலிருந்த 116

கடலிலே பிறந்து கடல் வாழ்க்கையிலே தவித்து கடலிலே நாச மரிக்கின்றான்' என்றதொரு பழமொழி உண்டு.

3. **இயற்கையின் சீற்றங்கள்:** பருவமழை பெய்யாவிட்டால் வேளாண்மை மிகுதியும் பாதிக்கப்படுகின்றது. மோசமான காலநிலை, மழையின்மை, வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சக்திகள் வேளாண்மையின் உற்பத்தித் திறனை மிகவும் வலுவிழக்கச் செய்துவிடுகின்றன.

4. **போதிய கருவிகள் சாகுபடி சாதனங்களின்மை:** இந்திய விவசாயிகளில் பெரும்பாலானோர் பாரம்பரிய மரக் கலப்பைகள், மாடுகளைப் பயன்படுத்தியே வேளாண்மை நடத்துகின்றனர். வேளாண்மை உற்பத்திக்கு இவைகள் ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதில்லை. இதனால் வேளாண்மையில் உற்பத்தித் திறன் மிகவும் மந்தமான நிலையில் உள்ளது.

5. **மண் வளமின்மை:** பெருகி வரும் மக்கள் தொகையின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய மண் வளமற்ற நிலங்களில் ஏழை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். அதனால் விளைச்சல் மிகக் குறைவாகவே கிடைக்கின்றது. வேளாண்மையில் உற்பத்தித் திறன் குறைவுக்கு இது மற்றொரு காரணமாகும்.

6. **மண் அரிப்பு நிலை:** மிகவும் செழிப்பான நிலங்களும் கூட மண் அரிப்பினால் பாதிக்கப்படுகின்றன. இவைகளில் சாகுபடி செய்தால் விளைச்சல்கள் குறைகின்றன. இவ்வாறு உற்பத்தித் திறன் குறைவடைகின்றது.

7. **விளை நிலங்கள் வீட்டு மனைகளாக்கப்படுதல்:** தற்காலத்தில் விளை நிலங்களை வீட்டு மனைகளுக்காகவும் மாற்று உபயோகங்களுக்காகவும் பயன்படுத்துகின்றனர். மிகச் சிறப்பான விளை நிலங்களிலும் வீடுகளை அமைத்து விடுகின்றனர். இதனால் சாகுபடி செய்ய வேண்டிய நிலங்களின் அளவு மிகவும் குறைந்து விடுகின்றது.

8. **கல்வி அறிவின்மை:** விவசாயிகளில் பலர் போதிய கல்வியறிவு இல்லாதவர்கள். அவர்களிடம் தொழில் நுட்ப அறிவு அதிகமில்லை. அவர்களால் நவீன முறைகளையும், கருவிகளையும் பயன்படுத்த முடிவதில்லை. இவை வேளாண்மை உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கின்றது.



9. **பாரம்பரிய விவசாயத் தொழில்:** நீண்ட காலமாகவே விவசாயம் போதிய வருமானம் கிடைக்காததொரு தொழிலாக இருந்து வருகிறது. விவசாயிகளுக்கு மிகக் குறைந்த வருமானம் தான் கிடைக்கின்றது. இதனால் அவர்கள் மேலும் சாகுபடி நிலங்கள் வாங்க முடிவதில்லை. தரமான விதைகள், நவீன உரங்கள், புதுமுறை கருவிகள் போன்றவைகளையும் விவசாயிகள் போதுமான அளவு வாங்க முடியாத வறுமை நிலையில் வாடுகின்றனர். இதனால் வேளாண்மை உற்பத்தியில் தேக்க நிலை ஏற்படுகிறது.

10. **நீர்ப்பாசன வசதிக் குறைவு:** தண்ணீர் வசதி, சாகுபடி செய்வதற்கு வேண்டிய மிக அவசியமான தேவையானதொன்றாகும். போதிய நீர்ப்பாசன வசதியில்லாததால் பல விளை நிலங்களில் சாகுபடி செய்ய முடிவதில்லை. நிலப்பகுதிகளுக்கு தேவையான நீர்ப்பாசன வசதி கிடைக்குமானால் வேளாண்மை உற்பத்தி விருத்தியடையும்.

11. **போதிய கண்காணிப்பின்மை:** மிகப் பரந்து கிடக்கின்ற நிலப்பரப்புகளில் வேளாண்மை ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்ற இடங்களில் பயிர் செய்ய வேண்டியுள்ளது. அதனால் அவைகளைச் சரிவர கண்காணிக்க முடிவதில்லை. கண்காணிப்புக் குறைவு வேளாண்மையில் உற்பத்தியை மிகவும் பாதிக்கின்றது.

**வேளாண்மை உற்பத்தித் திறனை ஊக்குவிப்பதற்கான ஆலோசனைகள்**

வேளாண்மையில் உற்பத்தித் திறன் தொடர்ந்து குறைந்து கொண்டே போனால், பொருளாதார நெருக்கடி உருவாகி நாட்டைச் சீர்குலைத்துவிடும். கீழ்க்கண்ட வழி முறைகளைக் கையாள்வதினால் வேளாண்மை உற்பத்தி பெருகும் வாய்ப்பு உள்ளது.

1. **மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைத்தல்:** வேகமாகப் பெருகி வருகின்ற மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்பொழுது வேளாண்மையில் உபரியாய் உள்ள தொழிலாளர்களைக் குறைத்து விடலாம்.

2. **கடன் வசதி:** விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகளைக் குறைந்த வட்டிக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் விவசாயத்துக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்கு எளிதாயிருக்கும்.

3. **முறையான பயிற்சி:** கல்வி அறிவில்லாத விவசாயிகளுக்கு நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவதிலும், உயர்ரக விதைகள் உரங்கள்



இவைகளை கண்டறிந்து பயன்படுத்துவதிலும் போதிய பயிற்சி அளித்தல் வேண்டும்.

4. **அரசு நடவடிக்கை:** விளை நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றப்படுவதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5. **இயற்கையின் சீற்றங்கள்:** வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு வறட்சி, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கையின் சீற்றங்களை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

6. **நீர்ப்பாசன வசதி:** வேளாண்மை உற்பத்தியை விருத்தி செய்வதற்கு போதுமான சிறிய பெரிய அளவிலான நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தர வேண்டும்.

7. **ஆதரவு விலை:** ஆதரவு விலை நிர்ணய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டால் விவசாயிகளுக்கு விளைச்சலைப் பெருக்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் கிடைக்கும்.

8. **கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துதல்:** கிராமப் புறங்களில் சங்கங்களை ஏற்படுத்தி அவைகளின் மூலமாக உயர்ரக விதைகள் உரங்கள் குறைந்த விலையில் பெருவாரியாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

9. **கூட்டு வேளாண்மை முறை:** வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு கூட்டு வேளாண்மை முறைகளைக் கையாள வேண்டும். இத்திட்டத்தின் கீழ் சிதறிக் கிடக்கின்ற விளை நிலங்கள் பெரிய நிலத் தொகுப்பாக இணைக்கப்படுகின்றன. இதனால் பெருமளவில் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு உண்டாகின்றது. அத்துடன் நவீன முறை சாகுபடி முறைகளும், உயர்ரக விதைகளும் ரசாயன உரங்களும் பயன்படுத்தும் முறைகளும் கையாளப்படும் போது வேளாண்மை உற்பத்தி பெருமளவில் அதிகரிக்கும்.

**வினாக்கள்**

1. இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் இந்தியாவின் பங்கினை எழுதுக.
2. விவசாய உற்பத்தி திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்களையும் அவைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் எழுதுக.



பாடம் – 8

# நிலச் சீர்திருத்தம்

**முகவுரை**

வேளாண்மைத் துறையில் இந்தியா பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. இதற்கு வேளாண்மை உள்ளீடுகளாகிய உயர்ரக விதை, நீர்ப்பாசனம், மற்றும் இரசாயன உரங்களிலுள்ள குறைபாடுகளும் மற்றும் அமைப்புகளில் உள்ள குறைபாடுகளுமே காரணமாக அமைகின்றன. நிலச்சீர்திருத்தத்தின் மூலமாக அதிக அளவு நிலவளங்களை சரியான முறையில் பயன்படுத்த முடிகிறது. வேளாண்மை முறையில் காணப்படும் சுரண்டலையும், சமூக அநீதிகளையும் ஒழிப்பதற்கு நிலச்சீர்திருத்தம் உதவுகிறது.

**நிலச்சீர்திருத்தங்களுக்கான அவசியம்**

1. உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நிலச்சீர்திருத்தம் ஒரு விலையில்லா நடவடிக்கையாகும். எனவே இது மிகவும் அவசியமாகும்.
2. இடைத் தரகர்களால் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு நிலச்சீர்திருத்தம் மிகவும் அவசியமாகும்.
3. நிலங்கள் சிறிய, சிறிய பகுதிகளாகவும், பல இடங்களில் சிதறுண்டும் காணப்படுவதால் புதிய சாகுபடி முறைகளைப் பயன்படுத்த முடியவில்லை.
4. விளைச்சல் நிலங்கள் பெரும்பாலும் குத்தகை முறையில் பயிர் செய்யப்படுகின்றன.
5. நிலத்திற்குச் செலுத்த வேண்டிய வாரம் அதிகமாக இருப்பதால் விவசாயிகளின் வருவாய் மிகவும் பாதிக்கப்படுகிறது.
6. பல லட்ச விவசாயிகளுக்குச் சமூக நீதி ஏற்படுத்த நிலச்சீர்திருத்தம் மிகவும் அவசியமாகும்.

**நிலச்சீர்திருத்தத்தின் குறிக்கோள்கள்**

நிலச்சீர்திருத்தத்தின் குறிக்கோள்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரித்தல், 2. சமூக நீதியை ஏற்படுத்தல்.

வருவாய் வளரும் பொருளாதாரத்திற்குப் பொருத்தமானது

**3. நாட்டு வருவாய் (National Income or NI):** ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஆண்டில் அந்நாட்டின் உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், தொழிலமைப்பு ஆகியவை வாரம், கூலி, வட்டி, இலாபம் என்று பெறும் வருமானங்களின் கூட்டுத் தொகையே நாட்டு வருவாய் (National Income) எனப்படும். இது நிகர நாட்டு உற்பத்திக்குச் சமமாக இருக்கும். இதன் மதிப்பு உற்பத்திக் காரணிகள் விலைகளின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது. இதுவே உண்மையான நாட்டு வருவாய் ஆகும்.

மொத்த நாட்டு உற்பத்தியும், நிகர நாட்டு உற்பத்தியும் நாட்டின் வருவாயை உற்பத்தி நோக்கில் கணிக்கின்றன. ஆனால் உண்மையான நாட்டு வருவாய் நாட்டின் வருவாயை பகிர்வு நோக்கில் கணிக்கின்றது.

**4. தனி நபர் வருவாய் (Personal Income):** மொத்த தேசிய வருவாயைக் கணிக்க வேண்டும். அதிலிருந்து கூட்டுப் பங்கு நிறுவனங்கள் பகிர்ந்து கொடுக்காத லாபம், அவற்றின் வருமான வரி, சமுதாயக் காப்பீட்டிற்காகச் செலுத்துதல், அரசின் மாற்றுக் கொடுப்பல்கள், வாணிப மாற்றுக் கொடுப்பல்கள், அரசு செலுத்தும் நிகர வட்டி முதலியவற்றைக் கழித்து, பின்னர் சமுதாயக் காப்பீட்டு நன்மைகள், அரசு பத்திரங்களிலிருந்து கிடைக்கும் வட்டி போன்றவற்றைச் சேர்த்துக் கொண்டால் தனி நபர் வருவாய் கிடைக்கும். பின்வரும் சமன்பாட்டைப் பயன்படுத்தி தனிநபர் வருவாயைக் கணிக்க வேண்டும்.

தனி நபர் வருவாய்-நாட்டு வருவாய் (சமுதாயக் காப்பீட்டிற்காகச் செலுத்துதல் கூட்டுப் பங்கு நிறுவனங்களின் வருமான வரி கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பகிர்ந்து கொடுக்காத லாபம் மாற்றுச் செலுத்தல்கள்).

**5. செலவிடத்தக்க வருவாய் (Disposable Income or DI):** தனி மனிதர்களின் வருவாயிலிருந்து நேர்முக வரிகளைக் கழித்து விட்டால், எஞ்சியிருப்பது செலவிடத்தக்க வருவாய் எனப்படும். இதில் தனி மனிதர்கள் நுகர்ச்சிக்காக செலவிட்டது போக எஞ்சியிருப்பதை சேமிக்கின்றனர்.



செலவிடத்தக்க வருவாய் = நுகர்ச்சி செலவு + சேமிப்பு (அ)
= தனி நபர் வருவாய் – நேர்முக வரிகள்

**தேசிய வருமானத்தைக் கணிக்கும் முறைகள்**

ஒரு நாட்டு வருவாயைக் கணிப்பதற்குப் பொதுவாகப் பின்வரும் மூன்று முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**1. உற்பத்தி முறை (Production Method):** இம்முறையில் ஒரு நாட்டில் நிலவும் அங்காடி விலைகளுக்கேற்ப ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் நிகரப் பண மதிப்பாகவே அந்நாட்டின் வருவாய் ஆகும். இம்முறைக்கு பொருள்-பணி முறை (Commodity - Service Method) உற்பத்தி முறை (Output Method), என்னும் வேறு பெயர்களும் உள்ளன.

இம் முறையில் ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் ஏற்படும் உற்பத்தி அளவின் அடிப்படையில் நாட்டு வருவாய் கணிக்கப்படுகிறது. உற்பத்தியாகும் பொருட்கள் பணிகள் ஆகியவற்றின் நிகரப் பண மதிப்பை பின்வரும் முறையில் கணக்கிடலாம்.

ஒரு நாட்டில் இயங்கி வரும் உற்பத்தித் துறைகளின் நிகர உற்பத்தி அளவின் மொத்தப் பண மதிப்பைக் காட்டினால் நாட்டு வருவாயைக் கணக்கிடலாம். அதாவது, பொருளாதாரத்தை வேளாண்மை, சுரங்கம், பேரளவு உற்பத்தி நிறுவனங்கள், சிற்றளவு உற்பத்தி நிறுவனங்கள், போக்குவரத்து, வாணிபம், செய்தித் தொடர்பு என்று பல்வேறு துறைகளாகப் பிரித்து, பின்னர் ஓராண்டு காலத்தில் ஒவ்வொரு துறையிலும் உற்பத்தியாகும் பண்டங்கள், பணிகளின் நிகரப் பண மதிப்பைக் கணக்கிட வேண்டும். ஒரு துறையினுடைய நிகரப் பண மதிப்பை அத்துறையின் உற்பத்தியின் மொத்தப் பண மதிப்பிலிருந்து அத்துறையானது பிற துறைகளிலிருந்து வாங்கிய பண்டங்கள், பணிகளின் மொத்தப் பண மதிப்பை கழிப்பதின் மூலம் காணலாம். இவ்வாறு காணப்படும் பல்வேறு துறைகளின் நிகரப் பண மதிப்புகளின் மொத்த நாட்டு வருவாயுடன் அயல் நாடுகளிலிருந்து பெறப்படும் நிகரப் பண மதிப்பைக் கூட்ட, மொத்த நாட்டு வருவாய் கிடைக்கும்.

**மொத்த நாட்டு வருவாயிலிருந்து தேய்மானத்தின் மதிப்பைக் கழிக்க, நிகர நாட்டு வருவாய் கிடைக்கும்.**



**சிறப்புகள்**

1) ஆண்டுதோறும் உற்பத்தி பற்றிய அனைத்து விவரங்களும் சேகரிக்கப்படும் நாடுகளில், இம்முறை சிறந்த பயனைத் தரும்.
2) இம்முறையின் மூலம் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் அறியப்படுகிறது.

**குறைகள்**

1) எல்லா நாடுகளிலும் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்கள் சரிவரக் கிடைப்பதில்லை.
2) தேய்மானத்தைத் துல்லியமாகக் கணக்கிட முடியாது.

இம்முறையைப் பயன்படுத்தும்போது பின்வரும் கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும்.

1) ஒரு பொருளின் மதிப்பு ஒரு முறை மட்டுமே சேர்க்கப்பட வேண்டும்.
2) உற்பத்தி முடிவடைந்து நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள பொருள்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்.
3) அங்காடி விலைகளினடிப்படையில் பொருட்களின் மதிப்புகள் கணக்கிடப்பட வேண்டும்.
4) வாணிப, உற்பத்திப் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தி நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும்.

**2. வருவாய் முறை (Income Method):** ஒரு நாட்டில் இருக்கின்ற தனி நபர்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் ஓராண்டு காலத்தில் பெறும் வருமானங்களைக் கூட்டுவதன் மூலம் நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும். உற்பத்திக் காரணிகள் ஓராண்டுக் காலத்தில் பெறுகின்ற வருமானங்களை கூட்டுவதாலும், நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும்.

இம்முறையைப் பயன்படுத்தும்போது பின்வரும் கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும்.

1) மாற்றுச் செலுத்துதல் (அன்பளிப்பு), பழைய வீடு, கார், இருப்பு, பங்கு பத்திரங்கள் இவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானங்கள் இவற்றைச் சேர்க்கக்கூடாது.



2) தொழிலதிபர்களைப் போன்ற உற்பத்திக் காரணிகளுக்குச் செலுத்தப்படும் சன்மானங்கள் சேர்க்கப்பட வேண்டும்.
3) வியாபார நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கப்படாத இலாபம் சேர்க்கப்பட வேண்டும்.
4) அரசு, வரித்துறைகள், வணிக நிறுவனங்களிலிருந்து பெறப்படும் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி நாட்டு வருவாயைக் கணக்கிட வேண்டும்.

**3. செலவு முறை:** ஒரு நாட்டில் ஓராண்டுக் காலத்தில் செய்யப்படும் செலவுகளையும், சேமிப்புகளையும் கூட்டுவதன் மூலம் நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும். இம்முறைக்கு செலவு - சேமிப்பு முறை என்று பெயர்.

இம் முறையைப் பயன்படுத்தும்போது பின்வரும் கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும்.

1) தனி நபர்கள், வியாபார நிறுவனங்கள் அரசுச் செலவுகள் சேர்க்கப்பட வேண்டும்.
2) முதலீட்டின் அளவு சேர்க்கப்பட வேண்டும்.
3) ஏற்றுமதியளவு சேர்க்கப்பட வேண்டும்.
4) இறக்குமதியளவு சேர்க்கப்படக் கூடாது.

இம்முறையைப் பயன்படுத்தப் போதுமான புள்ளி விவரங்கள் கிடைப்பதில்லை. எனவே, இம்முறை பொதுவாக பயன்படுத்தப் படுவதில்லை.

**தேசிய வருமானத்தின் வளர்ச்சி**

தேசிய வருமானத்தின் வளர்ச்சி மூலமாகப் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைக் கண்டு கொள்ளலாம். எனவே ஒவ்வொரு ஆண்டிலும் தேசிய வருமானம் கணிக்கப்படுகிறது.

முதன் முறையாகத் தேசிய வருமானம் 1867ம் ஆண்டில் கணிக்கப்பட்டது. தேசிய வருமானத்தைத் திட்டமாகக் கணிப்பதற்குத் தேவையான சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. எனவே பொருளாதார வளர்ச்சியைக் கணிப்பதிலும் சிரமம் ஏற்பட்டது. ஆகையால், இப்பேர்ப்பட்ட குறைகள் களையப்படுவதற்காக 1949ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தேசிய வருமானக் குழு நிறுவப்பட்டது. பேராசிரியர் மஹலநோபிஸ் தலைமையில் பேராசிரியர் டி. ஆர்

தான் குடும்பத்தின் வருமானம் உயருமென்ற தவறான எண்ணத்தில் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

**இறப்பு விகிதம் குறைவு:** இந்தியாவில் கொள்ளை நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டாலும், நல்ல மருத்துவ வசதியாலும் மக்களின் இறப்பு விகிதம் குறைந்துள்ளது. எடுத்துக்காட்டாக சராசரியாக 1000 மக்களுக்கு இறப்பு விகிதம் 1961ல் 27 ஆக இருந்தது 1981ல் 14.8 ஆக குறைந்துள்ளது. பிறப்பு வீதம் அவ்வளவாகக் குறையாத போது நகர மக்கள் தொகை மிக வேகமாக அதிகரிக்கின்றது.

**இளமையில் திருமணம்:** ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பெரும்பான்மையான பெண்கள் 30 வயதிற்குப் பிறகுதான் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனால் நம் இந்தியாவில் 20 வயதிற்குள்ளாகவே பெரும்பாலான பெண்களுக்கு திருமணம் ஆகிவிடுகின்றது. இதனால் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கு போதிய கால அவகாசம் உள்ளது.

**குறைந்த வாழ்க்கைத் தரம்:** எச்சமுதாயத்திலும் பணக்காரர்களை விட ஏழைகளின் குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாய் இருக்கும். நம்நாட்டின் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாக உள்ளது.

**எல்லோருக்கும் திருமணம்:** இங்கிலாந்து போன்ற நாடுகளில் கணிசமான அளவிற்குப் பெண்கள் கடைசிவரை திருமணம் செய்து கொள்வதில்லை. ஆனால் இந்தியாவில் மிகப் பெரும்பான்மையான பெண்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். இதனால் குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகமாக உள்ளது.

**அதிக பிறப்பு விகிதம்:** மக்கள் தொகை பிறப்பு விகிதத்தைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு நாம் இன்னும் குறைக்கவில்லை. ஒரு சில குழந்தைகள் மட்டும் பெற்றுக் கொள்வதன் அவசியத்தைப் பெரும்பான்மையான மக்கள் இன்னும் உணரவில்லை. பல்வேறு காரணங்களால் இறப்பு விகிதம் இந்தியாவில் இன்னும் கவலைப்படும்படி அதிகமாகவே உள்ளது.

**தாயகம் திரும்புதல்:** பர்மா, பங்களாதேஷ், ஸ்ரீலங்கா போன்ற நாடுகளில் நிலவும் அரசியல் மாற்றங்களின் காரணமாக ஏராளமானோர் தங்கள் முன்னோர்களின் தாய்நாடான இந்தியாவிற்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இதனாலும் மக்கள் தொகை அதிகரிக்கின்றது.



**கூட்டுக் குடும்ப முறை:** இன்னமும் நம் நாட்டில் ஏராளமான மக்கள் கூட்டுக் குடும்ப முறையிலேயே வாழ்கின்றனர். பிறக்கும் குழந்தைகளை வளர்ப்பதற்குப் பிற குடும்ப உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில் தம்பதிகள் அதிக குழந்தைகளை ஈன்றெடுக்கின்றார்கள்.

**அகதிகள்:** அண்டை நாடுகளில் அரசியல் கொந்தளிப்புகள் ஏற்படும்போது நம் நாட்டைப் புகலிடமாகக் கொண்டு பல அகதிகள் இந்தியாவிற்கு வந்து விடுகின்றார்கள். இதனாலும் மக்கள் தொகை அதிகரிக்கின்றது.

**குடும்ப நலம்:** மிக சமீபகாலம் வரை நம் நாட்டில் குடும்பக் கட்டுப்பாடை மேற்கொள்வோரின் விழுக்காடு மிகவும் குறைவாகவே இருந்தது. தற்போதும் குழந்தை பெற்றுக் கொள்ளும் வயதிலுள்ள பெண்களில் 35% பெண்களே குடும்பநலத் திட்டத்தைப் பின்பற்றுகின்றனர்.

**பலதார மணம்:** சட்டத்தினால் தடை செய்யப்பட்டும் கூட ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைப் பலர் திருமணம் செய்து கொள்கின்றனர். இதனால் அதிகக் குழந்தைகள் பிறக்கின்றன.

**வெப்ப நாடு:** நமநாடு வெப்ப நாடு ஆகும். இக்கால நிலையில் இயற்கையாகவே அதிகக் குழந்தைகள் பிறக்கும்.

**மக்கள் தொகைக் கொள்கை:** இந்தியாவில் மிகை மக்கள் தொகை ஒரு பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதன் மூலம் நாம் இதனுடன் தொடர்புள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். 'கருவுறுதலின் வீதத்தைக் குறைக்கும் நோக்கம் கொண்ட அரசால் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும் கொள்கைக்கு மக்கள் தொகை கொள்கை' என்று பெயர். இதனை நான்கு வழிகளில் சாதிக்க முடியும்.

**பொது முறை:** இது ஒரு தன்னிச்சை முறை. மகாத்மா காந்தியும் மற்றும் கத்தோலிக்கக் கிறித்தவர்களும் இவ்வழியைப் பரிந்துரை செய்துள்ளனர். தன்னடக்கம், திருமண வயதைத் தள்ளிப் போடுதல், மற்றும் பிரம்மச்சரியம் முதலிய முறைகளால் குழந்தை பிறப்பைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் அதனை அரசின் மக்கள் தொகை கொள்கையாகப் பரிந்துரைக்க முடியாது. ஏனெனில், பல்வேறு அகவியல் காரணிகளைப் புறமிருந்து இயக்க முடியாது. சமுதாய எண்ணங்கள், பழக்க வழக்கங்கள், குடும்ப பாரம்பரியங்கள், உறவுகள்,



பெண்கள் மீதான எண்ணங்கள் போன்ற அகக் காரணிகள் தனி மனிதனின் சமுதாய நடத்தையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. சாதாரண மனிதர்களால் அசாதாரண அறவழி கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாது. எனவே புறக்காரணிகளை இயக்குவதன் மூலம் / முடுக்கி விடுவதன் மூலம் குடும்பங்களைக் கட்டுப்படுத்தலாம்.

கருவுறுதலின் காலவரம்பைக் குறைக்க அரசு பல சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவை பின்வருமாறு:

1. பெண்களின் திருமண வயதை 18 ஆகவும் ஆண்களின் திருமண வயதை 21 ஆகவும் நிர்ணயித்து அதற்குக் குறைவான வயதில் திருமணம் செய்வதைச் சட்டப்படி தடை செய்துள்ளது.
2. இந்திய அரசு கருச்சிதைவு செய்வதைச் சட்டப்பூர்வமாக அனுமதித்து 1971ல் சட்டம் இயற்றியுள்ளது.

**செயற்கை முறைக் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துதல்:** கருத்தடை மாத்திரைகள் மற்றும் சாதனங்கள் முதலியவற்றைக் குடும்ப நல மையங்கள் மூலம் மக்களுக்கு வழங்கி அவைகள் விரிவாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை அனைத்து விளம்பர சாதனங்கள் மூலம் மக்களுக்கு விளக்குதல் மூலம் சிறு குடும்ப நெறி அல்லது தத்துவத்தைப் பற்றி அறிவுறுத்துதல்.

**கருத்தடை அறுவை சிகிச்சை முறைகள்**

மூன்பு கூறிய 3 வழிகளும் கருவுறுதல்களைத் தள்ளிப்போட மட்டுமே பயன்படுகின்றன. எனவே அவை தற்காலிக ஏற்பாடு என்றே அழைக்கப்படலாம். நிரந்தர அடிப்படையில் பிறப்புகளைத் தடுக்க அறுவை சிகிச்சை முறைகளே சிறந்தவை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் என இருபாலருக்கும் கருத்தடை அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்தி ஊக்கத்தொகையும் இலவச மருத்துவ வசதியும் அளித்து அரசு குழந்தை பிறப்புகளை கட்டுப்படுத்தி வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த குடும்ப நலத்திட்டத்தை உலகிலேயே முதன்முதலாக இந்திய அரசு தான் ஓர் அரசுத் திட்டமாகவே முதல் திட்டத்தில் அறிவித்தது. குடும்ப எண்ணிக்கையைக் குறைத்தல், குழந்தைகளுக்கிடையே போதுமான இடைவெளியை ஏற்படுத்தத் தூண்டுதல், மலட்டுத் தன்மையைப் போக்க சிகிச்சை அளித்தல், திருமணம் குறித்த ஆலோசனைகளை வழங்குதல், குடும்ப வாழ்க்கை பற்றிய கல்வியளித்தல் மற்றும் குடும்பத்தின் ஒட்டு மொத்த நலத்திற்குதவும் இதர பல நடவடிக்கைகள்



அடங்கியதே குடும்ப நலத் திட்டமாகும். சுருங்கச் சொன்னால் 'குடும்ப நலத்திட்டம் ஒரு சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகும்'. அது சிறந்த பெற்றோர்கள், நலமுள்ள குழந்தைகள் மற்றும் சிறந்த குடும்பங்கள் முதலியவற்றை உருவாக்கும் நோக்கமுடையது. அது மணவாழ்வில் சமுதாயப் பொறுப்பினைப் புகுத்த முனைகிறது' என்று திரு. கே. தியாகராஜன் கருத்துரைக்கின்றார். எனவேதான் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் குடும்ப நலத் திட்டம் எனப் பெயர் மாற்றம் பெற்று ஒரு விரிவான பொருளை அளிக்கிறது.

**குடும்ப நலத்திட்டமும் ஐந்தாண்டுத் திட்டங்களும்**

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குடும்ப நலத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்காக ரூ. 65 லட்சம் ஒதுக்கப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டது. பம்பாய், கல்கத்தா, டெல்லி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் குடும்ப நலம் பற்றி ஆராய்ச்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையை மத்திய மாநில அரசுகள் அமைத்தன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 27 கோடி குடும்ப நலத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. தீவிர குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கிராமப்புறங்களில் 3676 குடும்ப நல மையங்களும், நகர்ப்புறங்களில் 1381 மையங்களும் துவங்கப்பட்டன. சுமார் 80 லட்சம் பெண்களுக்கு கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டது. 13.3 லட்சம் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ரூ. 315 கோடி ஒதுக்கப்பட்டது. 'மத்திய குடும்பநலத் திட்டக் கவுன்சில்' அமைக்கப்பட்டது. சுமார் 17.2 லட்சம் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

ஐந்தாவது திட்டத்தில் குடும்ப நல நடவடிக்கைகளுக்கு ரூ. 681.7 கோடி ஒதுக்கப்பட்டது. குடும்ப நலத்திட்டத்தினைக் கடைப்பிடிக்க மக்கள் கட்டாயப் படுத்தப்பட்டனர். தேசிய மக்கள் தொகைக் கொள்கையை 1976ல் அரசு அறிவித்தது. திருமண வயது ஆண்களுக்கு 21 ஆகவும், பெண்களுக்கு 18 ஆகவும் உயர்த்தப்பட்டது.

**நகர்ப்புற வேலையின்மையைத் தீர்க்கும் வழிமுறைகள்**

வேலையில்லாப் பிரச்சினை, குறிப்பாக கல்வி கற்றோருக்கு வேலையில்லாமை மிகவும் அபாயகரமானது. அதனைப் போக்குவதற்குக் கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கையாளலாம்.

1. தளர்த்தப்பட்ட கல்விமுறைக் கொள்கையை மாற்றி கல்வி கற்றோருக்கு வேலையில்லாமையைப் போக்கலாம்.
2. கல்வி நிலையங்களில் வேலைவாய்ப்புக்கேற்றவாறு கல்வி முறைகளை மாற்றியமைக்க வேண்டும்.
3. போக்குவரத்து, செய்தித் தொடர்பு வாணிகம் போன்ற துறைகளில் வளர்ச்சி ஏற்படுமானால் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
4. அதிக தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய பெரிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.
5. வேலையில்லாமை பெருகிக் கொண்டிருக்கிற இந்திய நாட்டில் தொழிற்சாலைகளில் மூலதனச் செறிவு தொழில் நுட்பங்கள் தொழிற் செறிவு தொழில் நுட்பங்களாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

இந்தியாவில் பொருளாதாரத் திட்டங்கள் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கத் திட்டமிடுகின்றன. வாணிகம், தொழிற் வளர்ச்சி போக்குவரத்து, செய்தித் தொடர்பு வளர்ச்சி போன்றவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலமாக வேலை வாய்ப்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன. இந்தியா போன்ற வளர்ச்சி அடையா நாடுகளில் மக்கள் தொகை பெருக்கம்தான் வேலையில்லாப் பிரச்சினைக்கு முக்கியமான காரணமாய் உள்ளது. மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அரசின் சமீபகால கொள்கைகள் வேலையில்லாப் பிரச்சினையை வெற்றிகரமாக தீர்த்துவிடும் என நம்புகிறோம்.

**வினாக்கள்**

1. வேலையின்மையின் இயல்பு, அளவு, கொடுமை ஆகியவற்றை விளக்குக.
2. வேலையின்மைக்கான பல்வேறு காரணங்கள் யாவை? வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் யாவை?



பாடம் – 7

# பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மையின் பங்கு

இந்தியா போன்ற வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதாரத்தில் வேளாண்மை அச்சாணி போன்று மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. வேளாண்மை இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்ற கூற்று மிகையாகாது. வேளாண்மையில் ஏற்படும் மாறுதல்கள் நாட்டின் ஆணிவேரையே அசைத்துவிடக் கூடும். வேளாண்மை உரிய முறையில் சிறப்பாக இயங்காவிடில் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மிகவும் பாதிக்கப்படும். தொழில்கள் முன்னேறுவதற்கு வேளாண்மை பல வழிகளில் துணை புரிகின்றது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மையின் முக்கியத்துவம் கீழே விவரிக்கப்படுகின்றது.

**1. வேளாண்மை பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை**

வளர்ச்சியடைந்த நாடுகளும், வளர்ச்சியடையாத நாடுகளும் பொருளாதார வளர்ச்சியடைய வேளாண்மை அடிப்படையாய் அமைந்துள்ளதென்பதைக் கடந்த கால அனுபவங்களைக் கொண்டு உணர்ந்திருக்கின்றன. வேளாண்மை, உணவு, கச்சாப் பொருட்கள், வேலை வாய்ப்பு போன்றவைகளை அளிக்கின்றது. வேளாண்மையே இல்லாவிடில் பொருளாதாரத்தில் உயர்நிலை வளர்ச்சி வீதத்தை எட்டுவது குதிரைக் கொம்பாகும். எனவே வேளாண்மையே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை என்பது வெளிப்படையான உண்மை.

**2. உணவு அளிப்பை விரிவாக்குதல்**

மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக உணவுப் பொருட்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. மேலும் வளர்ச்சியடையாத நாடுகளில் உணவுத் தேவைக்கான வருமானத்தில் ஏற்படுகின்ற நெகிழ்ச்சி மிகவும் உச்ச நிலையில் உள்ளது. அதுமட்டுமின்றி , வளர்ச்சியடையாத நாடுகளுக்குப் பொருட்களை வாங்குவதற்காகப் போதிய நிதி உதவியில்லாமையால் பிற நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யவும் இயலாத அவல நிலை நிலவுகின்றது. பொருளாதாரத் துறையிலுள்ள முதல் நிலைத்துறை, இரண்டாம் நிலைத்துறை,



மூன்றாம் நிலைத் துறை ஆகிய துறைகளில் வேலை செய்கின்ற மக்களுக்கு வேளாண்மைதான் உணவு கொடுக்கின்றது. மக்களுக்கு உணவுத் தானியங்கள் கிடைக்காவிடில் பணவீக்கமும் நெருக்கடிகளும் நாட்டைச் சிதறடித்து விடும். ஆகவே நாட்டின் வளர்ச்சிக்கு வேளாண்மை இன்றியமையாத ஒன்று என்பதை இதன் வாயிலாக அறிந்து கொள்கின்றோம்.

**3. பணவீக்கத்தை தவிர்க்க வேளாண்மை துணைபுரிகின்றது**

வேளாண்மையில் வளர்ச்சியில்லாமல், பொருளாதார வளர்ச்சி ஏற்படுமாயின் அதனால் பணவீக்கத்தின் நெருக்கடிகள் உருவாகும். வேளாண்மையில் வளர்ச்சியில்லாவிடில் உணவுப் பொருட்கள் மற்றும் கச்சாப் பொருட்களின் பற்றாக் குறைகள் மிகுதியாக ஏற்படும். மேலும் பணவீக்கமும் எரிமலை போல் வெடித்து நாட்டின் வளர்ச்சியினையே சின்னாபின்னமாக்கிவிடும். மேற்கூறியவாறு வேளாண்மையின் வளர்ச்சி பணவீக்கத்தை ஒழித்துவிட்டு பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை முடுக்கி விடும்.

**4. பெருகிவரும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு**

இந்தியா போன்ற வளர்ச்சியடையாத நாடுகளில் நாட்டின் 70 சதவீத மக்கள் வேளாண்மைத் தொழிலையே செய்து வருகின்றனர். தொழில் மயமாகுதல் அதி வேகத்தில் முன்னேறினாலும், இத்துணை பெரிய தொகை மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியாது. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களிலும் வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழில்களிலும் அநேகர் பணியாற்றுகின்றனர். வேளாண்மையின் முன்னேற்றம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதில் பெருமளவு துணைபுரிந்துள்ளது. இவ்வாறாக, பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை இன்றியமையாததொன்றாகின்றது.

**5. அந்நிய செலாவணி சம்பாதித்தல்**

வேளாண்மைப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணி ஈட்டப்படுகின்றது. எனவே அந்நிய செலாவணி வாயிலாக ஈட்டப்படும் பணம் இயந்திர சாதனங்கள் வாங்குவதற்கும் உபகரணங்கள் வாங்குவதற்கும் பெரிதும் பயன்படுகின்றது. நம் நாட்டிலிருந்து அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் 50 சதவீதம் வேளாண்மைப் பொருட்களிலிருந்து தான் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அயல் நாடுகளிலிருந்து வேளாண்மைப் பொருட்கள் இறக்குமதி செய்தல் நேரிடின் அந்நிய செலாவணியில் பெரும் பாதிப்பு ஏற்படும். எனவே



வேளாண்மையின் வளர்ச்சி அந்நிய செலாவணியில் இழப்பு நேரிடாதவாறு காத்துக் கொண்டதோடு பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிகின்றது.

**6. தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு உதவி**

வேளாண்மையின் மூலமாக உணவுப் பொருட்கள் கிடைப்பதுமின்றி, தொழிற்சாலைகளுக்குக் கச்சாப் பொருட்களும் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக பருத்தி, சணல், கரும்பு மற்றும் தேயிலை, காப்பி ரப்பர் போன்றவைகளும் வேளாண்மைத் துறை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்கி தொழிற்சாலைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது.

**7. மூலதன திரட்சி**

பிற தொழில்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது வேளாண்மைக்குக் குறைந்த மூலதனமே தேவைப்படுகின்றது. வேளாண்மைத் துறையின் மூலம் ஈட்டப்படுகின்ற தொகையைப் பிற துறைகளின் வளர்ச்சிக்கும் பயன்படுத்தலாம். இந்தியாவில் வேளாண்மைத் துறை தேசிய வருமானத்திற்கு 30 சதவீதம் ஈட்டித் தருகின்றது. இந்தத் தொகை அதிகரிக்க அதிகரிக்கப் பொருளாதாரம் மிக வேகத்தில் வளர்ச்சியடையும்.

**8. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்**

வளர்ச்சியடையாத நாடுகளில் செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே வாழ்க்கைத் தரத்தில் பொதுவாக அதிகமான வித்தியாசம் இருப்பதில்லை. பொருளாதார வளர்ச்சியின் முக்கியக் குறிக்கோள்களுள் ஒன்று மக்களின் வருமானத்தில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வினைக் களைவதே ஆகும். வேளாண்மைத் துறை வளர வளர மக்களது வாங்கும் திறன் உயரும். அதே சமயத்தில் மக்களது வருமானத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வும் குறையும்.

**வேளாண்மை உற்பத்தியும் உற்பத்தித் திறனும்**

வளர்ச்சியடையாத நாடுகளில் ஏற்படுத்தப்படும் திட்டங்களின் வெற்றி தோல்வி வேளாண்மையின் உற்பத்தியைப் பெரும்பாலும் சார்ந்துள்ளது. ஒரு நாடு வேளாண்மையையே நம்பி வாழ்கின்றது. ஏனெனில் வேளாண்மைதான், உணவுப் பொருட்கள், கச்சாப் பொருட்கள், வேளாண்மையைச் சாரா பொருட்களுக்கு அங்காடி வாய்ப்பு முதலியவற்றை அளிக்கின்றது. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் தோல்வியடைந்ததற்கு வேளாண்மையின்

அநேகருக்கு நிலங்கள் கிடைப்பதால் கூட்டுறவு முறையில் பயிர் செய்வது எளியதாகும்.

**நில உச்ச வரம்புச் சட்டங்கள்**

நில உச்ச வரம்புச் சட்டம் எல்லா மாநிலங்களிலும் இயற்றப்பட்டது. ஆனால் உச்ச வரம்பு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டது. பஞ்சாபில் 30 ஏக்கர் நிலமும், அஸ்ஸாமில் 50 ஏக்கர் நிலமும், மேற்கு வங்காளத்தில் 20 ஏக்கர் நிலமும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 10 முதல் 18 ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டது. நில உச்சவரம்பிலிருந்து பலவகையான நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. உதாரணமாக கரும்புப் பண்ணை, கால்நடை வளர்ப்புப் பண்ணை, மத நிறுவனங்கள், அறக்கட்டளை மற்றும் கூட்டுறவுப் பண்ணைகளுக்கு நில உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இந்தியாவில் 88.74 லட்சம் முதல் 128 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் உபரியாக உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1991ம் ஆண்டு முடிய ஏறத்தாழ 19.2 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் நிலமில்லா விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**4. கூட்டுப் பண்ணை**

கூட்டுறவு விவசாய முறையில் பல விவசாயிகள் ஒன்று சேர்ந்து தங்கள் நிலங்களை ஒருங்கிணைத்து வேளாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள். ஒவ்வொரு விவசாயியும் தான் செய்யும் வேலைக்குக் கூலியைப் பெற்றுக் கொள்வார். ஆண்டு இறுதியில் மொத்த லாபம் எல்லா விவசாயிகளுக்கும் சரி சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். இதன் மூலம் வேளாண்மையில் உற்பத்தித் திறன் அதிகரிப்பதோடு விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும் உயர்கிறது மட்டுமல்லாமல் பேரளவு உற்பத்தியின் நன்மைகளை பெறுகின்றனர். இம்முறையானது எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. மொத்த விவசாயிகளில் இரண்டு சதவீதத்தினரே கூட்டுறவு விவசாயத்தில் ஈடுபட்டனர். எனவே இம்முறை இந்தியாவில் தோல்வியடைந்தது.

**5. நிலத் தொகுப்பு**

சிறு நிலங்களையும் துண்டு துண்டாகச் சிதறிக் கிடக்கும் நிலங்களையும் ஒருங்கிணைத்து விவசாயம் செய்வதையே நிலத்தொகுப்பு என்கிறோம். சில நிலங்கள் அளவில் சிறியனவாக இருப்பதாலும் சிதறிக் கிடப்பதாலும் வேளாண்மை உற்பத்தித் திறன் மிகவும் குறைகின்றது. நிலங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து விவசாயம் செய்வதினால் பேரளவு உற்பத்தியின் நன்மைகள், அதிக



வேலை வாய்ப்பு, அதிக உற்பத்தி, அதிக லாபம் போன்றவற்றைப் பெற முடிகிறது. சுமார் 70 மில்லியன் ஹெக்டேர் நிலம் இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. கிராமத்திலுள்ள விவசாயிகள் தங்கள் பூர்வீக நிலத்தை விட்டுக் கொடுக்க முன்வராததாலும், பூரண ஒத்துழைப்பு கொடுக்காததாலும் இம்முறையானது எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

**நிலச் சீர்திருத்தத்தின் குறைபாடுகள்**

1. நிலச்சீர்திருத்தச் சட்டங்களை அமுல்படுத்துவதை அரசியல்வாதிகள் தங்கள் சொந்தக் காரணங்களுக்காக விரும்பவில்லை. அதிகாரிகளும் அதிக அக்கறை செலுத்தவில்லை.
2. நில உரிமை சம்பந்தமான பதிவேடுகள் சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை.
3. நிலச்சீர்திருத்தப் பணிகளைச் செயல்படுத்தத் தனித்துறை ஏற்படுத்தப்படவில்லை. இதனால் காலதாமதம் ஏற்பட்டது. நிலச்சீர்திருத்தங்களைச் செய்வதற்குப் போதிய நிதிவசதி செய்து கொடுக்கப்படவில்லை.
4. அயல்நாட்டு நிதியுதவி நிறுவனங்களால் வேளாண்மைச் சீர்திருத்தங்கள் சரிவர செயல்படுத்தப்படவில்லை.
5. நிலச்சீர்திருத்தச் சட்டங்களில் இருந்த குறைபாடுகளினால் அதனைச் செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் எழுந்தன.
6. நிலச்சீர்திருத்தங்கள் அரசாங்கத்தால் அளிக்கப்படும் வெகுமதியென்று விவசாயிகள் எண்ணுவதால் அவற்றைச் செயல்படுத்த அரசை வலியுறுத்துவதில்லை.
7. நிலச்சீர்திருத்தச் சட்டங்களின் இயக்கங்களும் செயல்பாடுகளும் முறையாகவில்லை.
8. லஞ்சம், ஊழல் போன்ற காரணங்களினால் நிலச் சீர்திருத்தத்தைத் திறம்படச் செயல்படுத்த முடியவில்லை.

**குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள்**

நிலச்சீர்திருத்தங்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு அடிக்கோலாக அமைவதால் அவைகளைத் திறம்படச் செயல்படுத்துவது அவசியமாகும்.



அதற்குக் கீழ்க்கண்ட ஆலோசனைகளை மேற்கொள்ளலாம்.

1. குத்தகைக்காரர்களின் உரிமைகள், வாரத் தொகை முறைப்படுத்துதல், நிலத்தொகுப்பு சம்பந்தமான சட்டங்களைச் செயல்படுத்தாத மாநில அரசுகள் உடனடியாக அவைகளைச் செயல்படுத்துதல் அவசியமாகும்.
2. நிலங்கள் சம்பந்தப்பட்டப் பதிவேடுகள், ஆவணங்கள் சீர்ப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும்.
3. நிலச்சீர்த்திருத்தச் சட்டங்களிலுள்ள குறைபாடுகள் களையப்பட்டுப் புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.
4. லஞ்சம், ஊழல், அரசியல்வாதிகள் தலையீடு முதலானவை தவிர்க்கப்படவேண்டும்.
5. சிறு விவசாயிகளுக்குப் போதிய கடன் வசதியை கொடுப்பதன் மூலம் அவர்கள் வேளாண்மையில் நவீன இயந்திரங்களை உபயோகிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.
6. நில உச்ச வரம்பு சட்டங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.
7. உபரி நிலங்களை நிலமில்லா விவசாயிகளுக்குச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கலாம்.
8. நிலச்சீர்த்திருத்தம் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களையும் நிர்வாக இயந்திரங்களின் செயல்பாட்டையும் எளிதாக்குவது அவசியமாகும்.

**வினாக்கள்**

1. நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளையும் அவைகளின் குறைபாடுகளையும் எழுதுக.
2. நிலச்சீர்திருத்தம் என்றால் என்ன? நிலச்சீர்திருத்தத்தின் குறைபாடுகளையும் அவைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளையும் எழுதுக.



பாடம் – 9

## பசுமைப் புரட்சி

**புதிய வேளாண்மைத் தொழில் நுட்ப முறை**

அறுபதாம் ஆண்டுகளின் மத்தியப்பகுதி காலங்களில் புதிய வேளாண்மைத் தொழில் நுட்ப முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மூன்றாம் ஐந்தாண்டு திட்டத்தில் இறுதி நாட்களில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தின் காரணமாக வேளாண்மைத் துறையில் ஒரு புதிய தொழில் நுட்ப முறையை அரசு கையாள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே நவீன கால தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கும் சீரிய நோக்கத்தோடு இத்திட்டம் கடைபிடிக்கப்பட்டது.

புதிய வேளாண்மை தொழில் நுட்ப முறையின் மூலமாக அமோக விளைச்சல்கள் கிடைத்தன. எங்கு பார்த்தாலும் வயல்கள் வளம் மிகுந்து பச்சைப் பசேலென்று காட்சி அளித்த நிலை பசுமைப் புரட்சி எனப்பட்டது.

**பசுமைப் புரட்சி**

மிகக் குறுகிய காலத்தில் வேளாண்மையில் மிகச் சிறப்பாக ஏற்பட்ட அமோக விளைச்சலை இச்சொல் குறிக்கின்றது. டாக்டர் சுவாமிநாதன் என்னும் அறிஞர்தான் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர். இந்தியத் தொழில் நுட்ப முறையில் அதிக விளைச்சல் தரும் விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், நல்ல நீர்ப்பாசன வசதிகள் யாவும் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டன.

**பசுமைப் புரட்சியின் இயல்புகள்**

1. **அதிக விளைச்சல்தரும் உயர் ரக விதைகள்:** பசுமைப் புரட்சியில் அமோக விளைச்சல் தரும் உயர்ரக விதைகள் உபயோகப்படுத்தப்பட்டன. இந்நரக விதை சாகுபடிக்குப் பெருமளவிலான உரங்கள் பயன்படுத்தப்பட்டன. நல்ல நீர்ப்பாசன வசதிகளும் சிறந்த தடுப்பு முறைகளும் கையாளப்படும் போது உற்பத்திப் பெருமளவில் பெருகுகின்றது. சாதாரண விதைகளை விட உயர்விளைச்சல் தரும் விதைகள் அமோக விளைச்சல்களை ஏற்படுத்தி விளைச்சல் களத்திலே பெரும்புரட்சியினையே உருவாக்கி விடுகின்றது. கீழ்க்கண்ட உயர்ரக விதைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கோதுமை கல்யாண், சோனா 227, பிவி. 18, லெர்மா, ரோஜோ 64 ஏ,

லட்சம் மக்களில் 65 லட்சம் கல்வி கற்றவர்கள் வேலையில்லாது இருந்தனர். கல்வி கற்ற வேலையில்லாதோரில் பெரும்பாலானோர் பொறியியல் பட்டதாரிகள். மக்கள் தொகை பெருக்கம், பல்கலைக்கழகங்களின் பெருக்கம், நகர்ப்புறங்களின் பெருக்கம் ஆகியவையே இச்சூழ்நிலையினை உருவாக்கி விடுகின்றது. 1992-97 ஆண்டுகளில் 58 மில்லியன் நபர்கள் வேலையின்மையால் அவதிப்படுகின்றனர். 1992 முதல் 2002 வரையிலுள்ள 10 ஆண்டுகளில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 94 மில்லியனாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

**வேலையில்லாமையின் அளவும் நிலையும்**

வேலையில்லாமை சமீப காலத்தில் தோன்றிய பிரச்சினையாக இருப்பினும் அதனை மிகக் கவனமான முறையில் தீர்க்க முயல வேண்டும். முந்தைய நாட்களில் வேலையற்றோர் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது மிகவும் கடினமாக இருந்தது. தற்போதும் கூட வேலையற்றோரின் சரியான எண்ணிக்கையைக் கணிப்பது கடினமாக உள்ளது. இதற்கான காரணம் என்ன? வேலையற்றோரில் பெரும் பாலானோர் அறியாமையின் காரணமாகவும், பயனற்றது எனக் கருதுவதன் காரணமாக வேலையற்றோர், வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்து கொள்ளாமையேயாகும். எனினும் வேலைவாய்ப்பு நிலையங்களிலிருந்தும், மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களிலிருந்தும், என்.எஸ்.எஸ்.ஓ. விலிருந்தும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப நிலையில் வேலையற்றோரைப் பற்றிய புள்ளி விவரங்களைக் கணக்கெடுப்பது மிக சிரமமாயிருந்தது என்றாலும் சில நகரங்களிலும் பட்டணங்களிலுமுள்ள வேலை வாய்ப்பு நிலையங்களிலிருந்து சேகரித்த புள்ளி விவரங்களிலிருந்து வேலையற்றோரின் எண்ணிக்கை 3.3 மில்லியன் பேர் எனத் தெரிய வந்தது.

**1951-1990 வேலையற்றோரின் எண்ணிக்கை (மில்லியன்களில்)**

| வேலையின்மை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| 1. தொழிலாளர் எண்ணிக்கையில் காலத்தில் | 9.0 | 11.8 | 17.0 | 32.2 | 39.38 |
| 2. வேலையின்மை ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் | 3.3 | 5.3 | 7.1 | 12.2 | 11.98* |
| 3. வேலைகளுக்குத் தேவையான மொத்தம் (1, 2) | 12.3 | 17.1 | 24.1 | 44.4 | 51.37 |
| 4. கூடுதலாக உருவாக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை | 7.0 | 10.1 | 14.5 | 34.2 | 40.36 |
| 5. ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் வேலையற்றோர் | 5.3 | 7.1 | 9.6 | 10.2 | 11.01 |



மூலம்: ஐந்தாண்டுத் திட்ட வரைவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது.

1984ம் ஆண்டின் இறுதியில் ஏறக்குறைய 120 லட்சம் கல்வி கற்றோர் வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்துள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டது. வேலையில்லாப் பிரச்சினை வளர்ந்து கொண்டே போனதன் காரணமாக நாட்டின் சமுதாய பொருளாதார அரசியல் நிலைகளில் உறுதியின்மையை உருவாக்கிவிட்டது.

இந்தியா வேளாண்மை நாடாக இருப்பதினால் கிராமப்புறங்களில் போதிய அளவு நேர வேலைகள் கிடைப்பதில்லை. உண்மையில் வேளாண்மையில் தேவைக்கு மிஞ்சிய அளவில் மக்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அப்படி வேலையிலிருப்போர்களில் பலர் வேலையை விட்டுப் போய்விட்டாலும் விளைச்சல்களில் பாதிப்போ, குறைவோ, ஏற்படாது. இறுதிநிலை விவசாயியின் இறுதி நிலை உற்பத்தி சைபராக உள்ளது. இதனைத்தான் மறைமுக வேலையின்மை என அழைக்கின்றோம். வேலையின்மையும், போதிய அளவு நேர வேலையின்மையும் தற்போது நாட்டினை அச்சுறுத்துகின்ற மிகப்பெரிய சவால்களாகும். இதன்காரணமாக நாம் எரிமலையின் திறப்பின் வாசலில் உட்கார்ந்திருக்கிறோம் என வேலையற்றோரைப் பற்றி பகவதி குழு கூறியுள்ளது.

கேரளா, உத்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் வேலையற்றோரின் எண்ணிக்கையில் முக்கால் பகுதியினர் கேரளா, மகாராஷ்டிரம், பீஹார், மேற்கு வங்காளம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் கணிப்பின்படி நகர்ப்புற வேலையற்றோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது. இந்தியாவில் உள்ள மொத்த வேலையற்றோரின் எண்ணிக்கை வீதம் 9.35% ஆகவும் உயர்ந்து கொண்டு வருகிறது.



வேலையின்மை, வழக்கமான நிலை, வாராந்தர நிலை, அனுதின நிலை ஆகியவைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. வேலையின்மையின் போக்குவீதம் கீழே தரப்பட்டுள்ளது.

**இருபாலர் நிலை, உறைவிட நிலையில் வேலையின்மை வீதம்**

| | | வேலையின்மை வீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | கிராமப்புறம் | | நகர்ப்புறம் | |
| சுற்றும் வருடமும் | தன்மை நிலை | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 27 (1972-73) | வழக்கமான நிலை | 1.2 | 0.5 | 4.8 | 6.0 |
| | வாராந்தர நிலை | 3.0 | 5.5 | 6.0 | 9.2 |
| | அனுதின நிலை | 6.8 | 11.2 | 8.0 | 13.7 |
| 43 (1987-88) | வழக்கமான நிலை | 2.8 | 3.5 | 6.1 | 8.5 |
| | வாராந்தர நிலை | 4.2 | 4.4 | 6.6 | 9.2 |
| | அனுதின நிலை | 4.6 | 6.7 | 8.8 | 12.0 |
| 1, ஏப்ரல் 1990 | வழக்கமான நிலை | 4.97 | 2.56 | 4.46 | 1.30 |
| | வாராந்தர நிலை | 7.06 | 2.92 | 4.59 | 1.31 |
| | அனுதின நிலை | 7.75 | 4.54 | 5.59 | 1.66 |

வழக்கமான நிலைக் கொள்கைத் திட்டம் கடுமையான அல்லது நீண்ட கால வேலையைக் கணக்கிடுகின்றது. வழக்கமான நிலையில் கணிசமான உயர்வு இருப்பதை மேற்கண்ட அட்டவணையில் காண்கிறோம்.

வாராந்தர நிலைக் கொள்கை முறையைக் கணக்கிடும் வாரத்தில், வாரத்துக்கு ஒரு மணி நேரத்துக்கும் குறைவாகப் பணிபுரிவோரின் எண்ணிக்கையை கண்டுபிடிக்க பயன்படுத்துகிறார்கள். வாராந்தர நிலை வேலையின்மை வீதங்கள் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உயர்ந்துள்ளன.

அனுதின நிலைக்கொள்கை நடப்பு வாரத்திற்கு முந்தைய வாரத்தில் ஒவ்வொரு நாளும் வேலை செய்த நிலையினைக் கணிக்கின்றது. அனுதின நிலைக் கணிப்பின் மூலம் 1980ல் ஏறக்குறைய 1978 மில்லியன் மக்கள் வேலையற்றிருந்தனர்.



**வேலையில்லாப் பிரச்சினைக்கான காரணங்கள்**

வேலையில்லாப் பிரச்சினைக்குப் பற்பல காரணங்கள் உள்ளன. முக்கியமான சில காரணங்களைக் கீழே காணலாம்.

**1. மக்கள் தொகைப் பெருக்கம்**

வேலைவாய்ப்புச் சூழ்நிலையை வேகமாகப் பெருகி வரும் மக்கள் தொகை வளர்ச்சி மிகக் கடுமையாகப் பாதிக்கிறது. மிகவும் அதிகமான முறையில் அதாவது 2.5% வீதத்தில் கூடி வருகின்ற மக்கள் தொகை வேலையில்லாப் பிரச்சினைக்கு ஒரு காரணமாகும். இந்தியாவில் 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வேலையில்லாமல் தவிக்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி நெருக்கடி நிலை காரணமாக அரசும் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குப் போதிய அளவில் புதிய வேலைகளை உருவாக்க முடியாத நிலையில் உள்ளது. இதன் விளைவாக நாட்டில் சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினைகள் தலை தூக்க ஆரம்பிக்கின்றன.

**2. தொழில் வளர்ச்சியின்மை**

இந்தியாவில் பெரும்பாலான தொழிற்சாலைகள் நுகர்வோர்களுக்கான பொருட்களை உற்பத்தி செய்பவையாகும். ஆனால் மூலதனப் பொருட்கள் தொழிற்சாலைகள் தான் அதிகமான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிக்க முடியும். மூலதனப் பொருட்கள், தொழிற்சாலைகள் இல்லாமை மிக மோசமான நிலையை உருவாக்கி விடுகின்றது. மிகத்தேவையான பொருட்களை இறக்குமதி செய்தல், அடிக்கடி ஏற்படும் மின்சக்தி பற்றாக்குறை, கச்சாப் பொருட்கள், உரிய நேரத்தில் உரிய அளவு கிடைக்காமை போன்ற காரணங்களால் தொழில்கள் வேகமாக வளர முடியவில்லை. எனவே, வளர்ந்து பெருகும் உழைப்பாளி வர்க்கத்தினருக்கு இந்தியத் தொழிற்சாலைகள் போதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த முடியவில்லை.

**3. இந்திய வேளாண்மையின் பின் தங்கிய நிலை**

இந்திய வேளாண்மையில் பின் தங்கிய நிலையில் இருப்பதுவும் வேலையில்லா பிரச்சினைக்கு ஒரு காரணமாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தின் நெருக்கடியும் விவசாயத் துறையின் பின்தங்கிய இயல்பும் சேர்ந்து வேலையில்லாப் பிரச்சினையை அதிகரித்து வருகின்றன. பழைய கலப்பை முறையும், தொழில் நுட்பக் குறைவும் வேளாண்மையின் உற்பத்தித் திறனைக் குறைக்கின்றன. இதனால், தற்போது பணியாற்றுகின்ற விவசாயிகள் வேலையற்றவர்களாகி

| | | | | |
|---|---|---|---|---|
| 1931-1940 | 27.9 | 45.2 | 31.2 | 14.0 |
| 1941-1950 | 31.9 | 39.9 | 27.4 | 12.5 |
| 1951-1960 | 36.1 | 40.0 | 18.0 | 22.0 |
| 1961-1970 | 43.9 | 41.2 | 19.2 | 22.0 |
| 1971-1980 | 54.8 | 37.2 | 15.0 | 22.0 |
| 1981-1991 | 68.4 | 32.5 | 11.4 | 21.1 |
| 1992-1995 | 82.5 | 28.5 | 8.2 | 20.30 |

1921 ஆம் ஆண்டு வரை மக்கள் தொகை வளர்ச்சி மிகக் குறைவான வேகத்தில் தான் அதிகரித்துள்ளது. 1931ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டு வரை இந்திய மக்கள் தொகை 27.9 கோடியிலிருந்து 54.8 கோடியாக அதிகரித்தது. அதாவது 40 ஆண்டுகளில் 96 விழுக்காடு அளவிற்கு மக்கள் தொகை மிக வேகமாக அதிகரித்துள்ளது. 1951-61 என்ற பத்தாண்டுகளில் 22.0 விழுக்காடும் 1961-71 என்ற பத்தாண்டுகளில் 22.0 விழுக்காடும் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. 1971-81 என்ற பத்தாண்டுகளில் இந்தியாவில் குடும்ப நலத்திட்டம் 0.05 விழுக்காடு அளவிற்கே மக்கள் தொகையைக் குறைக்க முடிந்தது.

1971-81ஆம் ஆண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி பெரும்பாலான மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் 1961-71ஆம் ஆண்டுகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது.

இறக்கிறார்கள் என்பதே இறப்பு வீதம் ... பிறப்பு வீதம் கீழ்க்கண்ட மூன்று காரணங்களைச் சார்ந்துள்ளது. அ) பெண்களின் திருமண வயது ஆ) கருவுறும் கால வரம்பு இ) குடும்பத்தை உருவாக்குவதில் உள்ள விரைவுத் தன்மை. திருமண வயதிற்கும் கருத்தரித்தலுக்கும் நிறைய தொடர்பு உள்ளது. அதிக வயதில் திருமணம் செய்தல் குறைந்த பிறப்பு வீதத்தையே நல்கும். குறைந்த வயதில் திருமணம் செய்தால் அதிக பிறப்பு வீதத்தையே விளைவிக்கும். அட்டவணை 8.1ன்படி 1901-20 கால அளவில் பிறப்பு வீதம் ஆயிரத்துக்கு 48 முதல் 49 வரையிலும், இறப்பு வீதம் 42.5 முதல் 48.6 வரையிலும் உயர்ந்தது. இதன் விளைவாக மக்கள் தொகை வளர்ச்சி மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் 1911-20ஆம் ஆண்டுகளில் 48.6 ஆக இருந்த இறப்பு வீதம் 1961-70 ஆம் ஆண்டுகளில் 19.2 ஆக குறைந்தது. குடும்பநலத் திட்ட செயலாக்கத்தின் விளைவாகப் பிறப்பு வீதம் 1971-80ஆம் ஆண்டுகளில் 37.2 ஆகவும் இறப்பு வீதம் 15 ஆகவும் குறைந்தன. இவ்வாறு அதிக மக்கள் தொகை வளர்ச்சி வீதமானது தொடர்ந்து அதிக பிறப்பு வீதத்தின் மூலமும் விரைவாக குறைந்துவரும் இறப்பு வீதத்தின் மூலமும் விளக்கப்படலாம். இந்தியாவில் சராசரி திருமணவயது மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை இதனை நன்கு விளக்கும்.



குறிப்பிட்ட சில நாடுகளில் சராசரி திருமண வயது

| நாட்டின் பெயர் | | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| நார்வே | | 28.0 | 24.0 |
| கிழக்கு ஜெர்மனி | | 27.0 | 25.0 |
| ஃபிரான்ஸ் | | 26.0 | 23.0 |
| ஜப்பான் | | 26.0 | 23.0 |
| இந்தியா | 1921 | 21.0 | 14.0 |
| | 1961 | 22.0 | 16.0 |
| | 1971 | 22.0 | 17.0 |
| | 1981 | 23.0 | 18.0 |
| | 1991 | 28.0 | 21.0 |

இந்தியாவில் சராசரி திருமண வயது 1891 முதல் 1981 வரை மெதுவாக அதிகரித்துள்ளது. 1920இல் கொண்டுவரப்பட்ட குழந்தைகள் திருமண கட்டுப்பாட்டுச் சட்டம் குழந்தை திருமணங்களை ஓரளவு குறைத்துள்ளது. சமுதாய விழிப்புணர்வு மற்றும் கல்வி காரணமாக சராசரி திருமண வயது இந்தியாவில் அதிகரித்துள்ளது. சமய வாரியாகப் பார்த்தால் சராசரி திருமண வயது கிறித்துவர்களிடம் மிக அதிகமாகவும் பின் சீக்கியர், முஸ்லீம் மற்றும் இந்துக்கள் ஆகியோரிடம் முறையே படிப்படியாக குறைந்தும் காணப்படுகிறது. வளர்ந்த நாடுகளில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இறப்பு வீதத்தின் மிகை ஆயிரத்துக்கு 35-50. ஆனால் இது இப்போது ஆயிரத்துக்கு 7-8ஆக குறைந்துள்ளது. இதற்குரிய காரணங்கள் வருமாறு: நல்ல சத்தான உணவு, தூய குடிநீர், முன்னேறிய மருத்துவ வசதி, நல்ல சுகாதார நிலை, கொடிய நோய்களைக் கட்டுப்படுத்தி மருந்துகளின் கண்டுபிடிப்பு. அட்டவணையிலிருந்து இந்தியாவில் இறப்பு வீதம் எவ்வாறு குறைந்து வந்துள்ளது என்பதை அறியலாம். 1921-31 ஆம் ஆண்டுகளில் இறப்பு வீதம் சிறப்பான வீழ்ச்சியை அடைந்தது. ஆனால் 1961-71ஆம் ஆண்டுகளில் இறப்பு வீத வீழ்ச்சியில் தடை ஏற்பட்டு, அதன் விளைவாக மக்கள் தொகை வளர்ச்சி முன்னோர் ஆண்டுகளில் 2.2 விழுக்காடு அதிகரித்தது. 1971-81ஆம் ஆண்டுகளில் அது 2.1 விழுக்காடு வீதத்தில் அதிகரித்துள்ளது. நல்ல மருத்துவ வசதி காரணமாகவும் கல்வியறிவு வளர்ச்சி வீதம் அதிகரித்ததன் காரணமாகவும் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1971-81ஆம்



ஆண்டுகளில் அது 2.1 விழுக்காடு வீதத்தில் அதிகரித்துள்ளது. நல்ல மருத்துவ வசதி காரணமாகவும், கல்வியறிவு வளர்ச்சி வீதம் அதிகரித்ததன் காரணமாகவும் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1971-81 ஆம் ஆண்டுகளில் 0.2 விழுக்காடு குறைந்துள்ளது. குறைந்த இறப்பு வீதத்துக்கு மற்றுமொரு காரணம் குறைந்த குழந்தை இறப்பு வீதமாகும். 1916-20ஆம் ஆண்டுகளில் 1000க்கு 218ஆக இருந்த குழந்தை இறப்பு வீதம் 1978ல் நகர்ப்புறங்களில் 1000க்கு 70ஆகவும் கிராமப்புறங்களில் 136ஆகவும் குறைந்துள்ளது. நாட்டில் சராசரி குழந்தை இறப்பு வீதம் 1978ல் 1000க்கு 125 குழந்தை. இறப்புக்குரிய காரணங்கள் பல. அவை வருமாறு: சத்துக் குறைவான உணவு, நிமோனியா, வயிற்றுப்போக்கு, தொற்று நோய்கள் மற்றும் குறைவான இடைவெளியில் மகப்பேறு அடைதல், ஊட்டச்சத்து குறைவுடன் கருவுற்ற தாய்மார்களும், பெண்களும் பேறுகாலத்திற்கு முன்பும் ஏழ்மை காரணமாக போதுமான கவனிப்பு இல்லாமையாலும் மருத்துவமனை வசதியின்மையாலும் இறக்கின்றனர்.

குடியேற்றம் என்பது ஒரு நாட்டிலிருந்து மக்கள் அதிக எண்ணிக்கையில் வெளியேறி மற்றொரு நாட்டில் குடியேறுவதாகும். இச்செயல் மக்கள் தொகையின் அளவை நாட்டில் குறைக்கும். குடிபிறக்கம் என்பது மற்ற நாடுகளிலிருந்து மக்கள் அதிக எண்ணிக்கையில் ஒரு நாட்டில் பிழைப்பை நாடி குடியேறுவதாகும். பாகிஸ்தான், பர்மா மற்றும் இலங்கை முதலிய நாடுகளிலிருந்து அகதிகள் இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் வந்ததைக் கூறலாம். இது ஒரு நாட்டின் மக்கள் தொகையை அதிகரிக்கும். இருப்பினும், மக்கள் தொகை பெருக்கத்திற்கு பிறப்பு, இறப்பு வீதங்கள் மட்டுமே முக்கியக் காரணங்களாக அமைகின்றன.

## பொதுவான இயல்புகள்

மொத்த மக்கள் தொகையில் தொழிலாளர் வர்க்கத்தினர் எத்தனை விழுக்காடு உள்ளனர் என்பதை அறிய வயது அடிப்படையில் மக்களின் எண்ணிக்கையைப் பற்றி ஆராய்வது அவசியமாகிறது. உழைக்கும் வர்க்கத்தின் வயது பிரிவு/மிகை 15-60 ஆகும்.

வயது அடிப்படையில் மக்கள் பகிர்வு/வயது பாகுபாடு (விழுக்காட்டில்)

| ஆண்டு | வயது | பிரிவினை | விழுக்காடு |
|---|---|---|---|
| 1901 | 0.14 | 15-60 | 60க்கு மேல் |

# இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள்

## வளர்ச்சியடையாத பொருளாதாரம்

இரண்டாம் உலகப் போர் மற்றும் 1930-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக எல்லா நாடுகளும் தங்களுடைய பொருளாதார வளர்ச்சியினை நிலையாக வைத்திருப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கின. இதனால் பல நாடுகள் வளர்ச்சியடைந்தன. பிற நாடுகள் வளர்ச்சியடையாத நிலையிலேயே உள்ளன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு உதாரணமாகக் கூறலாம். வளர்ச்சியடையாத அல்லது வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தியா, பர்மா, பிரேசில் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

உலகில் உள்ள நாடுகளை 'வளர்ச்சி பெற்ற நாடுகள்' என்றும் 'வளர்ச்சி குறைந்த நாடுகள்' என்றும் இரு பிரிவுகளாகப் பொருளியல் அறிஞர்கள் வகுத்துள்ளனர். ஒரு நாட்டில் மொத்த உற்பத்தியும், தலா வருமானமும், மக்களின் வாழ்க்கைத் தரமும் உச்ச நிலையில் இருந்தால் அந்த நாடு 'வளர்ச்சியடைந்த நாடு' அல்லது 'முன்னேற்றமடைந்த நாடு' என்று அழைக்கப்படுகிறது. மேற்கூறிய மூன்றும் குறைவாக உள்ள நாட்டை 'வளர்ச்சி குறைந்த', அல்லது 'பின்தங்கிய' நாடு என்று அழைக்கப்படுகிறது.

## இந்தியப் பொருளாதாரத்தின் (வளர்ச்சி குறைந்த பொருளாதாரம்) இயல்புகள்

பல நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பொருளாதார ரீதியாக வளர்ச்சி குறைந்த நாடாக இந்தியா காணப்படுகிறது. இயற்கை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தாமை, வறுமை, மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற காரணங்கள் இந்தியாவின் பின்தங்கிய நிலைமைக்கு மிக முக்கியக் காரணங்களாகும். இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகளாவன:

1. **மக்கள் தொகைப் பெருக்கம்:** இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகவும் அதிகமாக உள்ளது. ஆனால், இறப்பு வீதம் குறைவாகக் காணப்படுகிறது. இந்தியாவின் மக்கள் தொகை ஆண்டு



ஒன்றுக்கு 2.1 சதவீதம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு கிடைக்காததால் வறுமை ஏற்படுகிறது. பெருகிவரும் உழைப்பாளிகள் தேவைக்கும் அதிகமாக இருப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகி பெரும் பிரச்சினைகள் ஏற்படுகிறது. மேலும், மக்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம், மற்றும் இதர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசின் செலவும் அதிகரிக்கிறது.

2. **குறைந்த தலா (தனி நபர்) வருமானம்:** ஒரு நாட்டின் மொத்த வருமானத்தை அந்நாட்டில் மொத்த மக்கள் தொகை கொண்டு வகுத்தால் தலா வருமானம் கிடைக்கும். தலா வருமானம் (தனி நபர் வருமானம்) மிக அதிகமாக இருப்பின் அதனை வளர்ச்சியடைந்த நாடு என்றும், குறைவாக இருப்பின் வளர்ச்சி குறைந்த நாடு என்றும் அழைக்கிறோம். 1993-ம் ஆண்டு இந்தியர் ஒருவரின் வருமானம் 300 டாலர்கள் மட்டுமே. ஆனால், இது சுவிட்சர்லாந்தில் 31,760 டாலராகவும், அமெரிக்காவில் 24,740 டாலராகவும், ஜப்பானில் 31,490 டாலராகவும், இங்கிலாந்தில் 18,060 டாலராகவும் உள்ளது. இந்தியாவில் தலா வருமானம் குறைவாக உள்ளதால், வாழ்க்கைத் தரம் குறைவாகவே உள்ளது.

3. **வறுமை:** இந்தியாவில் 38 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. குறைவான தலா வருமானம், இதற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. மக்கள் உட்கொள்கின்ற உணவின் அடிப்படையில்தான் வறுமை நிலை அளவிடப்படுகின்றது. ஒரு தனி மனிதன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய கலோரிகள், கிராமப் புறங்களில் வாழ்பவர்களுக்கு 2400 கலோரிகள் எனவும், நகர் புறங்களில் வாழ்பவர்களுக்கு 2100 கலோரிகள் எனவும் கணிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு வாங்கும் சக்திக் குறைவாக இருப்பதால், அவர்கள் தங்களுக்குத் தேவையான கலோரிகளையுடைய பொருட்களை வாங்க முடியவில்லை. இதனால் உழைக்கும் திறன் குறைகிறது.

4. **வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம்:** இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் கிராமங்களில் வாழ்கின்றனர். இவர்களின் முக்கியத் தொழில் வேளாண்மை ஆகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆனால், இந்தியாவில்

விடும் வாய்ப்பு உள்ளது. புதிதாக வருகின்றவர்களுக்கும் வேளாண்மையில் வேலை இல்லை.

**4. பொருளாதார வளர்ச்சியில் பின் தங்கிய நிலை**

இந்தியாவில், பொருளாதாரம் மிகவும் குறைவான வீதத்தில் வளருகின்றது. போதிய மற்றும் திருப்திகரமான வளர்ச்சி இல்லை. எனவே இந்தியாவில் வேலையின்மை வீதமும் கூடிக்கொண்டே வருகின்றது. மேலும் கிடைக்கின்ற இயற்கை வளங்களும் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை.

**5. தொழில்கள் எந்திரமயமாக்கப்படுதல்**

தொழில்களில் ஆட்கள் செய்து வந்த வேலைகளை எந்திரங்கள் செய்யும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் தொழில்களில் ஆட்குறைப்பு ஏற்படுகின்றது. நவீன கருவிகளைப் புகுத்துவதால் குறைந்த செலவில் உற்பத்திகள் நடைபெறுகின்றன. பணிகளும் விரைவாகச் செய்யப்படுகின்றன. உதாரணமாக, தொழில் நிலையங்களிலும் அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக வேலைவாய்ப்புகள் குறைந்துள்ளன. எனவே இந்தியாவில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

**6. கட்டுப்பாடற்ற கல்வி முறை**

இந்தியாவில் அநேக பல்கலைக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. கட்டுப்பாடற்ற கல்விமுறைக் கொள்கையின் காரணமாக பல்கலைக் கழகங்கள் கணக்கிலடங்காத பட்டதாரிகளையும், இளங்கலைப் பட்டதாரிகளையும், முதுகலைப் பட்டதாரிகளையும் ஏராளமாக உருவாக்குகின்றன. பெரும்பாலான மருத்துவர்களும் பொறியாளர்களும் வேலையின்றித் தவிக்கின்றனர். எனவே, இந்தியாவில் கட்டுப்பாடற்ற கல்விமுறையும் வேலையில்லாப் பிரச்சினைக்கு முக்கிய காரணமாய் அமைந்துள்ளது.

**7. சுய வேலைவாய்ப்புக் குறைவு**

இந்தியாவில் கல்வி கற்ற இளைஞர்கள் தாங்களாகவே தொழில் தொடங்கத் தயங்குகின்றனர். அவர்களுக்குப் போதிய துணிவில்லை. நீண்ட நேரம் வேலை செய்வதற்கு விருப்பமும் இல்லை. அவர்கள் எளிதான பணிகளையே செய்ய விழைகின்றனர். ஆனால் படித்துவிட்டு வருகின்ற ஏராளமான பேர்களுக்குப் போதுமான அளவுக்கு வேலை வாய்ப்புகள் இல்லை.

**கிராமப் புறங்களில் நகர்ப்புறங்களில் வேலையில்லா...**

வேலையில்லாப் பிரச்சினைகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

1. கிராமப்புற வேலையின்மை
2. நகர்ப்புற வேலையின்மை எனவாகும்.

**கிராமப்புற வேலையின்மை**

கிராமப் புறங்களில் பல மக்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். கிராமப்புற வேலையின்மையைப் பருவக் கால வேலையின்மை, மறைமுகமாக வேலையின்மையென இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**கிராமப்புறங்களில் வேலையில்லாமைக்கான காரணங்கள்:**

அ. வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கம்.
ஆ. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலை
இ. கிராமங்களில் தொழிற்சாலைகள் இல்லாமை
ஈ. கிராமங்களில் மக்களிடையே ஒற்றுமையின்மை
உ. வேளாண்மையில் பருவக் காலத்தில் ஏற்படும் மாற்றம்.
ஊ. கூட்டுக் குடும்ப முறை
எ. நிதிப்பற்றாக்குறை
ஏ. கல்வி அறிவின்மை

**நகர்ப்புற வேலையின்மை**

நகர்ப்புறங்களில் வேலையில்லாமைக்கான காரணங்கள்:

அ. தளர்த்தப்பட்ட கல்வி முறை
ஆ. தொழில் சம்பந்தப்பட்ட கல்வியின்மை
இ. வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கம்
ஈ. தொழிற்சாலைகளில் வளர்ச்சியின்மை
உ. பயிற்சி நிலைய வாய்ப்பில்லாமை
ஊ. இளைஞர்களின் இயல்பு, இளைஞர்கள் எளிதான வேலைகளையே நாடிச் செல்லுகின்றனர்
எ. சுய வேலை வாய்ப்புகளுக்கு நிதிப் பற்றாக்குறை, சுய வேலை வாய்ப்புகளைச் செய்ய விரும்புகின்றவர்களுக்குப்



போதிய அளவு நிதி வளம் கிடைக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். கடன்கள் கிடைப்பதற்கான வழிமுறைகள் எளிதாக்கப்பட வேண்டும்.

**வேலையின்மையைத் தீர்க்கும் வழிமுறைகள்**

சமுதாயம், பொருளாதாரம், அரசியல் கண்ணோட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினை மிகவும் அபாயகரமானதாகும். அது சமுதாயத்தீமை எனக் கூறப்படுகின்றது. எனவே, அரசு இப்பிரச்சினையைத் தீர்க்க விரைவில் அதிரடி நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன் கொடுமையை உணர்ந்து, இப்பிரச்சினையைப் போக்குவதற்குக் குறுகிய கால நடவடிக்கை எடுக்க வேண்டுமா அல்லது நீண்ட கால நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்**

1. வேலையில்லாப் பிரச்சினைக்கு அதிக முக்கியக் காரணமான வளர்ந்து பெருகி வரும் மக்கள் தொகையினை அரசு பொருத்தமான கொள்கையின் மூலம் கட்டுப்படுத்த வேண்டும்.
2. தொழிலாளர் செறிவு முறை பின்பற்றப்பட வேண்டுமேயன்றி முதலீட்டுச் செறிவு முறைகளைப் பின்பற்றக் கூடாது. முதலீட்டுச் செறிவு முறைகளை முற்றுமாக ஒதுக்க முடியாவிடினும் மிகவும் குறைந்த அளவு உபயோகப்படுத்தப்பட வேண்டும்.
3. தொழிற்துறையானது வேளாண்மையை விட மிக வேகமாய் முன்னேற வேண்டும். மூலதனப்பொருட்களை உற்பத்தி செய்வது, நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்வதை விட மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
4. சிறு தொழில்களை விருத்தி செய்வதற்கும் சுயவேலை வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தாராளமாகக் கடன் வழங்க வேண்டும்.
5. கல்வி முறைகளில் கணிசமான மாற்றம் செய்யப்பட வேண்டும். தற்போதைய தளர்த்தப்பட்டதும்,



பொதுவானதுமான கல்வி முறை, தொழில் நுட்பமும், தொழிற்கல்வி முறைகளாக மாற்றப்பட வேண்டும்.

6. பொருளாதார வளர்ச்சி வீதம் வேலையில்லாப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்குப் பெரிதும் துணைபுரியும்.
7. வேலை வாய்ப்பு அலுவலகங்கள் சிறப்பாகவும் திறமையாகவும் செயலாற்ற வேண்டும்.

**கிராமப்புற வேலையின்மையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள்**

கிராமங்களில் வேலையின்மை அதிகமானால் சமுதாயப் பொருளாதாரச் சீர்கேடுகள் உருவாகும். கிராமப்புற வேலையின்மையைப் போக்கக் கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கையாளலாம்.

1. மக்கள் தொகைப் பெருக்கம் கிராமப்புறங்களில் அதிகமிருப்பதனால், அதனைக்கட்டுப்படுத்த வேண்டும்.
2. வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.
3. போதிய அடிப்படை வசதிகளைக் கிராமங்களில் ஏற்படுத்த வேண்டும்.
4. நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளைத் திறம்படச் செயல்படுத்த வேண்டும்.
5. பரந்த கல்வியறிவுத் திட்டங்களைத் திறம்பட அறிமுகப்படுத்த வேண்டும்.
6. தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். சாலை அமைத்தல், சிறிய நீர்ப்பாசனப் பணி போன்ற கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
7. விவசாய முறையில் தொழில் செறிவு முறைகளைப் புகுத்தினால் பெரும்பாலான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.
8. கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவைகளுக்குத் தாராளமாகக் கடன் வழங்கப்பட்டால் கிராமப்புற மக்களின் நிதி நெருக்கடி நீங்குவதோடு வேலைவாய்ப்பு பெருகும்.

| | | |
|---|---|---|
| 1994-95 | 718609 | 7594 |
| 1995-96 | 819214 | 8505 |

**தேசிய வருமானம் மற்றும் தலா வருமானம்**
**(1980-81 விலை நிலவரப்படி)**

| வருடம் | நிகர நாட்டு உற்பத்தி | தலா வருமானம் (ரூபாய்) |
|---|---|---|
| 1950-51 | 40454 | 1127 |
| 1960-61 | 58602 | 1350 |
| 1970-71 | 82211 | 1520 |
| 1980-81 | 110685 | 1630 |
| 1990-91 | 186469 | 2223 |
| 1991-92 | 186118 | 2128 |
| 1992-93 | 194000 | 2226 |
| 1993-94 | 207670 | 2282 |
| 1994-95 | 213411 | 2358 |
| 1995-96 | 224081 | 2429 |

**நாட்டு வருவாய்க் கணிப்பில் ஏற்படும் பிரச்சினைகள்**
**பொதுவான பிரச்சினைகள்**

1. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் பற்றிய புள்ளி விவரங்கள் முழுமையான அளவிலும் நம்பிக்கையான தரத்திலும் கிடைப்பதில்லை.
2. நாட்டு வருவாய் பற்றிய தெளிவான கருத்தை உருவாக்குவதில் சில சிக்கல்கள் உள்ளன.
3. நாட்டு வருவாய் பணத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் நாட்டு வருவாய் சில வேளைகளில் விநோதமான முடிவுகளைக் கொடுக்கும். உதாரணம், ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் பெண் ஒருவரின் ஊதியம் நாட்டு வருவாயில் சேரும் ஆனால் அதே, பெண் அந்தக் குடும்பத்தின் தலைவரைத் திருமணம் செய்து கொண்டு பின்னர் அதே பணியை அவர் செய்தால் அது நாட்டு வருவாயில் சேராமல் போகும்.



4. நாட்டு வருவாய் பணத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. ஆனால், பண மதிப்பைக் கணக்கிட முடியாத அநேக பணிகள் உள்ளன.
5. சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் சம்பாதிக்கப்படும் வருமானம் நாட்டு வருவாயில் சேர்வதில்லை.
6. அரசின் செலவுகளை கணித்து நாட்டு வருவாயில் சேர்ப்பது எப்படி என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளன.
7. அயல்நாட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளால் தோன்றும் வருமானங்களை நாட்டு வருவாயில் சேர்ப்பதில் ஏற்படும் இடையூறுகள் நாட்டு வருவாய்க் கணிப்பைச் சிக்கலாக்குகின்றன.

**பின்தங்கிய நாடுகளிலுள்ள பிரச்சினைகள்**

1. போதிய அளவில் நம்பத்தகுந்த புள்ளிவிவரங்கள் கிடைப்பதில்லை. உதாரணம் வேளாண்மைப் புள்ளி விவரங்கள்.
2. பின் தங்கிய நாடுகளில் பணப் பொருளாதாரத்திற்குள் வராத சில துறைகள் இருக்கின்றன. இங்கு பண்டமாற்று முறையே இன்னும் அமுலில் உள்ளது. இவற்றின் பணமதிப்பைப் கணிப்பது கடினம்.
3. அநேக உற்பத்தியாளர்கள் சிறிய அளவிலேயே உற்பத்தியை மேற்கொள்கின்றனர். இவர்கள் உற்பத்தி அளவுகளையும் அவற்றின் பண மதிப்பையும் சரிவரக் கணக்கு வைப்பதில்லை.
4. ஒருவரே பல பணிகளைச் செய்கின்றபொழுது, அப்பணிகளின் பணமதிப்பைக் கணக்கிடுவதில் சிக்கல் உண்டு.
5. கல்வியறிவு குறைவாக இருப்பதால் புள்ளி விவரங்கள் சரிவரக் கிடைப்பதில்லை.

**நாட்டு வருவாயை நிர்ணயிக்கும் காரணிகள்**

1. **நாட்டின் இயற்கை வளங்கள்:** ஒரு நாட்டில் நல்ல மண்ணும் வற்றாத ஆறுகளும் கனிவளங்களும், மற்றும் மழை வளமும் மிகுந்து இருப்பின் அந்நாட்டின் தேசிய வருவாய் மிகுதியாக இருக்கும்.



2. **மூலதனத் திரட்சி:** மூலதனத் திரட்சி மிகுந்துள்ள நாட்டின் தேசிய வருவாய் அதிகமாகவும், மூலதனத் திரட்சி குறைவாக உள்ள நாட்டின் தேசிய வருவாய் குறைவாகவும் இருக்கும். ஒரு நாட்டின் மூலதனத் திரட்சி அந்நாட்டிலுள்ள மக்களின் சேமிக்கும் திறமையையும், சேமிக்கும் விருப்பத்தையும் பொறுத்து அமையும்.

3. **போதுமான உழைப்பு:** ஒரு நாட்டில் திறமை மிகுந்த உழைப்பாளர்கள் போதுமான அளவில் இருந்தால் அந்நாட்டின் உற்பத்தி மிகுதியாக இருக்கும். அதனால் அந்நாட்டின் தேசிய வருவாயும் மிக அதிகமாக இருக்கும்.

4. **திறமையான தொழிலமைப்பு:** ஒரு நாட்டின் தேசிய வருவாய் அந்நாட்டின் தொழிலமைப்பாளர்களின் திறமையைப் பொறுத்தும் அமையும். திறமையான தொழிலமைப்பாளர்கள் மிகுந்திருக்கும் நாட்டின் தேசிய வருவாய், அதிகமாக இருக்கும். அதனால்தான் ஒவ்வொரு நாட்டிலும் தொழிலமைப்பாளரின் திறமையை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5. **சமுதாய அரசியல் அமைப்புகள்:** சேமிக்கும் விருப்பத்தையும் ஆற்றலையும் கொண்ட அரசியல் அமைப்பையும் நிலையான அரசாங்கத்தைக் கொண்ட அரசியல் அமைப்பையும் கொண்ட நாட்டின் தேசிய வருமானம் அதிகமாக இருக்கும்.

**நாட்டு வருவாயும் சமுதாய நலனும்**

சமுதாய நலன் அளவை கணிப்பதற்கு நாட்டு வருவாய் மிகச் சிறந்த அளவையாகப் பயன்படுகிறது.

நாட்டு வருவாய் அதிகரிப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அல்லது முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய முடிகிறது. எனினும் எல்லா நாட்டு வருவாய் உயர்வும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பதில்லை. எனவேதான் நாட்டு வருவாய் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மதிப்பீடு செய்ய சரியான அளவுகோல் அல்ல என்று சிலர் கருதுகின்றனர்.

நாட்டில் உற்பத்தி அதிகரிக்காத நிலையில், விலை மட்டம் உயர்வதால் நாட்டு வருவாய் அதிகரிக்கும். நாட்டு வருவாயை நிகழ்கால விலைகளினடிப்படையில் கணிக்கும்போது இது நிகழும். எனவே, நாட்டு வருவாயை மாறா விலைகளினடிப்படையில் காண்பதே சிறந்தது.



மாறா விலை மட்டத்தில் நாட்டு வருவாயைக் கணிப்பதும் குறைபாடுடையதே ஆகும் என வேறு சிலர் கருதுகின்றனர். ஏனெனில் மக்கட்தொகை அதிகரிக்காமல் இருக்க வேண்டும். அல்லது நாட்டு வருவாய் அதிகரிப்பை விட மக்கள் தொகை அதிகரிப்பு விகிதம் குறைவாக இருக்க வேண்டும். அப்படியாயின் தனி நபர் வருமானம் அதிகரிக்கும். எ.கா.: நாட்டு வருவாய் 5% அதிகரிக்கும்போது, மக்கட் தொகை 2% அதிகரித்தால், தனிநபர் வருவாய் 3% அதிகரிக்கிறது. இதனைப் பொருளாதார முன்னேற்றம் என்று கருதலாம். அதனால்தான் பல அறிஞர்கள் நாட்டு வருவாயை விட தனி நபர் வருவாயைக் கொண்டு பொருளாதார முன்னேற்றத்தை கணிப்பது சிறந்தது என்று கூறுகின்றனர். ஜே.ஆர். ஹிக்ஸ் என்னும் பொருளாதார மேதையும் கூட இதே கருத்தை வலியுறுத்துகின்றார்.

வேறு சில பொருளாதார மேதைகள் நாட்டு வருவாயும் தனி நபர் வருவாயும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் கணிப்பதற்குப் பொருத்தமான அளவுகோல்கள் இல்லை என்றும், மக்களின் வாழ்க்கைத் தர உயர்வு தான் சரியான அளவுகோல் என்றும் கூறுகின்றனர். அவர்கள் பின்வரும் வாதங்களை முன் வைக்கின்றனர்.

1. தனி நபர் வருவாய் என்பது நாட்டு வருவாயை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைக்கும் ஈவே ஆகும்.
2. கூட்டுச் சராசரி முறையில் தனி நபர் வருவாய் கணிப்பை காண்கிறோம். கூட்டுச் சராசரி முறை எப்போதுமே பெரிய எண்களை நோக்கியே செல்லும் தன்மையைக் கொண்டது. எனவே இம்முறை நாட்டு வருவாய் மக்களிடம் சமச் சீராகப் பங்கிடப்பட்டிருக்கும் நிலையில் மட்டுமே இம்முறை பயன் தரும்.
3. இம்முறை நாட்டு உற்பத்திக் கூறுகள் பற்றி ஆய்வினைக் கருத்தில் கொள்ளவில்லை.
4. இம்முறையில் நாட்டு உற்பத்தியில் அத்தியாவசியப் பண்டங்கள், ஆடம்பரப் பண்டங்கள் இவற்றின் விகிதம் கருத்தில் கொள்ளப்படவில்லை.
5. இம் முறை பண்டங்களின் தரத்தில் ஏற்படும் உயர்வுகள் பற்றி கருத்தில் கொள்ளத் தவறி விட்டது.
6. இம் முறையில் நாட்டு வருவாய் எவ்வாறு அதிகரித்தது என்பது பற்றிய கருத்தைக் கொள்ளவில்லை. இத்துணைக் காரணங்களால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை

காட்டில் பேராசிரியர் வி.கே.ஆர்.வி. ராவ் என்பவரால் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தொடங்கியது. இக்குழு தனது முதல் அறிக்கையினை 1951ம் ஆண்டிலும் இறுதி அறிக்கையை 1953ம் ஆண்டிலும் சமர்ப்பித்தது.

நம் நாடு சுதந்திரமடைவதற்கு முன் தேசிய வருமானத்தின் வளர்ச்சி விகிதம் மிகவும் குறைவாயிருந்தது. அதன் விகிதம் 1.2 சதவிதமாகக் கணக்கிடப்பட்டது. ஆனால், நாடு விடுதலையடைந்தபின் தேசிய வருமான வளர்ச்சி அதிகரிக்கத் தொடங்கியது. எண்பதாம் ஆண்டுகள் வரை வளர்ச்சி விகிதம் 3.5 சதவிகிதத்திற்கும் 4 சதவிகிதத்திற்கும் இடைப்பட்ட நிலையிலிருந்தன. எண்பதாம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 5 சதவிகிதமாக இருந்தது. விடுதலைக்கு முன்னுள்ள நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தற்போதைய வளர்ச்சி விகிதம் மிகவும் அதிகம். பேராசிரியர் கே.என்.ராஜ் என்பவரின் 1952-53க்கும் 1983-84க்கும் இடைப்பட்டுள்ள நான்கு, நான்கு ஆண்டுகளாகத் தொகுக்கப்பட்ட எட்டு ஆண்டு காலப்பகுதிக்குரிய ஆராய்ச்சி அறிக்கையின்படி உள்நாட்டிற்குரிய பொருட்களின் மொத்த உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளதென்பதைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

| காலம் | 1952-53 முதல் 1957-60 | 1960-61 முதல் 1967-68 | 1968-69 முதல் 1975-76 | 1975-77 முதல் 1983-84 |
|---|---|---|---|---|
| வளர்ச்சி விகிதம் | 3.73 | 3.75 | 3.76 | 4.01 |

மேற்காட்டிய அட்டவணையின்படி எழுபதாம் ஆண்டுகளின் மத்திய காலங்களில் பொருளாதார வளர்ச்சி சீராக வளர்ந்து கொண்டே வந்துள்ளது. 1976-77ம் ஆண்டிலிருந்து வளர்ச்சி விகிதத்தில் 4.01% திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது.

தேசிய உற்பத்திக்குத் தொழில் துறையிலிருந்து வரும் பங்கு அதிகரித்து வந்துள்ளது. தொழில்துறையில் ஏற்படும் உயர்வு தேசிய வருமானத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது. தொழில் துறை உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 6%, ஆனால் விவசாயத்துறை உற்பத்தியில் வளர்ச்சி விகிதம் 3% மட்டுமே.



**ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தேசிய வருமானத்தின் வளர்ச்சி**

ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் தேசிய வருமானத்தை உயர்த்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தேசிய வருமானத்தை 5% உயர்த்த வேண்டுமென்பது ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கியமானதொரு குறிக்கோளாகும். எல்லாத் துறைகளிலும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதின் மூலம் தேசிய வருமானத்தையும் உயர்த்த வேண்டுமென்பதே ஐந்தாண்டுத் திட்டத்தின் உரிய நோக்கமாகும். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் வளர்ச்சியின் இலக்கு நிர்ணயிக்கப்படுகின்றது. இலக்கு வளர்ச்சி வீதத்தை விட உண்மையான வளர்ச்சி வீதம், இலக்கு செயல்பாட்டில் பொருளாதாரத் துறைவுபடுமாயின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எட்டவில்லையென்பது தெளிவாகின்றது. தேசிய வருமானத்தில் ஏற்பட்ட உண்மையான விவரங்களையும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காண்க உயர்வினையும் காணலாம்.

**ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய வருமானத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கும் உண்மையான அதிகரிப்பும் ஆண்டுக்குரிய சதவிகிதம்**

| ஐந்தாண்டுத் திட்டங்கள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலக்கு வீதம் | 2.1 | 4.5 | 5.6 | 5.7 | 5.5 | 5.2 | 5.0 | 5.9 | 7 |
| உண்மையான அதிகரிப்பின் வீதம் | 3.6 | 4.0 | 2.2 | 3.3 | 5.2 | 5.3 | 5.6 | 5.7 | |

**முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம்:** நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 11% ஆனால், தேசிய வருமானம் 18% ஆக உயர்ந்துள்ளது. இந்தத் திட்டத்தின் காலத்தில் வேளாண்மைத் துறையும் தொழில் துறையும் தேசிய வருமானத்துக்கு மிகவும் அதிகமான பங்கினை எட்டிக் கொடுத்துள்ளது. மொத்த தேசிய வருமானம் ரூ 9980 கோடி. நிர்ணயிக்கப்பட்ட இலக்கு வீதமோ 2.1% ஆனால் வளர்ச்சி வீதமோ 3.6%. மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக தலா வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

**இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம்:** இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் ஆர்வம் நிறைந்ததொன்று. எனினும் பருவ மழை பொய்த்ததால் வேளாண்மைத் துறையிலிருந்து தேசிய வருமானத்துக்கு வரவேண்டிய வருமானம் 48%லிருந்து 46%க்கு வீழ்ச்சியுள்ளது. அயல்நாட்டு வருமானத்திலும் குறைவு ஏற்பட்டது. வருடாந்திர வருமான இலக்கு



25% ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய வருமானம் 21.4% அதிகரித்தது. 1960-61ல் மொத்த தேசிய வருமானம் ரூ 13,263 கோடி.

**3ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலம்:** மூன்றாவது திட்டக் காலத்தில் செயல்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை. நிர்ணயிக்கப்பட்ட இலக்காகிய 30%ஐவிடத் தேசிய வருமானம் 20% அதிகரித்தது. பருவ மழைக் குறைவு, அயல்நாட்டு வருமானத்திலுள்ள சிக்கல்கள் போன்ற காரணங்களால் தேசிய வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படலாயிற்று. 1965-66ல் ஏற்பட்ட வறட்சி நிலை, வேளாண்மை உற்பத்தியை மிகவும் அதிகமாய்த் தாக்கியது. மூலப்பொருட்கள் கிடைப்பாமையால் தொழில் துறையும் பாதிக்கப்பட்டது.

## 1966-69 வருடாந்திரத் திட்டங்கள்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினால் இந்தியப் பொருளாதாரத்துக்கு நேரிட்ட குறைபாடுகளை நீக்கும் பொருட்டு வருடாந்திரத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. வறட்சி நிலை 1966-67லும் நீடித்தமையால் தேசிய வருமானத்தில் 0.9% குறைவு ஏற்பட்டது. 1967-68ல் வேளாண்மை உற்பத்தியில் ஏற்றம் ஏற்பட்டது. எனவே தேசிய வருமானத்திலும் வளர்ச்சியின் அறிகுறிகள் தோன்றலாயின. 1968-69ல் தேசிய வருமான வளர்ச்சியால் மந்த நிலை உருவாகியது. தேசிய வருமானம் 2.9% மட்டுமே.

**4ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலம்:** 1973-74ல் தேசிய வருமானம் ரூ 20,143 கோடி. தேசிய வருமானத்தில் விருத்தி இல்லை. இந்தத் திட்டத்தின் காலத்தில் தேசிய வருமானத்தை 5.7% ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டது. ஆனால், உண்மையான உயர்வு 3.3% மட்டுமே. இதன் விளைவாக வருமானம் வரம்புக் கோட்டிற்குக் கீழே சென்றது.

**5ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலம்:** இத்திட்டக் காலத்தில் வருடாந்திர வளர்ச்சி வீதம் 5.5%ஐ எட்ட வேண்டுமெனத் திட்டம் தீட்டப்பட்டது. ஆயினும் 5.2% வளர்ச்சி வீதத்தினையே அடைய முடிந்தது. தலா வருமானம் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகக் குறைவுடலாயிற்று. 1970-71ல் தலா வருமானம் ரூ. 328. ஆனால் 1974-75ல் ரூ. 617.6 ஆகக் குறைந்தது. 1975-76ல் தேசிய வருமானம் அதிகரித்தது. ஆயினும் 1976-77ல் வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணமாயிற்று.





**6ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலம்:** இந்தத் திட்டக் காலத்தில் தேசிய வருமானம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. 1980-81ல் வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் உற்பத்தி உயர்வுக்கு நேராக நடைபோட்டது. ரயில்போக்குவரத்து, மின்சக்தி, நிலக்கரி போன்ற துறைகளிலும் பெருமளவில் உயர்வுகள் ஏற்பட்டன. ஆனால் 1984-85ல் வேளாண்மை உற்பத்தியில் குன்றிய நிலை தோன்றியது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வருடாந்திர சராசரி வளர்ச்சி வீதம் 5.3 ஆகும். இதன் விளைவாகப் பொருளாதாரத் துறை சீராக இயங்கியதென்பது புலனாகின்றது.

**ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்:** ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வளர்ச்சி வீதத்தினை 5% ஆக அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. தொழில்களின் உற்பத்தி இந்தத் திட்டக் காலத்தில் சீரான நிலையில் சென்றது. வளர்ச்சி வீதம் எதிர்பார்த்ததை விட மிகவும் அதிகமாகியது. வருடாந்தர வீதம் 5% ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தும், வளர்ச்சி வீதம் 5.6 எனக் கணிக்கப்பட்டது.

## தொண்ணூறாம் ஆண்டுகளில் தேசிய வருமான வளர்ச்சி

எண்பதாம் ஆண்டுகளில் தேசிய வருமானத்தின் வளர்ச்சி நட்பு நாட்களிலுள்ளதை விட மிகவும் அதிகமாயிற்று. எனினும் 1901லிருந்து 1901லிருந்து வீழ்ச்சியடையலாயிற்று. எனினும் 1901லிருந்து வீழ்ச்சியடையலாயிற்று. 1989-90ல் தேசிய வருமானத்தின் வளர்ச்சி 6% ஆகும். ஆனால் 1990-91ல் 5.7% ஆகக் குறைந்துள்ளது.

**இந்திய தேசிய வருமானமும் தலா வருமானமும் (நடப்பு விலைப்படி)**

| வருடம் | தேசிய வருமானம் (ரூ. கோடி) | தலா வருமானம் (ரூபாய்) |
|---|---|---|
| 1950-51 | 8574 | 239 |
| 1960-61 | 14242 | 328 |
| 1970-71 | 36503 | 675 |
| 1980-81 | 110685 | 1630 |
| 1990-91 | 418057 | 4983 |
| 1991-92 | 479001 | 5596 |
| 1992-93 | 543566 | 6234 |
| 1993-94 | 615293 | 6929 |